தென்மொழி
தனித் தமிழ்
க்கியத்திங்களிதழ்
பகையே விலகுக!
ஆர்த்த முரசொடு கொம்பும் முழங்க
அருந்தமிழர்
சீர்த்தி விளங்க நெடுங்கொடி தூக்கிச்
செறுவிழிவேல்
கூர்த்த மறவர் களிற்றேறும் போந்தார்;
குலைநடுங்கிப்,
போர்த்த இருளே, பகையே, விலகுக
பொக்கெனவே!
புரட்டாசி
தி. பி. 1995.
காசு

தென்மொழி

தனித் தமிழ்
இலக்கியத் திங்களிதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 2. | புரட்டாசி தி.பி. 1995 (1964 செப்டம்பர்) | ஓலை 8.

ஐம்பதினாயிரம் கையொப்பங்கள்.

தென்மொழி கேட்டுக் கொண்டதற்கேற்ப, வடவரின் விடாப்பிடியானதும் நேர்மையற்றதுமான இந்தி நுழைப்பை எதிர்த்துத் தமிழகத்தினின்றும் வேறு சில அண்டை அயல் தென் மாநிலங்களினின்றும், மலேசியாவினின்றும் ஏறத்தாழ ஐம்பதினாயிரங் கையொப்பங்கள் கொண்ட மடல்கள் தலைமையமைச்சர் திரு. இலால்பகதூர் சாத்திரிக்கும், சென்னை முதலமைச்சர் திரு பக்தவத்சலத்திற்கும் இம் மாதத்தில் விடுக்கப் பட்டுள்ளன. இப் பெரும்பணியில் ஆங்காங்குள்ள தமிழ் மன்றங்களும், பொதுநலக் கழகங்களும், கல்லூரி மாணவர் மன்றங்களும், தனித் தமிழன்பர்களும், பிறரும் ஈடுபட்டு எந்தமிழ் அன்னைக்குக் காப்புக் குரல் கொடுத்துள்ளமை கண்டு பெருமகிழ் வெய்துகின்றோம். தாய்மொழிப் பற்றால் அன்னை நாட்டின் அருந்துயர் களையத் தமிழர் இவ்வுலகில் எந்த மூலையில்இருந்தாலும் முங்கி வீறுகொண்டு எழுவர் என்பதற்கு, மலேசியாத் தமிழன்பர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியே தக்க சான்றாம். ''நாங்கள் பிழைக்கவந்த நாடாகிய இம் மலேசியா நாட்டிலுங் கூட, எங்கள் தாய்மொழியான தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் தர அரசினர் ஒப்பிச் செயலாற்றுகையில், தமிழ் பிறந்த மண்ணில் தமிழ்க்குக் கேடு வரும்படியும் தமிழர் இனமே அழிந்து

சிறப்பாசிரியர்: புலவர், பண்டித ஞா. தேவநேயப் பாவாணர்.
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
உறுப்பாசிரியர்: தங்கப்பா, மு. சாத்தையா, செம்பியன்.
உரிமை, வெளியீடு: தாமரை, உலகமுதல்வி.
அச்சகம்: மித்திரா, கடலூர்–2.

போகுமாறும் நீங்கள் இந்தியை வலிந்து நுழைப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது" என்று மலேசியாத் தமிழ் மக்கள் இந்தி எதிர்ப்பு மடலின் இறுதியில் குறிப்பிட்டுள்ளனர். அரசினர் இதை உணர்தல் கடமை மட்டுமன்று; கட்டாயமுமாகும்.

உலகெங்கணும் ஏறத்தாழ ஏழு கோடித் தமிழர் உள்ளனர். இதில் தமிழ் நாட்டிலும் பிற தென் மாநிலங்களிலும் மட்டும் நான்கரைக் கோடித் தமிழர் உள்ளனர். இக் கணக்கும் சரியான கணக்கு அன்று. ஏனெனில் இந்தியாவின் ஒருமைப்பாடு என்னும் போலிப் புறவொற்றுமைக்கு மக்கள் தொகையினைச் சரியாகக் காட்டாமல் இருப்பதும் ஓர் அரசியல் விரகாகும். அவர் தம் கணக்குப்படி உள்ள இக் குறைந்த தொகையிலேயே, ஐம்பதினுயிரம் நடுநிலையாளர்கள் இந்தியைத் தாங்கள் விரும்ப வில்லை என்று காப்புக் குரல் எழுப்புவதென்னின், அந்நிலை அவ்வளவு எளியதன்று இந்த ஐம்பதினுயிரம் பெயரும் தங்களின் பெருமுயற்சியால் ஒன்றிணைந்து எழுவார்களாயின் அக்கூட்டத்தைத் தடுத்து விடுதலும் எளிதன்று. தனித்தமிழ் [illegible]மும் தாய்மொழிப்பற்றும் குன்றாத அவ்வுண்மைத் தமிழர்கள் இன்னும் பல்லாயிரக் கணக்கான மெய்த் தமிழன்பர்களை உருவாக்கலும் எளிதே! அவர்தம் உள்ளங்களில் ஊறிப்போயிருக்கும் அடிமை மனப்பாங்கைக் களைந்தெறிந்து விடுதலை உணர்வை ஊன்றுவதும் அவர்கட்குக்கூடுவதாகும். இந்நிலை மிக அண்மையிலேயே ஏற்படினும் வியப்பதற்கில்லை. இத்தகு சூழலை அரசினர் இப்படியே வளரவிடப் போகின்றனரா என்பதே இப்பொழுதுள்ள கேள்வியாகும்.

இத்துடன் நாம் கொண்ட இன்னொரு திட்டத்தையும் அரசினர்க்கு இக்கால் தெரிவிப்போம். ஆங்காங்கு எழுப்பப் பெற்ற நடுநிலைமையாளர்தம் ஒருமுகக் குரலை அரசினர் புறக்கணிப்பாராயின்—அவர்தம் உள்ளுணர்வையும் தாய்மொழிப் பற்றையும் எள்ளி இகழ்ந்து, இந்தி நுழைப்பில் விரைந்து தணிவு காட்ட விரும்பவில்லையாயின்—முளைத்துக் கிளைத்துக் காய்த்துக் கனிந்து காழ்த்துக் கொண்டிருக்கும் தனித்தமிழ்ப் போராட்டத்தைத் தம் வலிந்த ஆட்சி, ஆணைக் கைகளாலும், அடக்குமுறைச் சட்ட திட்டங்களாலும், சிறை, தூக்கு முதலிய தண்டங்களாலும் தடுத்து நிறுத்தி அழித்துவிட முடியும் என்று கனவு காண்பாராயின், அந்நிலையே அவர்தம் இறுதி நிலையாகும் என்று வலிந்து எச்சரிக்கின்றோம். இந்த எச்சரிக்கைக்கு அறிகுறியாக இவ்வடுத்த திட்டத்தை அவர்கள் முன்வைக்கின்றோம்

மக்கள்தம் கருத்துகளை ஆளுநர்க் குணர்த்த என்னென்ன வழிவகைகள் உண்டோ, அத்தனை முறைகளிலும் அரசினர் கைக்கொண்டு வரும் இந்தி நுழைப்பு நேர்மையற்றது என்று

எச்சரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஒரு முறையே அரசியல் சாராத நடுநிலையாளர்தம் இந்தி எதிர்ப்புக் குரலாகும். இக்குரல் ஒலிக்கும் மடல்களைக் கண்டும், அரசினர் அண்மையில் வரும் குடியரசு (சனவரி 26-ஆம்) நாளுக்குள் தம் வலிந்த நேர்மையற்ற இந்தி நுழைப்பைப் பின்வாங்கிக்கொள்ளத் தவறுவராயின், தென்மொழிக்கு வந்த ஐம்பதினாயிரம் கையொப்பங்கள் சார்ந்த மடற்படிகள் உலக நாடுகளின் ஒன்றிப்புக் கழகத்திற்கு (U. N. O.) விடுக்கப் பெறும் என்றும், அம் மடல்களின் மெய்ப்படியோடு கையொப்பங்களின் கணக்கு முறையும் இங்கிலாந்து நாட்டின் அரசியார்க்கு விடுக்கப்பெறும் என்றும் அரசினர்க்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். 'பாரத' அமைச்சர்களின் அரசியல் தீ நா ற் ற ம் அங்கெல்லாம் வீசாதவாறு, அரசுக் கட்டிலேறியவர்கள் ஆவன செய்வார்களாக. ○

மானம் வேண்டாச்
சோற்றுப் பிண்டங்கள்.

தமிழரை வடவர் சோற்றுப் பிண்டங்கள் என்றே எப்பொழுதும் கருதி வந்தனர்; வருகின்றனர். கடந்த கால உலகப் போர்களின் பொழுதுகூட, சென்னையினின்று போன தமிழர் படைகளுக்குக் கூலிப்பட்டாளங்கள் என்றே பெயர்கள் கொடுக்கப்பெற்றன. இலங்கைக் கரும்புத் தோட்டங்களுக்கும், தேயிலைத் தோட்டங்களுக்கும் கண்காணிகளால் இழுத்துச் செல்லப்பட்டவரும் அழைத்துச் செல்லப்பட்டவரும் பெரும்பாலும் தமிழ்க் கூலிகளே! அஃதாவது சோற்றுக்கு மானமிழக்கும் வல்லடிமைகளே. 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா; அன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்' என்றும் 'மானமிழந்தபின் வாழாமை முன்னினிதே' என்றும், 'பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்' என்றும், 'வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர், மானம் அழுங்க வரின்' என்றும் ஆன்றோர் பாராட்டிய மானம் இக்கால் உள்ள தமிழர்களுக்கு அறவே இல்லாது போயிற்று. தமிழர் உடம்புகளில் சூடு சொரணைகளே இல்லை; வயிறு ஒன்றே அவர்கட்கு உடம்பு! வாய் ஒன்றே அவர்தம் பொறி! சோறு ஒன்றே அவர்தம் வாழ்க்கை! இவ்வுண்மைகளைத் தெள்ளத் தெளிய விளக்கிய பெருமை இந்தியப் பேராயக் கட்சித் தலைவர் திரு. காமராசரையே சாரும். வாழ்க அவர்தம் வயிறு!

திரு. காமராசர் இந்தியாவில் உள்ள அத்தனைக் கோடி மக்களுக்கும் சோறு ஒன்றே கருதி உழைக்கும் பெருந்தகையாளர்! மானம் இழ்வந்த இடத்து உண்ணுதலையும் துறந்து உண்ணாமை மேற்கொண்டு தம் அரிய குறிக்கோளை நிலைநாட்டிய காந்தியடிகள் போற்றிப் புரந்த பேராயக் கட்சிக்குக் காம

ராசர் போன்ற மானமழிந்த சோற்றுப் பிண்டங்கள் தலைமை யேற்றது நாணத் தகுந்தது. புழு முதல் யானை வரை உள்ள உயிர்கள் யாவினுக்கும் சோறே தலை என்று சொல்லித்தர வேண்டியதில்லை அச் சோற்றைத் தேடி உண்ணாத உயிர்களே இல்லை. சோறு கிடைக்காதவிடத்து உயிர்களுள் ஒன்றை யொன்று கொன்று தின்னவும் அவை தயங்குவதில்லை. இப் பெருந் தேவையை அவ்வுயிர்கள் புறக்கணித்தாலும் அவர்களுடனேயே ஒட்டிக்கொண்டிருக்கும் வயிறுகள் புறக்கணிப்பதில்லை. வயிற்றுக்காகவே ஓடி ஆடி உழைக்கின்றன அவ்வுயிர்கள். அவ் வயிறுகளின் சார்பில் இப்பொழுது காமராசர் பேசத் தொடங்கியுள்ளார்.

'மக்களுக்குச் சோறே பெரிது; மானம் பெரிதில்லை' என்ற அரிய உண்மையை அண்மையில் அவர் வெளியிட்டுள்ளார். பின்னை ஏன் கல்வி வேண்டும் என்றும், தொழிற்சாலை கட்ட வேண்டும் என்றும் அரும்பாடு படுகின்றார்? அவற்றிலா சோறு விளைகின்றது? புகை வண்டித் தொடர் எதற்கு? திரைப்படக் கொட்டகைகள் எதற்கு? கல்லூரிகள் எதற்கு? நாட்டைக் காவல் செய்யப் படைகள் எதற்கு? சீனன் வந்தால் என்ன? பாக்கித்தானியன் வந்தால் என்ன? அமெரிக்கரோ, உருசியரோ ஆண்டாலென்ன? நமக்கு வேண்டியது சோறுதானே? வேட்டி சேலை கூட வேண்டியதில்லையே! இந்தி நுழைப்பு எதற்கு? ஆங்கில எதிர்ப்பு எதற்கு? தேர்தல் எதற்கு? சோறு வேண்டுமானால் நெய்வேலியில் நிலக்கரியைத் தோண்டுவதை விட்டுவிட்டுப் பாதை, படுகுழிகள் எல்லாவற்றிலும் நெல்லைத் தூவலாமே! ஒவ்வொருவருக்கும் ஏர், கலப்பை, ஆடு மாடுகளே போதுமே! வானளாவும் கட்டடங்கள் எதற்கு? குடிசைகள் போதாவா ஒண்டிக் கொள்ள? ஒழுக்கம் எதற்கு? சட்ட திட்டங்கள் தாம் எதற்கு? அவரவர் விருப்பப்படி அவரவர் விளைவித்து அவரவர் உண்டு, உறங்கி வழலாம் என்ற ஒரே சட்டம் போதுமே! மது விலக்கு வேண்டாவே! கதர்க்கொடி வேண்டாவே; பேராயக் கட்சி வேண்டாவே! காமராசரும் தேவையில்லை; கக்கன் தேவையில்லை; பதினைந்து இருபது ஆண்டுகளாய் அமைச்சரவை நாற்காலியை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் பக்தவத்சலத்தை உடனே வெளியேற்றிவிடலாமே! எதிர்க்கட்சித் தலைவர்களையெல்லாம் விடுதலை செய்துவிடலாமே! அட, காமராசரே! உலகத்தில் உயிர்கள் என்று தோன்றியனவோ, அன்றிலிருந்து சோறு சோறு என்றே அவை அலைகின்றன. எல்லா உயிர்களுக்கும் இயல்பாக உள்ள நாட்டம் அது! காதல் செய்யவும் ஆடவர் பெண்டிர் இணையவும் எப்படிக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லையோ அப்படியே சோற்றைத் தேடவும் உண்ணவும் எந்த உயிர்க்கும் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. அம் முயற்சிக்குத் தடையில்லாதவாறு பெரிய பெரிய குமுகாய

முதலைகளைக் கட்டுப்படுத்த வேண்டியதே அரசினர் கடமை! அதற்காகவே மக்கள் அரசாட்சியினை அமைத்துக்கொண்டனர். சோறே பெரிதென்று உயிர்க் கூட்டங்களின் தோற்றத்துள் மிகச்சிறந்த படைப்பாகிய மாந்தப் படைப்பைப் புழுவோடும், காக்கை குருவிகளோடும் ஒன்றுக்க வேண்டா. அவற்றிலிருந்து மாந்தனைப் பிரித்ததும் பிரிப்பதும் உயர்த்துவதும் மான உணர்வே! மான உணர்வு வந்த பின்தான் மாந்தன் உடை கட்டத் தெரிந்தான்; அறிவு பெற்றான். வாழ்க்கைப் பயனை நுகர்ந்தான். இந்த எளிய உண்மையைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத காமராசரின் அறியாமைக்கு இரங்குகின்றோம். அவர்க்கு இன்னொரு வேண்டுகோளும் விடுக்கின்றோம். மக்கள்மேல் இரக்கம் கொண்டு அவர் இவ்வாறு கூறியிருப்பாராஞல், அவர் தம் செல்வாக்கு முழுவதையும் பயன்படுத்தி அவர் வாழ்க்கைக்குள் ஒன்றைச் செய்ய வேண்டும்! அஃது இது. இந்தியாவில் உள்ள எல்லாரையும் உழைக்கச் செய்ய வேண்டும்; எல்லா உடைமைகளையும் பொது உடைமையாக்க வேண்டும்; பேராயக் கட்சி ஒன்றேதான் ஆட்சியாளத் தகுந்தது என்று போலிப் பெருமை பேசாமல் தகுதியான அறிஞர்களையும், மக்கள் தொண்டர்களையும் கூட்டி, வல்லாண்மை படைத்த திமிங்கிலங்களையும் மக்கள் உழைப்பை உறிஞ்சும் முதலைகளையும் எப்படி ஒழித்துக் கட்டுவது என்று ஆய்ந்து செயலாற்றல் வேண்டும். அவ்வாறின்றி அவர் வெறும் சோறு சோறு என்று மேலும் கத்திக் கொண்டிருப்பாராஞல், அந்தப் பாட்டை உருசியாவிலோ, அமெரிக்காவிலோ போய்ப் பாடிக் கொண்டிருக்கலாம். அப்பொழுதாவது அவர் ஏந்தித் திரியும் அரசியல் திருவோட்டில் எச்சில் சோறு வந்து குவியும். இதனை அவர் செய்வாரா? ✻

தமிழை ஒழித்துக் கட்டும்
தமிழ்க் கல்லூரி!

திருவையாற்று அரசர் கல்லூரி முதல்வர் வடமொழி வெறி கொண்டலைவதாகவும், அங்குப் படித்துவரும் தமிழ் உணர்வுள்ள மாணவர்களுக்குப் பல்வாறன கேடுகளை அவர் செய்வதாகவும் கேள்விப்பட்டு நெஞ்சம் துணுக்குற்றோம். தென்மொழி பயிலும் மாணவர்களை அவர் நேரில் அழைத்துக் கண்டிப்பதாகவும், விடுதியிலிருந்து விலக்கி விடுவதாக அச்சுறுத்துவதாகவும் அறிகின்றோம். வடமொழி பயிலும் மாணவர்களுக்கே எல்லா வகையான வாய்ப்புகளையும் செய்து கொடுக்கின்றாராம் அக் கல்லூரி முதல்வர். தமிழ் பயில வரும் மாணவர்களை வடமொழி (சமற்கிருதம்)கற்குமாறு வற்புறுத்துவதோடு, வடமொழி பயிலப் போதிய மாணவர்கள் வராவிடில், விடுமுறை நாட்களில் தெருத்

தெருவாய் வீடு வீடாய்ச் சென்று, வடமொழி பயில்வதற்கென மாணவ மாணவிகளை அழைத்து வருகின்றாராம். அவர்கள் விடுதியில் தங்கிப் படிக்க விரும்பாவிடின், அவர்தம் வீடுகளிலேயே தங்கிப் படிக்கலாம் என்றும், அதனால் அவர்களுக்கு உதவித் தொகைகள் தரப்பெறுமென்றும், கல்விக் காலம் முழுமையும் அவ்வாறிருக்க விரும்பாவிடினும் இடையில் விரும்பின் நின்று போகலாம் என்றும் பலவாறாக விருப்பங் காட்டி வடமொழிக் காதல் நாடகமாடும் அவர், தமிழ் மாணவர்களை அவ்வாறுவிட ஒப்புவதில்லையாம். ஏழு தமிழ்ப் பேராசிரியர் இருந்த கல்லூரியில் இப்பொழுது நான்கு பேராசிரியர்களே பணியாற்றுவதும், அவர்களும் தமிழ் வகுப்புகளையே சரிவர நடத்துவதில்லை என்பதும், தமிழ்ப் பற்றுள்ள ஆசிரியர்களையும் அவர் விரும்புவதில்லை என்பதும் இன்னும் பிறவும் அவரால் நடந்து வரும் கேடுகள்! பண்டைய அரசர்கள்பால் நிலக்கொடை பெற்றுப் பார்ப்பனர் தலைமையின்கீழ் இயங்கும் தனிப்பட்டார் கல்வி நிலையங்களில் பெரும்பாலும் இத்தகைய நிலையே உள்ளது. அரசினரும் இந் நடவடிக்கைகளைப் புறக்கணிக்கும் நிலை கண்டு மிகவும் வருந்துகின்றோம். இத்துறையில் போதிய நடவடிக்கை எடுக்காமையால், அத் தலைவரைக் கண்டித்து மாணவர்கள் அண்மையில் ஒரு போராட்டத்தை நடத்தியுள்ளனர். இதுபற்றிய முழு விளக்கத்தையும் தேவையிருப்பின் பின்னர் வெளியிடுவோம். அவ்விரிவான அறிக்கைக்கு முன் வடமொழிப் பித்தரான அக் கல்லூரி முதல்வருக்குத் திருந்திக் கொள்கின்ற ஒரு நல்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றோம்.

தென்மொழித் தொகுப்பு.

தென்மொழி பழைய தொகுப்பு (சுவடி 1) ஒருபடி தானும் கையயமில்லை. அன்பர்கள் இதற்கென பணம் விடுக்கவேண்டா.

ஆசிரியர்.

நன்றி.

தனித்தமிழ் அன்பரும், தென்மொழி புரக்குநருமாகிய, திரு. மகிபை. பாவிசைக்கோ ஆவணி, புரட்டாசி மாதங்களின் அன்பளிப்பாக உருபா இருபது விடுத்துள்ளார். அவர் அருளும், கடமையும் பொருந்திய பேருள்ளம் வாழ்க.

திருத்தம்: பக்கம் 15. நான்காம் பாடல், ஐந்தாம் வரி: 'பெண்ணுலகாய்' என்றிருப்பதனைப் 'பொன்னுலகாய்'என்றும், பக்கம். 34. வரி 23: 'முன்னூறு' என்பதனை 'முன்னுறு' என்றும் திருத்திப் படிக்க.

என் அண்ணாமலைநகர் வாழ்க்கை.

பணிசெயற்படலம் - முதற் பகுதி

நான் சேலங் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவனும் பேராசிரியனுமாயிருந்தபொழுது, 1956-ஆம் ஆண்டு 6-ஆம் மாத இறுதியில், 26-6-1956 என்னும் பக்கல்(தேதி) இட்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. மீனாட்சிசுந்தரனாரிடமிருந்து எனக்கு வந்த அமர்த்தோலையில், பல்கலைக்கழக ஆசிரிய ஊதியம் பற்றிய நெறிகட்கு உட்பட்டு, 250-25-500 உருபா என்னும் சம்பளத்திட்டத்தில் மாதத்திற்கு 250 உருபாவும் அரசியலார் விழுக்காட்டுப்படி அருந்தற்படியும் பெறுமாறு, மொழி நூல்துறையில் வாசகன் என்னும் துணைப் பேராசிரியனாக ஓராண்டிற்கு நான் ஆய்வு நிலையில் அமர்த்தப் பட்டிருப்பதாகவும், தமிழாராய்ச்சித் துறைத் தலைவரிடம் சென்று வேலையை ஒப்புக்கொள்ளும்படியும் குறித்திருந்தது.

அதையடுத்து 6-7-1956 என்னும் பக்கலிட்டு வந்த திருமுகத்தில், நான் பதிவாளரிடம் சென்று வேலையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும், மொழி நூல் துறைத் தலைவராகப் பேராசிரியர் ஒருவர் அமர்த்தப் பெறுவாரென்றும், அத்துறை வேலையை வழிப்படுத்தப் பெயர்பெற்ற தமிழறிஞரைக் கொண்ட ஒரு குழுவும் அமைக்கப் பெறுமென்றும், குறித்திருந்தது யார் யார் அக் குழுவுறுப்பினர் என்பது அன்று தெரிந்திலது. ஆயினும், ஒருசிலரை உய்த்தறிந்து கொண்டேன்.

எனக்கு அ. ம. ப. க க. வேலையமர்த்தம் கல்வியாண்டு தொடங்கிய பின் ஆனதினால், பள்ளிகளிற் சேர்ந்து படித்துக் கொண்டிருந்த என் மக்களை உடன்கொண்டு செல்லவியாலாமல், அண்ணாமலை நகருக்குத் தனித்தே செல்ல நேர்ந்தது. சேலம் நகராண்மைக் கல்லூரியினின்று விடுவிப்புப் பெறச் சின்னாட் சென்றுவிட்டமையால், 12-7-56 அன்றே அ. ம. ப. க. க. வேலையை ஒப்புக்கொள்ள இயன்றது.

மொழிப் பெரும் புலவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எம்.ஏ.

அண்ணாமலைநகர் சென்றவுடன் பல்கலைக்கழக வீடு எனக்குக் கிடைக்கவில்லை. அது கிடைக்கும் வாய்ப்பு, பேராசிரியர், துணைப்பேராசிரியர், விரிவுரையாளர் ஆகிய முத்திறத்தார்க்கும், முறையே, தலையிடை கடையாம். எனினும், துணைக் கண்காணகர் திரு. நாராயணசாமியார் கண்ணோட்டத்தாலும் பதிவாளர் அன்பாலும், விருந்தினர் விடுதியில் எனக்கு ஏந்தான (வசதியான) இடங் கிடைத்தது. அதோடு ஒரு கிழமைக்குள், கொற்றவன்குடி விரிவுரையாளர் குடியிருப்பு வரிசையில் 7-ஆம் எண் உறையுளும் எனக்கு ஒதுக்கப்பட்டது. அது வெறுமையானவுடன் அதிற் குடியமர்ந்து கொண்டேன். ஓராண்டு தனித்திருக்க நேர்ந்ததினாலும், உண்டிச்சாலை யுணவு என் உடம்பிற் கொவ்வாமையாலும், முதலாண்டு முழுதும் நானே சமைத்துண்டேன். கைச் சமையல் உடல் நலத்திற்கேற்றதேனும், நான் விரும்பியவாறு முழு நேரமும் பல்கலைக் கழகப் பணிக்குச் செலவிட முடியாது போயிற்று. 12-9-1956 அன்று துணைக்கண்காணகரிடமிருந்து ஓர் ஓலை வந்தது. அதன் உள்ளடக்கம் (மொழி பெயர்ப்பு) வருமாறு:-

"இப் பல்கலைக் கழகத்திற் புதிதாய் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பியல் மொழித் துறையைச் சேர்ந்த வாசகர்க்கு அறிவுரை கூறவும், வழி காட்டவும், அவர் பணியைப்பற்றி உசாவவும் ஒரு திறவோர்குழு இப்பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ளதென்று நான் கூறவேண்டியுளது. அக் குழுத்தலைவர் காளிக்கோட்ட மேலை வங்கச் சட்ட மன்றத் தலைவர் பண்டாரகர் (எசு. கே.) சட்டர்சி. இப் பல்கலைக் கழக ஒப்பியல் மொழித் துறை வாசகரான திரு. ஞா. தேவநேயப் பாவாணர், அக் குழுவின் உறுப்பினரும் செயலாளருமாவர். ஏனையுறுப்பினராவார்:-

பண்டாரகர் (எசு எம்.) கத்திரே, (எம். ஏ., பிஎச். டி), இயக்குநர், தெக்காணக் கல்லூரி, பட்டக் கல்விப் பின்னை ஆராய்ச்சிக்களரி, பூனா-6.

திரு. (ஏ.) சுப்பையா அவர்கள், துணைத்தலைவர், தமிழ்ப் பண்பாட்டுக் கலைமன்றம், தெர்லிங் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை.

பேரா. ரா. பி. சேது அவர்கள் (பி ஏ., பி. எல்.), தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

பேரா. லெ. பெ. கரு. இராமநாதன் அவர்கள், பண்டித வித்துவான், தமிழ்ப் பேராசிரியர் (கீழைக்கலை), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

ப. அ. சிதம்பரநாதன் அவர்கள், (எம். ஏ; பிஎச். டி.), தமிழ்ப் பேராசிரியர் (கலைத்துறை) அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர்.

பேரா. கோ. சுப்பிரமணியனார் (எம். ஏ; பி. எல்.), தமிழ்ப் பேராசிரியர் (ஆராய்ச்சித்துறை), அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.

பேரா. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் (எம். ஏ; பி. எல்; எம். ஓ. எல்.), தலைமைத் தமிழ்ப் பேராசிரியர், மண்டலக் கல்லூரி, சென்னை.

திரு. (தி. என்.) சீகண்டையா (எம். ஏ.) கன்னடப் பேரா சிரியர், கன்னடப் பல்கலைக் கழகம், தார்வார். (கன்னடம்)

திரு. கொரடா இராமகிருட்டிண ஐயா, மே/பா மகாதேவ சாத்திரி, 33 சங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 (தெலுங்கு)

திரு. (எம். பி.) நாராணமேனன், (பி. ஏ.), அடங்காப் பள்ளிகளின் ஓய்வுபெற்ற தலைமை உண்ணோட்டகர், 43. நந்த னார் குடியேற்றம், சைதாப்பேட்டை, சென்னை 15 (மலையாளம்)

நீர் இக்குழுவில் உறுப்பினராயிருக்க ஒப்பி இப் புதுத் துறைப் பணிக்கு உம் அரிய பட்டறிவைக் கொண்டு உதவி நலம் புரியுமாறு உம்மை வேண்டுகின்றேன். இக்குழு சென்னை யிலாவது அண்ணாமலை நகரிலாவது தேவைக்கேற்ப அடிக்கடி கூடும். அக் கூட்டங்கட்கு நீர் செல்வதற்கு, இப் பல்கலைக் கழக நெறிப்படி உமக்கு வழிச்செலவுப்படி தரப்படும்.

அக்குழுவில் உம் உறுப்பாண்மையை இயன்ற விரைவில் ஏற்றுதவுமாறு வேண்டிக் கொள்கின்றேன்."

இங்ஙனம் என் இசைவை வேண்டுவதுபோல் எழுதப்பட் டிருந்ததேனும், எல்லாத் திட்டங்களும் அமைப்புக்களும் என் அதிகாரத்திற்கு அப்பாற் பட்டவையென்றும், அவற்றிற்கெல் லாம் வினை முதல்கள் அ. ம. ப. க. க. மொழி நூல் துறையை அரக்கர்போல் ஆட்டிவைக்கும் இருதமிழ்ப் பேராசிரியரென்றும், உணர்ந்து கொண்டேன். ஆதலால், அ. ம. ப. க. க. வில் பணியாற்ற வேண்டின், ஆரியத் தலைமையையேற்றுத் தமிழைக் காட்டிக் கொடுத்தல் தவிர மற்றெல்லா நிலைப்பாடுகட்கும் இணங்கியே ஆகல் வேண்டும் என்னும் முடிவிற்கு வந்துவிட் டேன். குழுவுறுப்பினர் பன்னிருவருட் பெரும்பாலார் ஆரியச் சார்பாயிருத்தலின், பர். அரசமாணிக்கனாரையும் பர். மு. வ. வையும் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளுமாறு துணைக் கண் காணகரை வேண்டினேன். அவர்களும் இசைந்தார்கள். ஆயி னும், நான் எதிர்பார்த்தவாறு என் கை வலியுறவில்லை. ஆரியம் அத்துணை ஓங்கியிருந்தது. புதிதாய் இருவர் சேர்க்கப் பெற்ற தினாலோ, பிறிதொரு கரணியத்தாலோ, பின்னர் மற்றியமைக்

கப்பட்ட குழுவில் திரு. கொரடா இராமகிருட்டிண ஐயாவும் திரு. நாராயண மேனனும் இடம் பெறவில்லை. சென்னை மண்டலக் கல்லூரிச் சமற்கிருதப் பேராசிரியர் திருஞானசம்பந்தனா (எம். ஏ.), ஒரு புத்துறுப்பினராயினர்.

மொழி நூல் துறையின் முதற்பணி தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் தொகுப்பென்று விளம்பரஞ் செய்யப்பட்டிருந்ததேனும், குழு ஆற்றுப்படுத்தியவாறே என் பணி நடைபெறல் வேண்டுமென்று அமர்த்தோலைப் பின்னிணைப்பிற் குறிக்கப்பட்டிருந்ததால், குழுக்கூடும் வரை அப்பணியில் ஈடுபட என்னால் இயலவில்லை. ஆராய்ச்சித் துறைக் கூடத்தில் மொழி நூல் துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடமும், ஒரு நாற்காலியும் ஒரு நிலை மேடையும் (மேசையும்) தவிர வேறொன்றுமில்லாமலும், ஒரு நெடும்பக்கம் மறைப்பின்றியும், இருந்தது.

பன்னாட்பின் 8-4-1957 அன்று, அ. ம. ப. க. க. திரவிட மொழி நூல் துறைத் தொடக்கக் கூட்டம் நடைபெற்றது. பேரா தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தவிர உறுப்பினர் அனைவரும் வந்திருந்தனர். தலைவர் பர். சட்டர்சி விரிவான தலைமையுரையொன்று நிகழ்த்தினார். கூட்டம் முழுதும் ஆங்கிலத்திலேயே நடைபெற்றது. செயலாளர் என்ற முறையில், நான் ஓர் அறிக்கை யெழுதிப் படித்தேன். தலைவர் தம் உரையிடையே, "ஒவ்வொரு நாட்டிலும் நாகரிகம் அந்நாட்டு மொழியோடு தொடர்புள்ளது. இந்திய நாகரிகமெல்லாம் சமற்கிருத இலக்கியத்திலேயே எழுதப்பட்டுள்ளது. ஆதலால், இந்திய நாகரிகம் ஆரியரதே." என்று கூறியதால், என் அறிக்கையையொட்டி, "இந்திய நாகரிகமெல்லாம் முதன் முதல் தமிழிலக்கியத்திலேயே எழுதப்பட்டிருந்தது. அவ்விலக்கியம் முழுதும் இறந்துபட்டபின், அதன் மொழி பெயர்ப்பான சமற்கிருத இலக்கியமே மூலம்போற் காட்சி யளிக்கின்றது. ஒரு புகைவண்டி வழிப்போக்கன் கையிற் சீட்டில்லாவிடின், அம்மட்டிலேயே அவன் சீட்டு வாங்காமற் செல்பவன் என்ற முடிவு கொண்டுவிட முடியாது. ஒருகால் சீட்டுத் தவறிப் போயிருக்கலாம்; அல்லது அடுத்தவன் திருடியிருப்பான்." என்றுரைத்து அவர் கூற்றை மறுக்க வேண்டியதாயிற்று.

கூட்டம் முடிந்தபின், பர். சட்டர்சி புன்னகையுடன், "திருவாளர் தேவநேயரீர்! நீர் அந்தச் சீட்டைக்காட்ட வேண்டும்." என்று விளையாட்டாகவும் வினையாகவும் சொன்னார். "நான் சீட்டுக்காட்ட முடியாது; ஆயின், சீட்டு வாங்கியதற்குச் சான்று காட்ட முடியும்" என்று செப்பினேன். அவர் உள்ளத்திற் கள்ளமற்றவர்தான். ஆயின், தமிழைப்பற்றி அவருக்குத் தெள்ளிய அறிவில்லை. இதற்குத் தலைமைத் தமிழ்ப்

(76-ஆம் பக்கம் பார்க்க)

பட்ட மரம்.

திங்களிலா ஒருநாளில் ஊர்துயின்ற பின்னை,
    தீயவரும் உள்நடுங்கும் வல்லிருளில், உள்ளம்
முங்கிவரும் பேருணர்வால் எழுந்துநட மாட,
    மொய்த்ததுயில் கலைந்தெறிந்து கடற்கரையை நண்ணி,
கங்குவிட்ட பெருவானம், நெடுங்கடல்,விண் மீன்கள்
    கண்டுகண்டு மகிழ்ந்திருக்கும் நல்லின்பப் போழ்தில்,
பொங்கிவரும் வாங்கலைக்குள் ஆங்கொருவன் பாயப்
    போகையிலே ஓடோடி நான்தடுத்து நின்றேன்.

நின்ற,எனை நோக்கி,அவன் விம்மியுளம் நொந்தான்!
    நெட்டுயிர்த்து நெடுந்தரையில் வீழ்ந்தறைந்து கொண்டான்;
ஒன்றுமறி யாதவனாய், 'என்ன'வென்று கேட்டேன்;
    'ஓ'வென்றான்; 'ஆ'வென்றான்; 'ஏன்தடுத்தீர்' என்றான்.
'நன்றுகொலோ நின்செயலும்; தற்கொலைசெய் மாறு
    நடந்ததென்ன? கூறிடென்றேன்; அவனழுது பொங்கி,
'கொன்றுகொள்ள வந்தவன்யான்; கொடுந்துயரம் பட்டேன்;
    கூறுகிலா இழிவெனக்கு வந்ததெனச் சொன்னான்.

''தீக்காட்டின் நடுவினிலே, எரிமலையின் உள்ளே,
    திக்கறியாக் கடல்நடுவில், இருட்சுழலின் ஊடே,
நோக்காட்டின் துயர்மழையில் வீழ்ந்ததுபோல் என்றும்
    நொடிக்குநொடி தாழ்ந்திழியும் புல்லியரின் உள்ள
வேக்காட்டைத் தாளாமல், தொல்லைபொறுக் காமல்,
    விம்மியழும் நெஞ்சத்தைத் தணிக்கவிய லாமல்,
சாக்காட்டின் மடியினிலே தலைசாய்க்க வந்தால்
    சாகும்முன் நீங்களெனை ஏன்தடுத்தீர்'' என்றான்.

''கடும்புயலில், வெம்பசிகொல் வல்வேங்கை முன்றில்,
    கவுள்நனைய மதம்பெருக்குந் தனிக்களிற்றின் சூழ்வில்,
கொடும்பாம்பின் உடல்நெருக்கில், கொதிக்கின்ற நெய்யின்
    கொப்பரையுட் பட்டதுபோல் கொடுங்கயவர் செய்யும்
அடும்பகைமை தாளாமல், உயிருடலங் காய்ந்தே
    அறுத்தெடுக்கும் துயர்அரத்தை நிறுத்தவிய லாமல்
நெடுந்துயிலின் நல்லணைப்பில் அமைதியுற வந்தால்
    நேர்வதன்முன் நீங்களெனை ஏன்தடுத்தீர்'' என்றான்.

துரை-மாணிக்கம்

"பிறப்பென்னும் கண்விழித்த நாள்முதலா உள்ளப்
பீடழிக்கும் கீழ்மையரின் குடியிருப்புக் குள்ளே
சிறப்பென்னும் வாழ்க்கையிலே ஒருதுளியுங் காணுச்
சிறுமைமிகு நெடுந்துயரின் குத்தல்பொறுக் காமல்—
மறப்பென்னும் உளத்தூக்கம் தூங்கமுடி யாமல்—
மனத்திருக்குஞ் சுமையிறக்கும் வகையையுண ராமல்
இறப்பென்னும் மாளிகையில் கண்துயில வந்தால்
இறந்திடுமுன் நீங்களெனை ஏன்தடுத்தீர்" என்ருன்.

"சூழ்ந்திருக்கும் பெருந்துயருள், நெருஞ்சிமுள்ளின் காட்டுள்,
சுட்டெரிக்கும் வெயில்நெருப்புள் புகலிடத்தைத் தேடி
வாழ்ந்திருக்க முடியாமல்—வழிவகைகா ணுமல்—
வம்புரைக்கும் கள்ளரவர் நெம்புரைக்குள் மேலும்
ஆழ்ந்திருக்க வியலாமல்—ஆவியினைப் போக்க,
அணுவணுவாய் உளந்துணிந்தே, கடல்நடுவில் தாவி
வீழ்ந்திறக்கும் மகிழ்ச்சியிலே நான்முழுக வந்தால்
வீழ்வதன்முன் நீங்களெனை ஏன்தடுத்தீர்" என்ருன்.

என்றவனைத் தேற்றி அவன் தோளினில்கை சார்த்தி
'என்னருமைத் தமிழ்மகனே, வருகவெனக் கூட்டிச்
சென்றவனை முன்னமர்த்தி, அருகமர்ந்து தேற்றி,
"செந்தமிழ்த்தாய்த் திருமகனே, நின்துயரம், மானம்
குன்றளவு பெரிதெனினும், வானினுயர் வெனினும்,
கோழையென மாய்ந்தெழிதல் யார்க்குநலஞ் செய்யும்?
இன்றுனது பேரிழப்பால் எவர்வருந்தப் போவார்?
எத்தனைநாள் நின்வருத்தம்? எண்ணிப்பார்" என்றேன்.

"இனித்திருக்கும் வாழ்க்கையன்றிங் கிருக்கின்ற யார்க்கும்;
எதிர்வரும்ஒவ் வொருநொடியும் துன்பப்போ ராட்டம்!
பனித்திருக்கும் மென்மலரை அகப்புறக்காம் பாய்ந்து,
பஞ்சணையில் தூவியுடல் சாய்ந்திருப்பார் தாமும்,
துனித்திருக்கும் பெருந்துயரால் உளம்புழுங்கு கின்ருர்!
துன்பமெனும் குளிர்காற்று யாரைவிட்டு வீசும்?
தனித்தொருவன் சாவதனுல் துயர்விலகல் இல்லை;
தாங்குபவன் எவனவனே நல்லின்பம் கண்டான்"

"முன்வைத்த முதலில்,கண் வைத்தார்கை வைக்க,
முதிர்வுள்ளம் வையாமல் உயிர்வையார் கோடி!
மின்வைத்த இடைவைத்தாள் மனம்வையா மைக்கே,
மெய்வைத்த நல்லுயிரைப் போட்டுடைப்பார் கோடி!
பொன்வைத்த நினைவினராய்ப் பொய்வைத்த வாழ்வில்
புகைவைத்துக் கொண்டவர்கள் எண்ணிறந்த கோடி!
மன்வைத்த உயர்நினைவை மனம்வைத்து நிற்கும்
மாந்தரினம் என்வைத்திங் கென்னபயன்" என்றேன்.

"துன்பமெனும் பெயரொன்று; வல்லுருவம் கோடி!
துயர்க்கென்றும் வருந்தாமல், உள்ளஞ்சோ ராமல்,
தன்புதுநோக் கொன்றினையே நோக்கிப்போ வார்க்குத்
தாங்குகிலாத் துயரென்றிவ் வுலகெங்கும் இல்லை;
இன்பமென ஒன்றினையே குறிக்கோளாய்க் கொள்வார்
இம்மியதில் குறைந்தாலும் தாங்குகிலார் துன்பம்!
மன்பதையின் விளைவெல்லாம் இன்பமடா இன்பம்!
மற்றதற்குத் துன்பமெலாம் உள்ளப்பே ராவல்!"

"உழைப்புண்டு; திறமுண்டு; மெய்வருந்தில் என்றும்
உற்றவிளை வுண்டதனால் உய்வுண்டு யார்க்கும்;
பிழைப்புண்டு; வாழ்வுண்டு; பேரின்பம் உண்டு;
பிறைநுதலார் உளம்பொங்கிக் கயல்விழியால் வெள்வும்
அழைப்புண்டே; அன்புண்டே; அறவாழ்க்கை உண்டே!
ஆரெவர்க்கும் கரவாத மெய்வாழ்க்கை தோன்றின்
தழைப்புண்டு மாந்தர்க்கே; தற்கொலையா வாழ்க்கை?
தனியொருவன் உயிர்குடித்தால் கடல்வற்றிப் போமோ?

"தாங்குகிலாத் துன்பமென நீபுலம்பு கின்றாய்!
தந்தைதாய் மாண்டனரா? மனைவியுமாண் டாளா?
வாங்குகிலா வருத்தமென நீயழுங்கு கின்றாய்!
வளர்த்தமகன் செத்தானா? தம்பியிறந் தானா?
தூங்குகிலாத் துயரமென நீயரற்று கின்றாய்!
தோழனை நீ இழந்தனையா? ஈங்கிவர்யா ரேனும்,
நீங்கிடுநின் குற்றுயிரால் மீண்டிடுதல் உண்டா?
நின்னிறப்பால் என்னபயன் நேர்ந்திடப்போம்?" என்றேன்.

'ஏறிவரும் நின்துயரம் என்னுருவா கட்டும்;
இடர்ப்பாட்டை நல்லறிவால் நின்றெதிர்த்தே, உள்ளம்
வீறிவரும் நல்லுணர்வைக் கொண்ட,உயர் வாழ்க்கை
விளங்கிவரு மாறுபிறர்க் கெடுத்துரைத்துத், தீமை
நாறிவரும் மண்ணுலகைப் பெண்ணுலகாய்ச் செய்யும்
நல்லபணி யொன்றினுக்கு நினையாக்கிக் கொண்டால்,
ஆறிவரும் நின்துயரம்; ஊறிவரும் இன்பம்!
அனைத்துயிரும் நின்தொண்டால் மாறிவரும் அன்றோ?"

"தான்பிறந்த நாட்டுக்கும், தாய்மொழிக்கும் செய்யும்
தனித்தொண்டே தலைத்தொண்டாம்; பொதுத்தொண்டு செய்யார்
மான்பிறந்த கூட்டத்துள் பன்றிபிறந் தாற்போல்,
மயில்பிறந்த குழுவில்வான் கோழிபிறந் தாற்போல்,
கான்பிறந்த அகிற்காட்டில் கள்ளிமுளைத் தாற்போல்,
கடல்பிறந்த சிப்பிக்குள் பாசிபிறந் தாற்போல்,
ஏன்பிறந்தார் எனமக்கள் எண்ணிடுவார் ஆக,
எவ்வுயர்வும் சேர்கிலராய் வீணழிவார்" என்றேன்.

"ஆகையினால், தமிழ்மகனே, செந்தமிழ்நற் றாய்க்கும்,
அன்றலர்ந்த தமிழ்நாட்டின் வாழ்வினுக்கும் உன்னை
ஈகையெனத் தந்துவிடில், நினக்குற்ற துன்பம்
எரியிரும்பின் முன்னர்வரும் ஈக்கூட்டம் போலாம்!
சாகையிலும் தண்டமிழை வாழவைத்துச் சாவாய்!
சாகாத பெரும்புகழைக் காவலிட்டுப் போவாய்!
வேகையிலும் நின்னுடலம் தமிழ்மணந்து வேகும்!
வெற்றுயிரும் செந்தமிழால் ஒளிசிந்திப் போகும்!"

"தொடர்ந்துவரும் பெரும்புயலால் ஒளிமழுங்கு மணிபோல்,
தொல்தமிழ்க்குச் சேர்ந்ததுகள் துடைத்தெடுத்து, மேன்மேல்
படர்ந்துவரும் பிறமொழியாம் வல்லிருளைப் போக்கிப்,
பரவிவரும் அறிவியலால் பட்டைபல தீட்டிச்,
சுடர்ந்தொளிசேர் மாமணியாய், உளவிளக்காய் மெய்ம்மைச்
சூடேற்றி மருள்உலகில் உலாவரவும் விட்டால்,
அடர்ந்துபிற மொழியனைத்தும் ஏவல்செய் யாவோ?
அனைத்துலகும் செந்தமிழ்க்குக் காவல்செய் யாதோ?"

"செத்தொழியும் எண்ணத்தைக் கழற்றியெறி" என்றேன்;
"சீர்சுமந்த தமிழ்த்தொண்டைப் பூணுகநீ" என்றேன்;
"மத்தொழித்துத் தயிர்கடைதல் இல்லையடா இல்லை;
மனம்நீக்கி உயிர்கடைதல் என்னபயன் செய்யும்?
வித்தொழிந்து விளைவுண்டோ? தமிழ்வித்தை ஊன்றின்
விளைவதெல்லாம் நல்லொழுக்கம், வாய்மை,அறம்,அன்பே!
முத்தமிழை மெய்யுணர்வாம் உருப்பெருக்கி கொண்டே,
முன்னிநிலை ஆய்ந்தவர்கள் காணுநிலை ஈதே!"

"உயிர்கசந்த செந்தமிழா, உனக்கொன்று சொல்வேன்:
ஊழ்க்கின்ற நல்லுயிரைச் செந்தமிழ்க்கென் றூழ்க்க!
பயிர்போலும் காய்ந்ததது, தொண்டுமழை யின்றி;
பகலிரவாய், தெருத்தெருவாய், ஊர்ஊராய்ச் சென்றே,
அயர்வின்றிச் செந்தமிழ்த்தொண் டாற்றுக;நின் தொண்டால்
அடிகாயா முடிகாய்ந்த தமிழ்ப்பயிரும் வாழும்!
துயர்காணின் பேருவப்பால் தோள்தாங்கிக் கொள்வாய்!
தொல்பெருமை அகழ்ந்தெடுப்பாய்;புகழ்வாரிச் செல்வாய்!"

என்றபடி யானுரைக்க அவனிருந்து கேட்டான்;
இறங்கிமுகந் தூக்கியென்னை ஏறிட்டுப் பார்த்தே,
"குன்றுபடி யாயிருந்த நல்லுணர்விங் கென்பால்
கூர்த்தபடி உயர்ந்ததுவே குளறுபடி யின்றி!
இன்றொருநாள் வாழ்க்கையிலே இறந்தெழுந்த நாளாம்!
இருள்வழிச்செல் மருள்மதிக்கே அருள்மொழிதந் தீர்கள்!
நன்றுசெய்வேன்; இன்றுசெய்வேன்; என்றுமினிச் செய்வேன்;
நான்பிறந்த நாடு,மொழி தமக்குத்தொண்" டென்றான்.

''ஆருக்கும் உதவாமல் எனக்குமுத வாமல்,
ஆருயிரைப் போக்கவந்தேன்; காய்ந்தெனது நெஞ்ச
வேருக்குள் பால்பொழிந்தீர்; செழுசெழுத்த துள்ளம்!
விடிவுற்ற தென்வாழ்க்கை; தெளிந்ததுயிர்'' என்றான்!
''யாருக்கும் யார்சுமையும் யார்பகையும் இல்லை;
யாக்கையெலாம் தோல்தசையும் நார்நரம்பு மாகும்;
நீருக்குள் குளிர்போல, நெருப்பின்ஒளிச் சூடாய்,
நின்றதொரு வெற்றுடற்குள் நின்றதுயர் நெஞ்சம்''

''பூவினுக்குள் மணம்போல நெஞ்சலர்ந்து வீசும்
புதுமணத்தைத் தானுணரான், புறநாற்றம் மோப்பான்;
யாவினுக்கும் உள்ளதொரு வித்துப்போல் உள்ளம்!
யாக்கையெலாம் காய்கனிபோல் பிறர்க்குதவல் வேண்டும்;
மாவினுக்கும் பலவினுக்கும் தனித்தனித்தோற் றம்போல்,
மாந்தருக்குள் பலதோற்றம்; நாற்றமும்அவ் வாறே!
ஆவினுக்கும் குதிரைக்கும் அரற்றொலிபோல் மக்கள்
அரற்றொலியே உளங்கலக்க மொழிமலர்ந்த'' தென்றேன்.

''தோன்றுமுயிர் பலவாக மொழிபலவு மாகித்
துலக்கினவே நல்லறிவை; விளக்கினஉள் உள்ளம்!
ஊன்றுசெடி போலுமுயர் ஆல்போலும் பாரில்
உலவுமொழி பலவெனினும், உலகமெனும் நற்றாய்
ஈன்றமுது மொழிகளுக்குள் பழந்தமிழும் ஒன்றே!
இணரிணராய்ப் பூத்தமலர், சிம்புமிலா ரூர்ந்தே
ஆன்றுயர்ந்த ஆல்போல உணர்வெழுந்த தாயாய்
அனைத்துயிர்க்கும் உளம்மலர்த்தும் மொழிதமிழே
என்பேன்''.

''மூங்குபொருள் பலவினுக்கும் பயன்பலசேர் தல்போல்,
முகிழ்த்தமொழி அத்தனைக்கும் இடம்,பொருள்,பல்
நோக்கில்
தங்குபயன் பலவுடைத்தே! புறஅறிவுக் கொன்று;
தழலுக்குள் சூடேபோல் அகஅறிவுக் கொன்று;
பொங்குணர்வுக் கொன்றுயர்வாம் மெய்யறிவுக் கொன்று;
போக்குதனக் கொன்றுலகப் புத்தறிவுக் கொன்று;
கங்குலிலே ஒளிபோலப் பலபயனும் ஒன்றிக்
காழ்த்தமொழி தமிழ்மொழிபோல் யாண்டுமிலை என்பேன்.''

''உள்ளுணர்வால் கண்டறியார் புறங்கண்டு விள்ளார்;
உலகவுயிர்க் கிறுதியிலை அறிவியலால் இல்லை;
தெள்ளுதமிழ்ப் பயன்துய்ப்பார் மெய்ப்பயனைக் காண்பார்!
திறந்ததமிழ்ச் சுவடிகளில் மெய்த்தமிழ்ப்பாங் கில்லை;

அறுவை மருத்துவம்.

கருக்காலத்தில் நெஞ்சாங்குலை அறுவைப் பண்டுவம்

ஆங்கிலத்தில்: NORA SECCO DE SOUSA.
தமிழில்: செம்பியன்.

இளவேனிற் காலம். பகற் பொழுதின் வெம்மை தணிந்து கத கதப்பான இரவு. உறங்கச் செல்லும் முன்பு 'ஆன் தேவிசு' தனக்குப் பேரிடர் நேரும் என்று எதிர்பார்க்கவோ, அல்லது தான் மருத்துவ வரலாற்றிலேயே முதல் இடம் பெறுவோம் என்று எண்ணிப் பார்க்கவோ இல்லை. வாழ்க்கைப் பாதையில் முப்பத்திரண்டு ஆண்டுகளை உடல் நலத்தோடு கடந்து வந்த வள் அவள். இரண்டாம் மகப் பேற்றிற்கு வரப்போகும் பேற்றுத் துன்பத்தை எதிர்நோக்கியிருந்தாள். இக் கருக் காலமும் முன் னதைப் போன்றே எளிதாகக் கழிந்தது. இருப்பினும் அன்றிரவு விழித்துக் கொண்டபோது அவளுக்கு ஏற்பட்டுள்ள பேற்றுத் துன்பம் மிக எளிதானது அன்று என்பதை உணர்ந்து கொண் டாள். கருப்பாதை திறந்து கொண்டதும் அவளுக்கு நன்கு தெரியும். கணவன் 'சிம்'முக்கும் அறிவித்தாள். அவள் விழிப் புக்குப் பொருட்டான, மார்பில் ஏற்பட்டுள்ள வலியைப்பற்றியும் நன்குக உணர்ந்திருந்தாள். 'சிம்' 'பிள்ளைப் பேற்றிமையாள ருக்கு'த் தொலைபேசியில் அறிவித்தான். மருத்துவர் 'செரால்டு கிராசுநிக்' பொதுமை மருந்தகத்தில் 'ஆன் தேவிசு'வின் வரு கைக்காகக் காத்துக் கொண்டிருந்தார். வழி நெடுகிலும் 'ஆனின்'

(முன் பக்கத் தொடர்ச்சி)

அள்ளுபயன் சிறிதெனினும் ஆக்குபயன் ஆர்ந்தே
அகத்துமுதல் தமிழ்ச்சுடர்போல் பிறிதில்ஒளி இல்லை;
எள்ளுநிலை வந்ததெலாம் ஏற்றநிலைக் கூற்றே!
எனவே, நின் நல்லுயிரால் தமிழ்வளர்ப்பாய்'' என்றேன்.

இருள்படர்ந்த கண்களிலே ஒளிபடரக் கண்டேன்;
இகழ்ந்துரைத்த அவன்திருவாய் புகழ்ந்துரைக்கக் கேட்டேன்;
மருள்படர்ந்த நன்னெஞ்சம் நெருப்பிலிட்டுச் சுட்ட
மாற்றுயர்ந்த பசும்பொன்போல் சுடர்விடுதல் கண்டேன்;
உருள்பொழுதும் விடிந்ததவன் உள்ளம்போல்; முகம்போல்!
ஒளிக்கதிர்க்கை பாய்ந்தவன்றன் விழித்துளியைத் தீய்க்கும்!
அருள்படர்ந்த முகத்தினனாய் அவன்வணங்கிச் சென்றான்;
ஆர்த்தெழுந்த வல்லுணர்வால் நீர்துளும்பி நின்றேன்! ○

இடது காலில் பெருவலி மிக்குற்று உணர்ச்சியற்று வந்தது. மருத்துவர் 'கிராசுநிக்' அவள் நிலையை ஆய்ந்து அறிந்தார். காலத் தாழ்த்தமின்றி அவருடைய நண்பரும் 'ஏல்' பல்கலைக் கழக மருந்தகப் பள்ளியின் துணைப் பேராசிரியருமான ''மைக் கேல் குயூம்'' என்பாரைத் துணைக்கழைத்தார். 'ஆன்' இயல் பாகவே மகவைப் பெற்றெடுக்கும் நிலையில் இருந்தாள். ஆனால், அவளின் குருதிப் பெருங்குழல் ஒன்று பழுதுற்றதனால் துன்புற்று உழன்றாள் குருதியோட்டம் 130/78-இல் இருந்து 170/40க்கு மாறுபட்டது. அவளுடைய நாடித் துடிப்பு (மணிக்கட்டருகில்) 90 ஆக இருந்தது. அஃது அவள் குலைந்து போகும் நிலையை அறிவித்தது. கால்களில் பெரும் பகுதிகளில் நாடித் துடிப்பு நிகழவில்லை 'மார்பு ஆய்வுக் குழல்' வழியே மருத்துவர்கள் மிக்கஒலியுடன் இயங்கும் நெஞ்சாங்குலையின் முணுமுணுப்பைக் கேட்டனர். இந்த ஓரிரு செய்திகளைக் கொண்டு ஆனின் உட லில் ஒன்றன்று, இருவகைச் சீர்கேடுகள் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர்.

முதற் சீர்குலைவானது நெஞ்சாங் குலையிலிருந்து குருதியை உடலின் மற்றப் பகுதிகட்குக் கொண்டு செல்லும் பெருங்குழலில் தடையேற்பட்டுக் குருதியோட்டம் நிறுத்தப் பெற்றதால் ஏற் பட்டது. குருதிப் பெருங்குழலின் உட்புற மெல்லிய தசைப் போர்வை சில இடங்களில் கிழிந்து இருந்தது. நெஞ்சாங் குலையிலிருந்து இரைக்கப்பெற்று உடல் முழுமைக்கும் செல்லும் குருதி அக் கிழிசல்கள் வழிப்பாய்ந்து, அதன்பின் தங்கிக் குருதிப் பெருங் குழலுக்கும், மெல்லிய தசைப் போர்வைக்கும் இடையே புதிய குருதிக் கால்வாய்களை வலிந்து திறந்தது. 'ஆன் தேவிசு' மார்பு வலியினால் விழித்துக் கொள்வதற்குப் பொருட்டாக இருந்தது இதுதான் என்று அவ்விரு மருத்துவர் களும் எண்ணினர். அவள் மருத்துவ மனைக்குக் கொண்டுவர ஏதுவாக இருந்தது, குருதி ஓட்டத்தின் விரைவால் குருதிப் பெருங் குழலின் உட்புற மெல்லிய தசைப் போர்வை நெஞ்சாங் குலையிலிருந்து இடது காலின் மேற்பகுதி வரையிலும் பல இடங் களிலும் கிழக்கப் பெற்று பிரிக்கப்பட்டமைதான். மெல்லிய தசைப் போர்வைக்குள் புகுந்து, புதிய கால்வாயை உண்டாக் கிய குருதி, வெளிச்செல்ல வழியின்றி இடது காலின் மேற்பகுதி யில் உள்ள குருதிக்குழாய்களின் மெல்லிய தசைப்போர்வையை அமுக்கியதாலும், இடது காலுக்குச் செல்லும் குருதியோட்டம் தடைப்பட்டதாலும் உணர்விழப்பையும், இயக்கமின்மையையும் விளைத்தது.

அவள் மருத்துவ மனையை அடைந்த ஒரு மணிக்குள்ளா கவே இரண்டாம் சீர்குலைவு ஏற்பட்டது. குருதிப் பெருங் குழற் சுவரில் ஏற்பட்ட வெடிப்பால் நேர்மாறான வழியில் குருதி

யோட்டம் நெஞ்சாங்குலையை நோக்கி நடைபெற்றது. இதனல் பெருங் குழலின் முகப்பிலுள்ள சிறு கதவு (Volve) செவ்வனே செயற்பட இயலவில்லை. அச்சிறுகதவு நெஞ்சாங் குலையிலிருந்து குருதியானது வெளியே பீச்சப்பெறும் பொழுது திறந்தும், அப் படிப் பீச்சப்பெற்று வெளியேறிய குருதி மீண்டும் உட்புகாமல் தடுக்க மூடியும் செயற்படும். இப்பொழுது அப் பழுதுற்றச் 'சிறு கதவு' வெளியில் பீச்சப் பெற்றக் குருதியை உட்புறம் கசிய விட்டது. இஃது உடல் முழுமைக்கும் செல்லும் குருதிச் சுழற்சி அமைப்புக்கு அச்சுறுத்துதலாக அமைந்தது. நெஞ்சாங் குலையும் முன்னையினும் மிகுதியாகத் தொழிற்பட்டது. முடிவில் அதன் இயக்கம் நின்று இறப்புக்கு வழிகோலும் நிலையிலிருந்தது

குருதியோட்டத் தடை (Dissecting Aneurysim) எந் நேரத்திலும் நிகழலாம். முன்பெல்லாம், கருக் காலத்தில் இந் நிலை ஏற்பட்டால் இறப்பைத் தவிர வேறு மாற்றமில்லை. இவ் வழியில் தொடர்ச்சியாக வந்த எழுபத்து மூன்று பெயர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மூன்று நாட்களுக்கு மேலும், பதி னொருவர் பத்து நாட்களுக்குள்ளும், எண்மர் பத்துக் கிழமைகட் குள்ளும், உயிரிழந்தனர் இறவாத மிகச் சிலரே குருதி நாளத் தில் (நரம்பில்) ஏற்படும் மிக எளிய குருதி யோட்டத் தடைக்கு ஆளாயினர். 'ஆன் தேவிசு'வின் நிலை அப்படி ஒன்றும் எளி யது அன்று. மகவை ஈன்றெடுப்பது தான் முதற் கட்டமாக இருந்தது. மருத்துவர் 'கிராசுநிக்' சிசரியன் (Cesarean) முறை யைக் கையாண்டார். ஐந்து மணித் துளிகட்குள்ளாகவே உடல் நலத்தோடும் இயல்பானதும் ஆகிய ஓராண் மகவு பிறந் தது. பனிக்குடம் அகற்றப் பெற்றுக் கருப்பை சீர் செய்யப் பெற்றது. மருத்துவர் 'குயூமும்' அவருடைய குழுவினரும் அடுத்து ஆற்ற வேண்டிய பணியினை மேற்கொண்டனர். அவர்கள் அடுத்த எட்டு மணிநேரம் இடையறுது உழைத்தனர். செயலற்ற பகுதிகளில் குருதியோட்டத்தைத் திரும்பப் பெரு விடில் அப் பகுதிகள் துண்டிக்கப்பட வேண்டியதுதான் இரு வகைச் செயல்களை அவர்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. குருதிக் குழாய்ச் சுவர்கட்கிடையில் தவருன பாதையை அமைத்துக் கொண்ட குருதியின் அழுக்கத்தைத் தவிர்க்க வேண்டியிருந்தது இப் பணியினை இனிது முடிக்க மருத்துவர் 'குயூம்' என்பார் குருதிக் குழலின் உட்புற மெல்லியதசைப் போர்வையில் சிறு தொளை ஒன்றினைச் செய்தார். அதனல் குருதிக் குழலில் மெல்லிய தசைப் போர்வைக்கும் குழாய்க்கும் இடையே அடைபட்டிருந்த குருதி, பெருங் குழலில் ஓடுவதற்கு வாய்ப்பேற்பட்டது.

அடுத்த கட்டமாக நெஞ்சாங் குலையிலிருந்து குருதியை உடலின் உறுப்புகட்குக் கொண்டு செல்லும் சிறு குருதிக் குழ

லுக்குள் ஏற்பட்ட தடைப் பகுதிகளைத் தவிர்த்தல் வேண்டும். மருத்துவர் 'குயூம்' ஐந்து விரற்கடை நீளமுள்ள 'டெக்ரான்' (Dacron) சிறு குழாயைக்கொண்டு அடைப்பட்டிருக்கும் இடத்தின் மேற்புறத்தையும் கீழ்ப்புறத்தையும் இணைத்துத் தனி வழி அமைத்தார்! இவ்வமைப்பு செவ்வனே செயற்பட்டது. குருதி யோட்டம் தடையின்றி ஒழுங்குபடுத்தப் பெற்றது. அந்த மருத்துவர்கட்கு இப்பொழுது மிக மிக நெருக்கடியான நிலைமையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. நெஞ்சாங்குலையில் குருதியை வெளியனுப்பும் பெருங்குழலின் முகப்பில் உள்ள 'சிறு கதவை' எப்படிச் சீர் செய்வது என்பதே அது. 'ஆன் தேவிசு'க்கு வாழ்வு தரவேண்டுமானால் அது சீர் செய்யப் பெறுதல் வேண்டும். ஆனால் அவர்கள் இப்பொழுதுள்ள நிலையில் ஒன்றும் செய்ய இயலவில்லை. அறுவைப் பண்டுவப் பலகை மீது எட்டு மணிக்குமேல் கிடத்தப் பெற்றிருந்த 'ஆன்' மிக மிக நலிவுற்ற நிலையில் இருந்தாள். குருதிக் குழல்களின் திசுக்கள் தையலை ஏற்றுக் கொள்ளும் வன்மையற்றிருந்தன. அவை வன்மைபெற பல கிழமைகள் செல்லல் வேண்டும்.

பின்வந்த கிழமைகளும் அவள் குலைவுக்குத் துணை செய்வனவாயிருந்தன. குருதிப் பெருங் குழற் 'சிறு கதவு' பழுதுற்றமையால் இருமுறை அவள் நெஞ்சாங் குலை செயலிழந்த நோய்க்கு ஆளாகித் துன்புற்றுழன்றாள். அவளுடைய நாடித் துடிப்பு 160க்கு உயர்ந்தது. பெருந் துன்பத்தோடு பெருமூச்சு உயிர்த்தாள். மருத்துவர்கள் அவளுக்கு உயிர்வளியைச் செலுத்தினர்; உறக்கத்திற்கும், நோய்த்துன்பம் குறைத்தற்கும் மருந்துகள் கொடுத்தனர் உயர்ந்துகொண்டே செல்லும்குருதியோட்ட அழுக்கத்தைக் குறைப்பதற்கு அவள் உடலிலிருந்து ஓரளவு குருதியை வடித்தெடுத்தனர். ஒருவாறு அவர்கள் அவளை அந் நிலையிலேயே வைத்திருந்தனர்.

அன்று இருபதாவது நாள். மருத்துவர் 'குயூம்' இரண்டாம் 'அறுவை' நிகழ்த்த அதுதான் சரியான நேரம் என்று முடிவு செய்தார். அது நெஞ்சாங் குலையைத் திறந்து செய்யப்பெற வேண்டிய அறுவைப் பண்டுவம். நெஞ்சாங் குலைக்கு மாறாக அதுபோன்ற செயற்கைப் பொறி ஒன்று பயன்படுத்தப்பெற்றது. அஃது அறுவை நிகழும்பொழுது நெஞ்சாங்குலை குருதியின்றி உலர்ந்தும், அசைவற்று இருப்பதற்கும், உடலின் குருதி யோட்டம் தொடர்ந்து நிகழ்வதற்கும் உதவியது. அவளுடைய நெஞ்சாங்குலை இயக்கத்தைத் தற்காலிகமாக நிறுத்தச் சிறு அளவு மின்னோட்டம் அதனுள் செலுத்தப்பெற்றது. மருத்துவர் 'குயூம்' நெஞ்சாங்குலையில் 'சிறு கதவு'க்கருகில் குருதிப்பெருங் குழலைத் திறந்தார். அவர் கிழிசல் ஏற்பட்ட இடத்தைக் கண்

ணுற்றார். சில தையல்களால் அதைச் சீர்செய்தார். அவர் அப் பணியை முடித்தபொழுது அப் பண்டுவ அறைக்குள் பணியாற்றிய அனைவர் உள்ளத்திலும் ஒரு பெருமித உணர்வு நிலவியது. மூடுவதின் நிமித்தம் இயல்பாகவே குருதிப் பெருங்குழற் 'சிறு கதவை'ப் பின்புறம் இழுத்துச் சரியான இடத்தில் பொறுத்தினார். இதனால் நெஞ்சாங் குலைக்குள் குருதிக் கசிவு தவிர்க்கப் பெற்றது. சிறு அளவு மின்னோட்டத்தை மீண்டும் செலுத்த நெஞ்சாங்குலை தன் பணியினை மீண்டும் தொடங்கியது நாடித் துடிப்பும் குருதி ஓட்டமும் ஒழுங்காக நிகழ்ந்தன. நெஞ்சாங் குலையின் முணுமுணுப்பு அகன்றது. அறுவை நடைபெற்ற பதிமூன்றாம்நாள் ஆன்தேவிசு நோய் எதிர்ப்பு மருந்து கொள்வதைத் தவிர்த்தாள். பதினைந்தாம்நாள் அவள் வீடுதிரும்ப ஊக்குவிக்கப்பெற்றாள்.

ஐந்து நாட்களுக்குப் பிறகு அவள் மருத்துவ மனையை விட்டு நீங்கல் வேண்டும். அவளுடைய வினைப்பாடுகளை சிறிதுகாலத்திற்கு ஓரளவு மட்டுப்படுத்திக்கொள்ளல் வேண்டும். மீண்டும் புற ஊதாக் கதிராய்வுக்குட்படுத்த வேண்டியிருந்தது. ஆனால் மருத்துவ மனையினின்றும் விடுபெற்ற ஒரு கிழமைக்குப் பின் முழுமையான உடல்நலம் பெற்றாள். இப்பொழுது அவள் வீட்டுப் பணிகளைச் செய்வதினும், தன்னிரு பிள்ளைகளைப் பேணிப் புரத்தல் செய்வதினும், வீட்டிற்கு வருகின்ற நண்பர் குழாமுடன் கூடி மகிழ்வதினும் 'சிம்'முடன் இரவுப் பொழுதை இன்பமுடன் கழிப்பதினும் சுறுசுறுப்புடன் காணப் பெற்றாள். இதுதான் மருத்துவ வரலாற்றிலேயே, முதன்மையானதாகப் பதிவு செய்யப்பெற்ற, வெற்றியுடன் செயலாற்றி நன்மைகண்ட முதல் நிகழ்ச்சி. இதில்தான் அறுவைப் பண்டுவம் முழுமையானதாகத் திருத்தம் செய்யப் பெற்றது. இறந்து போகும் பிணியாளர்க்கு உயிரளித்ததும் இச்சீரிய செயல்கள் நிகழ்ததன்பின்பே!

சின்னாட்களுக்குப் பிறகு மருத்துவர் 'குயூம்' 'ஆனு'க்கும் அவள் குடும்பத்தார்க்கும் 'ஏல்'மருந்தகப் பள்ளியின் விலங்குப் பகுதியில் இருந்த சிறு விளையாட்டுத் தன்மை நிறைந்த ஒரு நாயைக் காண்பித்தார் ஆன் உடல் நலம் பெற்ற நிகழ்ச்சியில் அந் நாயுக்கும் ஒரு பங்கு உரியது. ஏனெனில் அந் நாய்கூடத் தன்னுடைய பெரிய குருதிக்குழலின் ஒரு பகுதியில் 'டெக்ரான்' குழாயைப் பெற்று அதன் வழியே குருதியோட்டம் பெற்றிருக்கிறது. அக் குழாய், மருத்துவர் 'சான். இ. பென்' என்பவரால் அறுவை முறையில் பயிற்சி பெறும்பொழுது, 'ஆ'னுடைய நிகழ்ச்சிக்குச் சில மாதங்கள் முன்னர்தான் வைக்கப்பெற்றது. வெற்றியளித்த அக்குழலை ஆனுக்கும் பயன்படுத்த வேண்டும் என்ற நம்பிக்கையை மருத்துவர் 'குயூமுக்குக்' கொடுத்தது அந் நாய்தான்!

○

தொடர்-3. மெய்யறிவுக் கட்டுரை.

அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு.

- மெய்ம்மைப்பித்தன் -

முன்னுரை (தொடர்ச்சி)

இக்காலத்தே சமயம் என்ற சொல் எத்துணை ஆழமற்ற பொருளில் வழங்கப்பெற்றுப் போலியும், பகட்டும், ஏமாற்றும், கரவும், மூட நம்பிக்கையும், ஆரவாரமும் நிறைந்ததாக மக்கள் மன்றத்தில் பேசப்பெற்றும் பாராட்டப்பெற்றும் வருகின்றதோ, அத்துணை அளவுக்கு அறிவியல் என்ற சொல்லும் ஆழமற்ற பொருளில் வழங்கப்பெற்றுப் போலி, பகட்டு முதலியன நிறைந்து காணப்படுகின்றது. மாந்தன் இறைவனைப் பற்றிக் கவலைப் படாமல் காட்டிலும் மேட்டிலும் அலைந்து, வெயிலிலும் மழையி லும் காய்ந்தும் நனைந்தும் காட்டுமிராண்டியாக வாழ்ந்த பொழு தெல்லாம் அவன் உள்ளம் களங்கமற்றிருந்தது. கருக்கொள் ளாத வானம்போல் துல்லியமான நினைவே அங்குச் சுடர்விட் டது ஒருயிரை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவனுள் ளத்துச் சுரந்ததில்லை. பிறர்க்கும் தனக்கும் என்றே அவன் உணவை ஈட்டி வந்தான்; அவனுக்கென உணவைச் சேமித்து வைக்கத் தெரியாமல் இருந்தான். அத்தகைய உயர்ந்த இயற் கையான நடத்தைகளால், இக்கால அரசியல் அறிஞர்களும், பொருளியல் பேராசிரியர்களும், குமுகாய, வரலாற்றுத் திறம் படைத்தாரும் ஒருங்கே திரண்டு, அமைத்தே ஆகல் வேண்டும் என்று சூளுரைத்துக் கொண்டு வரும் நிகரமை கொள்கை அக் காலத்தில் இயற்கையாகவே சிறந்திருந்தது. ஏற்றத்தாழ்வற்ற, உயிர்க்குயிர் அன்புப்பிணைப்புற்ற, எல்லாரைப் பற்றியும் எல் லாரும் அக்கறை கொள்ளுகின்ற மக்கள் அமைப்பு ஒன்று இயற் கையாகவே அமைந்திருந்தது. அத்தகைய உண்மை உள்ளங் களின் சொல்லிலும் செயலிலும் உண்மையாகவே இறைத் தன்மை-இறைத்திறம் வாய்ந்திருந்தது. ஆனால் அவ்வாறிருந் தவன் இறைவனைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்ளத் தொடங் கியவுடனேயே, அவனிடமிருந்த இறைத்தன்மைகளும் அவனை விட்டு விலகத் தொடங்கின. வரவர அவன் இறைவனைப் பற்றி மிகுந்த கவலை எடுத்துக்கொள்ள முற்பட்டான். அதன்பின் இறைவனின் தன்மைகளினின்றும் முற்றும் அறவே விலகத் தொடங்கிவிட்டான். குமுகாய நிலையிலும் இவ்வாறே நடந்தது. குமுகாயத்தை வளர்க்கத் தொடங்கினன்; பிரிவுகள் தலையெடுத் தன. மக்களைப்பற்றி அக்கறை கொள்ள முற்பட்டவுடன் மக்கள் அமைப்பிலேயே ஒரு போலித் தோற்றம் ஏற்படத் தொடங்கி விட்டது.

மாந்தன் தன் உடலைப்பற்றிக் கவலையற்றவனாகவும் அதனைப் பேணத் தெரியாதவனாகவும் இருந்தபொழுதெல்லாம் அவனின் உடல் நல்ல வளமுற்றிருந்தது; உரமுற்றிருந்தது; எத்தகைய வினைகளையும் எளிதேசெய்யும் திறமுற்றிருந்தது. ஆனால் அவன் தன் உடலைப்பற்றிக் கவலைப்படத் தொடங்கியவனாகவும் அதனைப் பேணுதற்கு இன்னின்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும் என்று அறிய முற்பட்டவனாகவும் ஆன பின்னரே அவன் உடல் கேடுறந் தொடங்கியது. பழங்கதைத் தலைவர்கள் மருத்துவ மனைகள் நிரம்பிய நகர்களில் வாழ்ந்ததாக நாம் அறிய முடியவில்லை. சமயத் தொடர்பான பழநெறி (புராண)க் கதைகளில் மட்டும் இத்தகைய திறம்படைத்தார் இருந்தனர் என்று நினைக்க வேண்டா. அண்மையில் ஆராய்ச்சி வகையால் அகழ்ந்து காண்பார் கண்ட உடல் எலும்புகளும் அத்தகைய வலிவு படைத்தார் அக்கால் மிகுந்திருந்தனராகக் கூறக் கேட்கின்றோம் மருந்து வேண்டாத வாழ்க்கை அவர்களுடையதாக இருந்தது. ஆனால் இக்காலோ சோற்றை ஒரு வேளையும், அந்த ஒருவேளை உணவால் நேரும் கேடுகளைப் போக்குதற்கு மருந்துகளை மூவேளை நான்கு வேளைகளுமாக உட்கொள்ளுகின்றோம். இந்நிலை எங்ஙன் வந்தது? மாந்தன் எதனைப்பற்றிக் கவலை கொள்ளுகின்றானோ அதனாலேயே அவன் துன்புறுகின்றான். அக்கவலையே, அவனை அவன் கவலைப்படும் துறைகளைத் தவிர பிற துறைகளில் தொலையுறுபவனாகச் செய்கின்றது. சமய அக்கறையும் உடல் நாட்டமும் எப்படி நமக்குப் போலிச் சமயங்களை மிகுவித்து உண்மைச் சமய நாட்டத்தை அகற்றவும், போலிநலன்களை தோற்றுவித்து உண்மை நலனைப் புறக்கணிக்கவும் செய்தனவோ, அப்படியே அறிவியல் நாட்டமும் நமக்குப் போலி அறிவை மிகுத்து உண்மையறிவை மறைத்துவிட்டது என்று சொல்லலாம்.

இக்கருத்தை அறிவியல் சார்ப்பாளராகத் தம்மைக் கருதிக் கொண்டிருக்கும் ஒருசிலர் விழுங்க மறுக்கலாம். அறிவியல் நாட்டங் கொண்டமையாலன்றோ, இன்று இருளாய்க் கிடந்த உலகம் ஒளி சிந்தக் காண்கின்றோம்; கோளாதனவற்றையெல்லாம் கேட்கின்றோம்; பார்க்காதனவற்றையெல்லாம் பார்க்கின்றோம்; அறியாதன வற்றையெல்லாம் அறிகின்றோம்; கோடிக் கணக்கான கற்கள் தொலைவுள்ள கோள்நிலைகளை யெல்லாம் மாடிப் படிகளில் ஏறிக்காண்பது போல் காண்கின்றோமே! அவ்வாறிருக்க அறிவியல் நாட்டம் மிக மிகப் போலியறிவே தலைப்பட்டது என்று கூறுவது எவ்வாறு பொருந்தும் என இத் தன்மையார் கேட்கலாம்; எதிர்த்துரைக்க ஆளில்லா விடத்தில் குதித்துக் குரலோங்கிப் பேசலாம்; இத்தகையார்க்கு இன்னும் விளக்கமாகக் கூறுவேன். இக்கால அறிவியல் போலியும் கலந்தது என்பதை நான் இப்பொழுது சொல்ல முற்படின் எவரும்

கேளார்? அக்காலத்தே உலகம் உருண்டை என்று கலிலியோ கூறியதையும், இவ்வுலகிற்கு ஈர்ப்புத்தன்மை உண்டென்று நியூட்டன் கூறியதையும் எப்படி அக்கால மக்கள் ஒப்புக் கொள்ளவில்லையோ, அப்படியே அறிவியலுக்கும் பிடிபடாத மெய்யறிவுண்மைகளையும் இவர்கள் செவிகொள முன்வரார். அறிவியல் என்பதன் படிநிலைகளைப் பலவகையாலும் அது கூற வரும் இடத்தில் தெளிவாக விளக்க இருக்கின்றேன். இம் முன்னுரையில் முற்கூறிய அறிவியல் மயக்கம் கொண்டார் சிலரின் மயக்கறுப்பான் வேண்டி ஈண்டும் சிறிது உரைப்பேன். ஒரே மரத்தில் விளையும் ஒரே பெயரையுடைய கனிகள் முற்றம் ஒரே சுவையுடையன என்று நாம் எல்லாரும் அறிவோம். ஒரே மாமரத்தில் பழுத்துத் தொங்கும் பன்னூறு மாங்கனிகளும், ஒரே தென்னை மரத்தில் காய்த்துக் குலுங்கும் பலவான தேங்காய்ப் பருப்புகளும் நீரும் ஒரே சுவையுடையன என்பதை நாம் நன்கு உணர்வோம். இதை மறுக்கவே தோன்றவில்லை. ஆனால் உண்மையில் அப்படியில்லை என்பதை நம்மில் எத்தனைப் பெயர் அறிந்து கொண்டுள்ளோம்? என்ன? ஒரே மரத்துக் கனிகளில் வேற்றுமையா? உண்மையா? கடைக்காரர்கூடப் பொருள்களை விற்பனை செய்கையில்,சுவைக்காக ஒரு காயையோ கனியையோ அறுத்துக் கொடுத்துவிட்டு, அதன்சுவை போலவே பிறவற்றின் சுவையும் இருக்கும் என்பதை நமக்கு எளிதில் விளக்குவதற் காக, ''இவையனைத்தும் ஒரே மரத்துக் காய்கள்தாம் ஐயா'' என்று கூறுவதைக் கேட்டதில்லையா? 'அப்படியானால் சரி' என்று நாமும் தலையசைத்ததில்லையா? அப்படியெல்லாம் ஒப்புக் கொள்ளப்பெற்ற, எல்லார்க்கும் வெளிப்படையான ஒரு கருத்து எப்படித் தவறும்? என்று நம்மில் சிலராவது கேட்கத்தானே செய்வார்கள். அவர்கள் அறிவியல் படித்தவர்களா? படிக்காத வர்களா? இல்லை, நாம்படிக்கின்ற அறிவியலில் இவையெல்லாம் விரிவாகக் கூறப்பட்டுள்ளனவா? இல்லையே!ஏன்?மருத்துவர்கள் எப்படி அகநோய் பற்றிக் கவலையுறாது புறநோய் பற்றிமட்டும் கருத்தூன்றி அதனைத் தெளிந்து தேர்ந்து கண்டும் காணாதும் மருந்தளிக்கின்றனரோ, அங்ஙனமே, அறிவியலறிஞர்களும் அகவுண்மைபற்றித் தெளியாது, புறவுண்மை அஃதாவது பொரு ளுண்மைமட்டும் தெளிந்து, அதன்தோற்றம் திறம்பற்றிப் பொது வான உண்மைகளை மட்டுமே கூறுகின்றனர். அவர்கள் ஆய்ந்து கூறும் இவற்றைக்கூட நாம் ஆயாது உண்மை என்று வலிந்து கரைகின்றோம். எடிசன் கண்டுபிடித்த மின்விளக்கின் சொடுக்கி (Switch)யில் குரங்கின் கைபட்டாலும் விளக்கெரியும். அதனால் அக் குரங்கு அவ்விளக்கைக் கண்டு பிடித்த எடிசனின் அறி வைப் பெற்றதாகாது. அதன் காரண கருமப் பொருளையும் உணர்ந்தறிந்ததாகாது; நம் அறிவியல் திறமும் எடிசன் கண்டு பிடித்த விளக்கைக் குரங்கு சொடுக்கியால் போடுவதைப் போன்றதே!

இனி, ஒரே மரத்தில் உண்டான கனிகள் பெரும்பாலும் வேறுபட்டிருப்பதை எப்படி அறிவதோ? அதன்பின் எப்படி ஒப்புக் கொள்வதோ? எனின் அதனையும் விளக்குவோம். ஒரே மரத்தில் உண்டாகும் கனிகளை ஒரே தாய் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளோடு ஒப்பச் சொல்லலாம். ஒரே தாயின் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளின் தன்மைகள் ஒருவாறு தோற்றத்தான் (அதுவும் பெரும்பாலும் ஒத்திருப்பதில்லை) ஒத்திருந்தாலும் அகப்புறக், காரண கரும மாறுபாடுகளால் பெரும்பாலும் வேறு படுவனபோல், ஒரே மரத்தில் காய்த்துக் கனியும் பொருள்களும் வேறுபாடு கொண்டவையே! இவை ஆய்ந்துணராற்குப் புலப் படுவதில்லை. பின் தாய் வயிற்றுப் பிள்ளைகளின் மாறுபாடுகள் நமக்குப் புலனாகுமாறு, ஒரு மரக் கனிகளின் மாறுபாடுகள் நமக்குப் புலனாகவில்லையே யெனின், நமக்கு வாய்ந்திருக்கும் உணரும் ஆற்றலொடு, ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளுக் கிருக்கும் உணர்த்தும் ஆற்றலும் ஒன்று சேர, உணரப் பெறு கின்ற உண்மைகள் நிலத்துள் நிழல்போல் புலனறிவுக்குப்படு மாறு விளங்குகின்றன. ஆனால் நமக்கு வாய்த்திருக்கும் உணரும் ஆற்றல் ஒரே படிநிலையாக விருக்க, ஒரே மரக் கனிகளுக் கிருக்கும் உணர்த்தும் ஆற்றல் மிகமிகக் குறைந்தும், மறைந்தும் இருப்பதால் நாம் உணரப்பெறுகின்ற உண்மைகள் நீருள் நிழல் போல் புலனறிவுக்குப் படாதவாறு விளங்குகின்றன. இனி, புல னறிவுக்குப் படாதிருப்பினும் உற்றறியாரும் ஒரு தாய்ப் பன் மக்களின் வேற்றுமைகளை உணருமாறு போலவே, உள்ளுணர் வினரே ஒருமரப் பல்கனிகளின் மாறு சுவையினையும் உய்த்தறி வார் என்க. இனி இவற்றாலும் தெளியா முழு மாந்தர்க்கு வேறோர் உவமையும் காட்டுவேன்.

அகப்புறப் புலன்களாலும், கண்டு, கேட்டு, உண்டு, உற்ற றியா, உணர்வாலும் உய்த்தறியப்படாது, புடை நிரம்பிய இப் புடவியுள், சுழன்றாடும் பம்பரம்போல் ஒரு நிலை தூங்கும் இப் பெருநிலை மண்ணகத்துள் அமைந்த நிலம், ஒரே படித்தான கல் லும் மண்ணும் சுண்ணமும் மாழையும் நீரும் நெருப்பும் கலந்த திரளையாக இருப்பதை எல்லாரும் அறிவோம். திண்ணிய இவ் வுலகத் திரளையின் மேலோட்டு மண்ணை உட்புறம் புரட்ட ஒருபால் நன்னீரும், மறுபால் உவர் நீரும், ஓரிடத்து நெய்நிலை நீரமும், பிறதோரிடத்து எரிநிலை நீரமும், ஒரு குண்டுள் வெந் நீரும் மறுகுழியுள் தண்ணீரும் ஊற்றுப் பெருக்கவும் சீற்றி மேலேறவும் காண்கின்றமே, இஃது யாங்ஙன்? இவற்றையெலாம் எண்ணிப் பார்க்குங்கால் நாமறிந்த அறிவுநிலை மேற்படக் கிளந்த கிளவியின் பாற்பட்டு நிற்றல் காண்கின்றமா? அல்லமா? இவ்வாறு பன்னூறாயிரம் வேறுபாட்டு நிலைகளையும் மாறுபட்ட தோற்ற துலக்கங்களையும் முற்றும் அறிவிக்க முனை யாதாயினும் ஒரு சிறிதளவிலாகினும் தெரிந்துகொள்ள இத்

தொடர் கட்டுரை துணை செய்யும் அறிவின் அடிவாரத்தை எட்டும் முன்னரே அறியாமையின் கொடுமுடியை நாம் கண்டாகல் வேண்டும் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இன்னொன்றையும் உங்கட்கு இம் முன்னுரை யில் சொல்லிவிடல் வேண்டும்.

அறிவு என்பது மூளையின் செயல் என்றே (அறிஞர்கள் உட்பட்ட) பெரும்பாலார் நினைத்து வருகின்றனர். மூளையில் அறிவு துலங்குமே அன்றி மூளையே அறிவுக் கடிப்படை யாகாது. மூளையே அறிவைத் தோற்றுவிக்கும் கருவி எனின், பெரிய அளவு மூளை பேரறிவினையும் சிறிய அளவுள்ள மூளை சிற்றறிவினையுமல்லவா தோற்றுவித்தல் வேண்டும். அஃதவ்வா றின்றி வேறுபடுவானேன்? எனவே மூளை தோற்றுகருவி யன்று துலக்கு கருவியே ஆகும் என்று தெளிக. இதில் எடை யளவின்றி உணர்வளவே நோக்கத்தக்கதாம். சிறிதளவான மூளை, பெரிய அளவான மூளையினும் பலவகையானும் அறிவைத் துலக்கலாம். மூளை, அறிவாகி நிற்கின்ற உணர்வை (இக்கருத்து விளங்காதவர்கள் கட்டுரையுள் விளக்கம் பெறுவர்) வெளிப்படுத்தும் கரும கருவியே! வாயில்லா விடத்து மனம் பேசுவது போல, மூளையில்லாத உயிர்களிடத்தும் பொருள்களி டத்தும் அறிவு அலைகள் பேசிக்கொண்டுள்ளன. அவற்றை வெளிப்படுத்தும்ஆற்றலற்ற உயிர்கள் உணர்தலறிவான் மட்டும் உணர்கின்றன. அவ்வுணர்தல் திறனும் அற்ற உயிர்கள், அவ் வறிவால் மூளை பெற்று நாளடைவில் உணர்தல் நிலையையும், உணர்த்தல் நிலையையும் உற்றுணர்தல் நிலையையும், உய்த் துணர்தல் நிலையையும், இறுதியில் ஒன்றேயாய் நிற்கும் நிலையை யும் படிப்படியாய்ப் பெறுகின்றன. இவற்றையும் கட்டுரையுள் பரக்கக் காணலாம். அறிவின் தேக்கம் மூளைமட்டுமன்று; மூளை மட்டும் அறிவை உணரவில்லை; நம் உடலிலுள்ள பொருள்கள் எல்லாமும் அறிவைத் துலக்குகின்றன. ஆனால் யாவற்றினும் மூளையே அறிவை உணரும் ஆற்றலையும், உணர்த்தும் ஆற்றலை யும் மிகுதியாகப் பெற்றுள்ளது. அறிவு மூளைவழி வெளிப்படு கின்றதே அன்றி மூளையுள் தோன்றி வெளிவரவில்லை. மூளை யின் செயலும் அஃதன்று. மூளையைப் பொறிகள் நுண்ணிதாக்கு கின்றன. அதனால் மூளை நுண்திறம் பெற்று மறைந்து கிடக்கும் அறிவை அறிவிக்கின்றது. அறிவு மூளை என்பதன் கருவிச் செயலாக இருக்குமானால், ஒரே மூலப் பொருளால் ஆன எல்லா ருடைய மூளையினின்றும் ஒரேவகையான உணர்வும், அறிவும், வெளிப்படல் வேண்டுமே. (ஒரே இசைத்தட்டு எல்லாப் பொறி களிலும் ஒரே பாட்டைப் பாடுவதைப் போல). ஆனால் அவ்வா றில்லையே!

இனி, எல்லாருடைய மூளையும் அறிவைத் தோற்றுவிக்கும் கருவியாக இன்றித், துலங்குவிக்கும் கருவியாகமட்டும் இருப்ப

தும், அறிவு நுண்ணுணர்வாகி எங்கும் படர்ந்திருப்பதும் உண்மையாயின், எல்லாருடைய வானொலிப் பெட்டியும் ஒரே பாட்டைப் பாடுவதுபோல் எல்லாருடைய மூளைகளும் ஒரே அறிவுச் செய்திகளையல்லவா ஒலி பரப்புதல் வேண்டும்; அவ்வாறும் இல்லையே எனின், எல்லாருடைய வானொலிப் பெட்டிகளையும் ஒரே நிலையத்தில் ஒரே பொழுதில் திருப்பிவைத்தால் தாம் ஒரே பாட்டைப் படுமேயன்றிப், பல்வேறு நிலையங்களினின்றும் பல்வேறு பொழுதுகளிலும் ஒலி பரப்பப்பெறும் பல்வேறு ஒலியலைகளைப் பல்வேறு வானொலிப் பெட்டிகள் வாங்கிப் பல்வேறு இசைகளை எழுப்புவனபோல், பலருக்கும் பலபடித்தாக, பலமுறைகளில், பலநோக்கில், பல்வகைக் காரண கருமக் கூறுபாடுகளாக அமைக்கப் பெற்றுள்ள பலரின் மூளைகளும் பல்வகையான அறிவு அலைகளையே அஞ்சல் செய்யும். இவ்வகை நுண்ணறிவின் இயல்புகளையெல்லாம் சிக்கறுத்துக் காட்ட முற்படும்பொழுது, அறிவியல் கருத்துகளிலிருந்து எத்தகைய துணைச் சார்புகளான எடுத்துக்காட்டுகளைக் காட்டமுடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுகின்றேன். ஏன், இப்பொழுது வானொலிப் பெட்டியும், இசைத்தட்டும், மின் விளக்கும், பிறவும் அறிவியல் எடுத்துக்காட்டுகள் தாமே என்னின் அஃதன்று; கடல் நீரைக் காய்ச்சி உப்பெடுத்துக் காட்ட முற்படுவான், கிணற்று நீரைக் கையால் அள்ளிக் காட்டுவது, அக் கிணற்று நீர்போலும் இதுவும் நீரே என்று புறவிளக்கம் காட்டுதற்கே அன்றி, அக் கடல்நீரைக் காய்ச்ச வரும் உப்புப்போல் அக விளக்கம் காட்டுதற்கு அன்றும் என்க. பாலின் புறநிலையான வெண்மை விளங்கக் கொக்கைக் காட்டுவதன்றி, அதன் அகச் சுவை விளக்க அன்றும் என்க; இனி, கடலின் உப்பையும், பாலின் இனிப்பையுமே காட்டவியலா அப்புறநிலை விளக்கமாகிய அவ்வெடுத்துக்காட்டுகளால், உப்பின் மறைந்த ஊட்டத்தையும் குருதியையும். பாலினிப்பின் மறைந்த வெண்ணெயையும் நெய்யையும் காட்டுமாறு யாங்ஙன்? ஆகையால் இக்காலத்தே விளங்கிவரும் அறிவியல் நூல்களையும் அவற்றில் உள்ள கருது முறைகளையும் ஈங்கென் கட்டுரைக்குக் கால்கோளாக நிறுத்தவில்லை என்க! எனினும் அவற்றினும் மேம்பட்ட நிலையினை உணர்த்த அப் படி நிலைகளிலும் கால் வைத்துப் போதல்வேண்டியே நேருமென்றுணர்க. இனி அறநூற்களை எடுத்துக்காட்டாக நிறுத்தாமை பற்றிச் சிறிதுரைப்பேன். [தொடரும்]

படிப்பார்க்கு.

அறிவு, பகுத்தறிவு, மெய்யறிவு என்ற இக் கட்டுரையில் வரும் கருத்துகளை மறுப்பார், ஐயுறுவார், தெளியார் எவரேனும் உளரேல், அவர் தென்மொழிக் கெழுதி மயக்கறுத்துக் கொள்ள வேண்டுகின்றோம்.

நக்கீரர் கழகம்

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி, சென்னை.

(தொடக்கம் 1944)

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியின் கோடை விடுமுறைக்குப் பிறகு 1964 சூன் திங்கள் 12-ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 6-15 மணிக்கு வழக்கம்போல் வகுப்புகள் தொடங்கப்பெற்றன.

வித்துவான் **புகுநிலை,** வித்துவான் **முதனிலை,** வித்துவான் **நிறைநிலை** வகுப்புகள் தொடர்ந்து நடைபெறும். இவ்வாண்டு **எம். ஏ. தமிழ் வகுப்பு** தொடங்கப்பெற்றது. ஏறத்தாழ **18 தமிழ் ஆசிரியர்கள் அன்புப் பணி ஆற்ற ஆர்வமுடன் இசைந்துள்ளனர்.**

1964 மார்ச்சு திங்களில் நடைபெற்ற பல்கலைக்கழகம் புகுநிலை, முதனிலை, நிறைநிலைத் தேர்வுகளுக்குச் சென்று வெற்றிபெற்ற மாணவர்களில் முதல்தர மாணவர்களாக எமது கல்லூரியில் தேரியவர்களுக்குப் **பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுப் பதக்கங்கள்** வழங்கப் பெறும்.

இவ்வாண்டு (1964 - மார்ச்சு திங்களில்) தேர்வுக்குச் சென்று **எல்லா வகுப்பு மாணவர்களும் தேர்ந்து உள்ளனர்** என்று மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இடம்: **ஏ ஆர். சி. மகளிர் உயர் பள்ளி,** 44, பவழக்காரத் தெரு, மண்ணடி, சென்னை-1.

புலவர் **க. பழநி பாலசுந்தரனார்,**
கல்லூரித் தலைவர்.

பூ. ச. கந்தசாமி, எம். ஏ.,
செயலாளர்.

டி. செல்வராசன், எம். ஏ.,
துணைச்செயலாளர்.

குறிப்பு:

1. ஞாயிறு நீங்கலாக ஒவ்வொரு நாளும் மாலை 6-15-மணி முதல் 7-45 வரை வகுப்புகள் நடைபெறும்.
2. மகளிர்க்குத் தனி இடம் உண்டு.
3. வித்துவான் புகுநிலை (Entrance), வித்துவான் முதனிலை (Preliminary), வித்துவான் நிறைநிலை (Final), தமிழ் எம். ஏ., வகுப்புகளுக்குரிய பாடங்கள் கற்பிக்கப்பெறும்.
4. விளக்குச் செலவுக்கு வேண்டிய நன்கொடைக் கட்டணம் ஏற்றுக்கொள்ளப்பெறும்.
5. பிற விளக்கங்கள் அறிய, "செயலாளர், நக்கீரர் கழகம், 'தமிழகம்', 27, கொண்டலையர் தெரு", என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

நாடகச் சிலம்பு, கோவூர் கிழார்.

ஆசிரியர்: புலவர். கு. திருமேனி. பி. ஓ. எல்.
தேசியக் கல்லூரி, திருச்சி.

கிடைக்குமிடம்: இலக்கிய நிலையம், உறையூர், திருச்சி.

விலை: முறையே 3-25 ; 2-00

நாடகச் சிலம்பு

இந்நூல் சிலப்பதிகாரத்தினை அடிப்படையாகக் கொண்டெழுந்த நாடக நூல் என்பதினும், நாடக வடிவில் சிலப்பதிகாரத்துக்கு அமைந்த ஒரு விளக்கம் என்பது சாலப் பொருந்தும். அடிப்படைக் கதை சிறிதும் மாறாமல், ஆனால் இளங்கோவடிகள் அமைத்துச்சென்ற சில நுணுக்கங்களைத் தெளிவுபடுத்துவதற்கென அமைந்த சில கற்பனைக் காட்சிகளுடன் இயல்கின்றது இந்நூல். சிலப்பதிகாரத்துள் அகழ்ந்தெடுத்த அருஞ் செய்திகளைப் புலப்படுத்தும் கருவியாகவே ஆசிரியர் உரையாடலைக் கையாள்கின்றார். கதைமாந்தரின் பண்புநலன்கள் நன்கு புலப்படுமாறு உரையாடல் அமைந்துள்ளது. குறிப்பாக மாதவி, கோவலன் இருவர் தம் இயல்புகளைப் பற்றியும் சிலம்பு கற்றவரிடையேயும் தவறான கருத்துகள் நிலவிவர, அவற்றின் பிழைபாடுணர்ந்து, மாதவி கோவலன் தொடர்புக்கும் பிரிவுக்கும் உரிய காரணங்களை ஆசிரியர் பொருத்தமுற விளக்கிச் சிலம்பின் சிக்கறுக்கின்றார். கானல்வரிப் பாடல்களின் விளக்கமே இதற்குச் சான்று. அப்பாடல்களின் பின் கரந்திருக்கும் மனவியல் (Psychology) கள் உரையாடல் வழித் தெளிந்த விளக்கம் பெறுகின்றன, வேறுபல இடங்களும் அவ்வாறே. ஆசிரியரின் நடையும் சீரியதே. ஒருசில வட சொற்களைக் களைவதாயின் நூல் தனித் தமிழ்த் திறத்துடன் பீடுநடை யிடும். படித்தற்கினிதா யிருப்பினும் இந் நாடகம் நடித்தற்குரியதாக அமைதல் கடினம் என்றே தோன்றுகின்றது. உரையாடல் செய்திகளையும், கருத்துகளையும் தெரிவிக்கும் கருவியாய் இருக்கின்றதே யல்லாமல், மனவியலுக்கேற்ப இயல்பாக முகிழ்த்தெழும் புனைவில்லாச் சொற்களால் அமைந்ததாக இல்லை. இது பொதுவாக இன்று தமிழகத்தில் தோன்றும் நாடக நூற்கள் பெரும்பாலானவற்றுள் காணப்படும் ஒரு குறையே.

'கல்லாடன்'

கோவூர் கிழார்:

கழக நல்லிசைப் புலவர்களுள் ஒருவராய கோவூர் கிழார் பாடிய பாடல்கள் அனைத்தையும் ஆய்ந்து பெற்ற செய்திகளைத் தொகுத்துக் கூறுவது இந்நூல். பாடல்கள் வழி நாம் காணும் கோவூர் கிழாரின்

ஆங்கில மொழியாக்கம்

Although the big village was drowned in sleep,
Sleepless I was. And I lay hearing
The sound of the falling flowers,
The sapphire-like flowers from the lovely boughs
Of the 'Notchi'-with leaves like peacock's feet
From the near by "Ezhill" hills.

KURUNTHOKAI 138.

கொன்னூர் துஞ்சினும் யாம்துஞ் சலமே!
எம்மில் அயல தேழில் உம்பர்
மயிலடி இலைய மாக்குரல் நொச்சி
அணிமிகு மென்கொம் பூழ்த்த
மணி மருள் பூவின் பாடுநனி கேட்டே.

– குறுந்தொகை ௧௩௮.

ஆங்கில ஆக்கம்: ம. இலெ. தங்கப்பா, எம். ஏ. பி. டி.

(முன் பக்கத் தொடர்ச்சி)

தன்மையை ஆசிரியர் பாடல் மேற்கோள்களுடன் எடுத்துக் காட்டுகின்றார். கோவூர் கிழாரின் உயர்ந்த பண்பு நலன்களும் பாடல் திறனும் விளக்கம் பெறுகின்றன. திணை துறை மயக்கங்கள் பல பழம்பாடல்கட்குப் பொருள் தெளியாமற் செய்துவிடுகின்றன. ஆசிரியர் திணை துறைகட்குள்ளும் நுழைந்து அவற்றின் மயக்கறுத்துப் பாடல்களின் உண்மைப் பொருள் புலப்படுமாறு செய்கின்றார். அதோடு தெளிவுபடாத சில உவமைகள் சொற்றொடர்கட்கும் பொருளைத் தெளிவு படுத்துகின்றார். " சிறப்புடை மரபிற் பொருளுமின்பமும் அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல் " என வரும் அடிகட்குப் பொதுப் பொருள் கூறுவாரே உளராக, ஆசிரியர் அவ்வுவமையின் உண்மைப் பொருள் கொணர்ந்து, உவமையின் சிறப்பினைத் தெளிவிக்கின்றார். 'அராப்போலும் வறன்' 'அல்லிப்பாவை' ஆகிய சொற்றொடர்கட்கும் இவர் தரும் விளக்கங்களே ஏற்புடையன. கழகப்பாடல்களைப் பொருள் புரிந்தும், உணர்வு தோய்ந்தும் சுவை குன்றுமலும் கற்க நினைப்பார்க்கு இந்நூல் நல்ல வழிகாட்டி.

'கல்லாடன்'

மாயாத் தமிழுணர்வு...!

(''வேல்மார்பன் தூக்கிலிடப்பட்டு மாய்ந்தான். இனித் தமிழர் படை நடத்த ஆளில்லை'' என்று ஆட்சி யாளர் இறுமாந்திருந்தனர். ஆயினும் விடுதலைப் படையை அடக்க யாரால் முடியும்? வேல்மார்பனின் தோழன் வாள்மாறன் சிதறியோடிய தமிழ்ப் பொது மக்களை ஒன்றுதிரட்டி அவர்களிடத்தே இடியெனமுழங்கு கின்றான்.)

சீரார் முதுகுடிச் செழுந்தமிழ் மக்காள்,
வாராக் கொடுந்துயர் வந்திடக் கண்டீர்;
நேரா இழப்பு நேர்ந்ததும் கண்டீர்;
தேரா தினியும் திகைத்துப் பயனிலை.
பண்டை உயர்வினைப் பாங்கினை மறந்தே
எண்டிசை முழக்கிய அரசும் இழந்து,
மறமும் குன்றி அறமும் பிறழ்ந்து
திறமும் வினையும் திண்மையு மாறி,
உணர்வு சாம்பி ஒளிமுகம் கூம்பித்
திணிமா சூர்ந்து தணிவுறும் விளக்காய்
மொழிப்பற் றவிந்தே எழுச்சி அடங்கி,
விழிப்பற்று மயங்கி வீழ்ந்துள் ஒடுங்கிப்
பன்னாள் உறங்கிய உறக்கப் பயன்இது!
இந்நாள் கண்கள் விழித்தே இருப்பினும்
செந்தமிழ் காக்கச் சீறிய வேங்கை
பைந்தமிழ் மரபின் பாண்டிய மறவன்
வீங்குதோள் புடைத்த வேல்மார் பினனும்
தூக்கு மரத்தில் தொங்கிட நேர்ந்தது.
ஆட்சிக் கழுகுகள் அவனைக் கொந்திட
மாட்சித் தமிழர் மரமாயினர் கொல்?
''தலைவனை வீழ்த்திறோம், தமிழக எழுச்சி
இனிஇலை'' என்றெணும் ஆட்சி யாளர்
கனவு பொய்த்திடக் கடலென எழோமா?
தினவுறுந் தோட்கள் திரங்கியா போயின?

ம.இலெ.தங்கப்பா

மந்திகைக் கிடைத்த மாலை போலும்
இந்தி வெறியர் கையில்இன் றாட்சி
படாத பாடு படுமுறை அறிவோம்!
அடாத செயலுக் காட்சியா போர்வை?
பன்மொழி வழங்கும் பரந்தஇந் நிலத்துக்கு
ஒன்றே நாட்டு மொழிஎனல் முறையோ?
தமிழர் அதற்குத் தலைவணங் குதல்தான்
அமைவெனச் சொன்னால் அத்துணை எளியமோ?
முந்தை ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்
செந்தமிழ் ஆட்சி செலுத்திய திலையா?
நந்தமிழ் மறவர் நளிர்கடல் கடந்து
பைந்தமிழ் வினைத்திறம் பரப்பிய திலையா?
இன்றவ் வடக்கர் எவ்வகை உயர்ந்தவர்?
துன்றுநட் புணர்வால் ஆட்சிக் கொப்பினோம்;
அடிமைகள் என்று அடக்கிட நினைத்தனர்?
உடலில் தமிழ்க்குருதி ஓடிடு மளவும்
எவர்க்கும் தொழும்பராய் இருக்க ஒப்பிடோம்.
அவரவர்க் குரிய அடிப்படை உணர்ந்துதான்
இந்திய ஆட்சியில் இணைந்துளோம் ஆதலின்
நந்தமிழ் நாடும் மொழியும் போற்றுவோம்.
அறிவும் உணர்வும் அமைந்த உயர்மொழி;
செறிவும் தெளிவும் திறம்பா நன்மொழி;
இலக்கியம் பல்கலை இயல்நெறிப் பாங்கின்
உலகெலாம் வியக்கும் உயர்தனிச் செம்மொழி!
நன்றினும் கேட்டினும் நாவொடு சிவணி
இன்றுநம் உயிரினுள் உயிராய்க் கலந்த
செந்தமிழ் பேணுதல் நம்கடன் அன்றோ!
முந்தையர் தொகுத்த முழுமுதற் செல்வம்,
பிந்தியிங் குற்றதோர் பிறழ்விழிக் கணிகையின்
மயக்குறு நகைக்கும் முயக்குறு தோட்கும்
தயங்கா தழிப்பவர் தகவுளர் தாமோ?
தமிழில் உணர்ந்து தமிழில் எண்ணித்
தமிழில் தோய்ந்து தமிழ்க்கலை மலர்த்தித்
தமிழில் அறிவியல் வகையெலாம் நிறைத்துத்
தமிழ்த்தனி இலக்கியத் தலைநிலை கண்டு
தமிழ்த்திறம் உலகுக் குணர்த்தும் கடமை
ஒவ்வொரு நொடியும் நமக்குள தாக
வெவ்வுறு பயிர்விட்டு விழற்குநீர் பாய்ச்சல்போல்
இந்திநம் சிறுவர் கற்றல் வேண்டுமாம்!
இந்தி வரிவடிவு ஏற்றல் வேண்டுமாம்!
நந்தமிழ் உடைமை நலம்பே ணுதற்கும்
இந்தியில் தான்முறி எழுதிடல் வேண்டுமாம்.
பொதுப்பணித் தேர்வில் புகுந்திட விரும்பின்

அதற்கும் இந்தி அறிவே வேண்டுமாம்.
செந்தமிழ்ச் சாலைமேற் செல்வார்க்கு வழிசொல
இந்தி அறிக்கைதான் இருத்தல் வேண்டுமாம்!
அருந்தொடர் வண்டி அஞ்சல் துறையினும்
இருந்ததமிழ் இடமும் இந்தி பறிக்குமாம்.
கணக்கு வழக்கெலாம் கலக்குமாம் இந்தி!
வணக்கம் சொல்வதும் இந்தியில் வந்திடும்!
"பிழையற இளைஞர் பெண்டிர் இனிமேல்
எழுந்திடுங் காதலை இந்தியில் இயம்புக"
என்குவர் போலும்! யாதிவர் சூழ்வே!
தில்லியும் அவர்தம் திறம்பணிந்து தமிழைக்
கொல்லுதமிழ் அரசும் கூறுவ தென்ன?
தாய்மொழி தாழ்வாம்! தமிழகச் சிறுவர்
வாயிலும் நுழையா இந்திதான் மேலாம்!
தாயகம் சிறிதாம்! தற்செய லாக
வாய்ந்த வடக்கர் ஆட்சியே பெரிதாம்!
பாரதத் தாயின் பாதம்தான் தமிழாம்!
பாரதம் போற்றினல் பழகுதமிழ் சிறக்குமாம்!
இதைஉணர் வதுதான் இந்தியப் பற்றும்!
எதிர்ப்பவர் நாட்டுக் கிரண்டகம் செய்வராம்!
என்னே இந்தியப் பற்றுகொல் இதுகாண்!
சென்னையாம் பெயரையும் தமிழகம் ஆக்கிலர்;
முன்னூறு தமிழுக்கெள் முனையும் துணையிலர்.
ஒன்றெனத் தொடர்புகொள் உலகினர்க் கெல்லாம்
இந்தியப் பண்பென வடவர்பண் புரைப்பர்.
இந்தியக் கலைஎன வடகலை விளக்குவார்;
இந்தியர் திறம்என வடவர்திறம் காட்டுவார்;
இந்திய இலக்கியம் இந்திய நெறிஎன
அந்த வடக்கர்க் கமைந்ததே பரப்புவார்.
நந்திருக் குறளும் நந்தாச் சிலம்பும்
ஒண்பதின் பாட்டும் எண்டொகைச் செல்வமும்
ஏதோ எங்கோ மூலையில் எழுந்தவாம்!
அவையும் ஆரியர் அடியொற் றியவாம்
இப் பொய்யை, இழிவை எதிர்த்தல் இலாமல்
இங்குள தமிழர்நாம் இந்தியப் பெயரால்
மாபா ரதமும், இராமா யணமும்
பார்ப்பான் உயர்வைப் பகர்மனு நூலும்
காளி தாசன் காதையும் கண்ணன்
ஓதிய கீதையும் உபநிட தங்களும்
நமவென நச்சி நாளெலாம் ஓதி
இமயப் பெருமை இயம்பவும் வேண்டுமாம்.
அமையும் ஒற்றுமை இதுதான் போலும்!
ஆரியப் படையின் அணிபுறங் கண்ட

சீர்நெடுஞ் செழியன் சிறந்தவன் அலனோ?
காழிம யத்துப் புலிக்கொடி பொறித்த
சோழன் எய்திய சுடர்புகழ் சிறிதோ?
கங்கையும் இமயமும் கடந்து கற்கொண்டு
புன்தலை வடக்கர் முடித்தலை நெரித்த
செங்குட் டுவனின் சிறப்பினுக் கிணையார்?
வங்கம் கடாவி வாள்நெடும் படையால்
கடாரம் சாவகம் காழகம் ஈழம்
அடங்க வென்றங் கடலர சோச்சிய
இராச ராசனுக் கெய்துகுறை என்ன?
''நெல்லு முயிரன்றே, நீருமுயி ரன்றே!
மன்னன் உயிர்த்தே மலருல'' கென்றும்,
''மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்,
பிழைஉயிர் எய்தின் பெரும்பே ரச்சம்,
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
துன்ப மல்லது தொழுதக வில்''லென்றும்
நெறியொடு நின்று முறைஇறை பிறழாப்
பெரும்புகழ் நாட்டிய விறல்வேந் தர்க்கும்
குறைவோ இங்கு? கொஞ்சம் எண்ணுமின்!
இத்தனைப் பெயரும் இருக்கஅவ் வடக்கர்
ஒற்றைப் பெயரும் உரைக்கிலர் தமிழ்ப் பெயர்;
முற்றும் வடவரசர் புகழே முழக்குவர்!
இத்தமிழ் அரசரும் இந்தியர் அலரோ?
கத்தி பிடிக்கத் தெரியாக் கோழையும்
வடக்கிற் பிறந்தால் வரலா றுண்டே!
அடல்தமிழ் அரசர்க் கியாதிங் குண்டு?
அசோகன் குப்தனுக் களித்த இடத்தினை
இசைத் தமிழ் மன்னவர்க் கிந்தியா தந்ததா?
வடமொழி, இந்தியை வளர்த்து வரற்கே
'மடப்'பணி தொடக்கினர்; வான்பொருள் வழங்கினர்!
கெடலறு தமிழில் பயிற்று முறைக்கும்
இடமிலை என்றே கையை விரித்தனர்.
இதற்கோ சரிநிகர் உரிமை எனப்பெயர்?
இந்தியத் தாலே என்பயன் பெற்றோம்?
ஆங்கிலர் அளித்த அடிப்படை உரிமையும்
ஈங்குவல் லாட்சியால் பறித்த திந்தியம்!
வாணிகப் பெயரால் வடவரிங் குற்றுப்
பேணுபொருள் சுரண்டப் பிணைத்ததும் இந்தியம்!
வானொலி என்று வழங்கிய பெயரினை
'ஆகாச வாணி' ஆக்கிற் றிந்தியம்!
வள்ளுவர் ஆண்டு வழங்குதமிழ் நிலத்தில்
சாக ஆண்டு நுழைந்த தெற்றுக்கோ?
காவல் நிலையம் கழன்றதும் ஏனோ?

தண்டல் நாயகம் தவிர்த்ததும் எதனுல்?
இந்தியம் வழங்கிய பரிசிலை அலவோ!
எங்ஙனம் இந்தியப் பற்றெழும் நமக்கே?
ஒத்த உரிமையர் ஒற்றுமை பேசுதல்
நற்றிற வளர்ச்சிக் கறிகுறி எனலாம்;
நரி ஆட்டின்முன் ஒற்றுமை நவின்ருல்
உரிமை என்றதை ஆடுகள் ஏற்குமா?
பைந்தமிழ் மறவீர்! பழந்தமிழ் அன்னையீர்,
குந்தி முடங்கிக் கிடந்தது போதும்!
பண்டைப் பெருமை நிலைபெற எழுமின்!
தண்டமிழ்மே லாணை சாற்றி எழுமின்!
இந்திவல் லாட்சி ஈசலாய் அழியச்
''செந்தமிழ்! செந்தமிழ்! செந்தமிழ்'' என்றே
இந்தியர் செவிப்பறை கிழிய முழக்குவோம்!
விரிந்தநோக் கிலம்என வீண்பறை அறைவார்
விரிந்த நோக்கம் நமக்கா இல்லை?
விரும்பின் நாம்போய் விண்ணினும் மண்ணினும்
பரந்துயர் பன்மொழியும் பழுதறக் கற்போம்.
இரும்பு கைக்கொண்டவர் ''இந்திகல்!'' என்றே
வருந்தித் திணித்தால் வாளா இருப்பமா?
எதிர்த்திடல் இன்றி ஏற்கவா செய்வோம்?
கொதித்தெழ மாட்டமா கொடுமை தவிர்க்க?
இப்பெரும் போரின் உட்பொருள் புரியா(து)
ஒப்புதல் இன்றி உம்மிற் சிலபெயர்
''ஆரர சிருந்தென்? ஆர்கொடி பறந்தென்?
சோறுந் துணியும் கிடைத்திடும் பொழுது
வேறென்ன வேண்டும்? விழுங்கியா விட்டார்?
வேண்டா நமக்கிவ் வீண்தொழில்'' என்றே
தூண்டிப் பிறரையும் தளர்த்துதல் கூடும்.
அன்னவர்க் குரைப்பேன்; அன்புடைத் தமிழரீர்,
மன்னுயிர் வாழ்க்கை சோற்றினல் அன்றே!
புன்புலால் யாக்கைப் புலனுகர் வன்றே!
உயர்ந்த உணர்வுகள் உயர்செயல் உயர்கலை
பயிலு நல்லறம் பண்புகள் மலருறும்
உள்ளச் சிறப்பால் உயர்வது வாழ்க்கை.
உள்ளச் சிறப்பால் உயர்வது வேண்டின்
தெள்ளிய அறிவின் திறம்பெறல் வேண்டும்;
தெள்ளிய அறிவின் திறம்பெறல் வேண்டின்
தூயநல் லுணர்வு சுரந்தெழல் வேண்டும்!
தூயநல் லுணர்வு சுரந்தெழல் வேண்டின்
தாய்மொழி உணவு தரப்பெறல் வேண்டும்
தாய்மொழி உணவு தரப்பெறல் வேண்டின்

(67-ஆம் பக்கம் பார்க்க)

வேண்டாம் "நச்சுத் தேர்வு"

(நடுவணரசின் விடாப்பிடியான இந்தித் திணிப்பை ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியினர் மட்டுமோ, உண்மைத் தமிழ்ப் பற்றுள்ளார் ஒரு சிலரோ எதிர்க்கவில்லை; அத்தகைய திணிப்பு நடுநிலை நோக்காளர் எல்லாராலும் கண்டிக்கப்பெற்று வருகின்றது. இக் கட்டுரை 'தினமணி' எழுதிய 14—8—64-ஆம் நாளைய ஆசிரிய உரையாகும். கட்டுரையிலிருந்த பெரும்பாலான வட சொற்களை நீக்கித் தனித் தமிழில் தந்துள்ளது மட்டும் நம் வேலை! மற்றபடி கருத்துகள் முற்றும் 'தினமணி' ஆசிரியர் கூறியனவே! தமிழர் என்று சொல்லிக் கொள்பவர்கள் நடத்தும் நாள், கிழமை, திங்கள் தாள்களின் ஆசிரியர்கள் தம் தொடை நடுங்கித் தன்மையாலும், அரசினர்க்கு வால் பிடிக்கும் தன்மானம் மாண்ட செயலாலும் கூறத்தயங்கும் உண்மைகளை, தமிழ் நலத்தில் முற்றும் கருத்தூன்றாத 'தினமணி' கூறுவதைப் பல்லாற்றானும் பாராட்டுகின்றோம். பேதையர் படித்துத் தெளிக; கோழையர் கூன் நிமிர்ந்தெழுக! —ஆர்.)

இந்தியப் பதவிகளுக்கான போட்டித் தேர்வை 1965-ஆம் ஆண்டு முதல் இந்தியிலும் எழுதலாம் என்பது உண்மையாக ஒரு நச்சுத் தேர்வே! இதனால் விளையக்கூடிய கெடுதல்கள் ஏராளம். அவற்றில் மூன்று குறிப்பிடத்தக்கவை. "நல்லாட்சிக்கு இது தீங்கு விளைவிக்கும். தேசிய ஒருமைப்பாட்டு உணர்வுக்கு உலை வைக்கும். இந்தி தாய் மொழியாக இல்லாதவர்களுக்கு இணை வாய்ப்பை மறுப்பதன் காரணமாக பிரிவினை மனப்பான்மையை இது வளர்த்துவிடும்".எனவே நாட்டின் நிலையான நன்மையில் அக்கறையுள்ள எல்லாருமே மறுப்புக் குரலைக் கொடுத்து, இந்தத் தவற்றைத் திருத்தியாக வேண்டிய நிலைமையைத் தோற்றுவித்தாக வேண்டும்.

இந்தித் திணிப்பை எதிர்ப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினரோ, பிற அரசியல் துறைப் பணியாளர் மட்டுமே என்றோ நினைப்பது தவறு. நான்கு தென் மண்டில மாநிலங்களிலும் பேராயக் கட்சியின் கட்டுப்பாட்டில் இருப்பவர்கள் தவிர, மற்ற எல்லாருமே இதை மறுக்கிறார்கள். இந்தி தாய் மொழியாக உள்ளவை தவிர, பிற மாநிலங்களிலும் போதுமான எதிர்ப்பு இருந்து வருகிறது. வங்காளமும், அசாமும் தென் மாநிலங்களைப்போலவே இந்தி வெறிப் போக்கைக் கட்டோடு எதிர்க்கின்றன.

அரசியல் நோக்காளர் மட்டுமின்றி, கல்வித் துறையினரும், ஆய்வாளரும், அறிவாளிகளான பொது நல ஊழியர்களும் கொடுத்துள்ள எதிர்ப்புக் குரலை பொருட்படுத்தாமல் இருக்க முடியாது. எடுத்துக் காட்டாக 'இந்திய பொதுப்பணி துறை' ஆணையாளராக முப்பது ஆண்டுகள் பணியாற்றிச் சென்னை அரசின் தலைமைச் செயலாளராகப் பதவி பெற்றுத் தமிழின் வளர்ச்சிக்காக இடையறாது உழைத்து, எல்லாரின் நன்மதிப்பையும் பெற்று, இப்பொழுது ஓய்விலிருக்கும் திரு. எசு.

வேங்கடேசுவரன், பேராசிரியர் ஒருவர்க்குரிய நடுநிலைமையில் இருந்து கொண்டு வரவிருக்கும் ஏற்பாட்டின் விளைவுகளை ஆராய்ந்து செய்துள்ள எச்சரிக்கையைத் தலைமை அமைச்சரும் அவரின் தோழர்களும் மட்டுமின்றி, சென்னை அரசினரும் கவனித்து ஆய்ந்து பார்க்க வேண்டும் என்று விரும்புகின்றோம். இந்தி மாணவர்களுக்கு இதன்வழி அளவுக்கு மிஞ்சிய சலுகை கிடைத்துவிடாமல் இருப்பதற்காக "சரி செய்தல்" **(Moderation)** என்ற முறையைக் கையாளப் போவதாகச் சொல்வது வெறும் மயக்குவிக்கும் பேச்சு. இதைக் கவனித்து நுணுக்கமாக ஆய்ந்து பாராமல் முன்கூட்டியே, இந்தியில் விடை எழுதுவதற்கு ஏன் இசைவு கூற வேண்டும்? இந்தியில் விடை எழுதியாக வேண்டிய தேவை இப்பொழுது என்ன ஏற்பட்டுள்ளது? இந்த அடிப்படையான செய்தி பேராயக் கட்சியின் செயற்குழுவிலும், அமைச்சரவைகளிலும், சட்ட மன்றங்களிலும் விரிவாக ஆராயப்பட்டு, ஏற்றுக்கொள்ளப் பெற்றதாகத் தெரியவில்லை. சென்னை அரசினரோ, வேறு அரசினரோ "சரி செய்தல்" திட்டம் தனக்கு நிறைவளிக்கிறது என்று சொல்லிவிட்டால் போதாது. பொதுமக்களும், பல்கலைக் கழகங்களும், ஆசிரிய நிறுவனங்களும், அறிஞர் குழாங்களும் தமது கருத்துகளை வெளியிடுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். (1) இந்தியில் தேர்வு எழுதியாகவேண்டிய தேவை என்ன என்பதை விளக்க வேண்டும். (2) இந்தியில் தேர்வு நடத்துவதை ஆங்கிலத்தில் நடத்துவதுடன் ஒப்புநோக்கி, மதிப்பீடு, சரி செய்தல் முதலியவற்றை விளக்க வேண்டும். இவற்றை வெளியிட்டு நடவடிக்கைகளை அறிந்த பொதுமக்களின் கருத்துகள் திண்ணமாக வெளிப்படுவதற்கும், அதைக் கருத்திற்கொண்டு அரசினரின் கொள்கை உருவாவதற்கும் வாய்ப்பளிக்க வேண்டும். மாட்டு வாணிகத்தில் கைமேல் துணி போட்டுக்கொண்டு நடத்துகின்ற பேரம் போல, தில்லியிலுள்ள பேராயக் கட்சிக்காரர் ஒரு சிலரும், மாநிலங்களிலுள்ள அவர்களின் தோழர்களுமாகச்சேர்ந்து முடிவுகட்டி நாட்டின் மீது திணிக்கக்கூடிய செய்தி அன்று இது. இதைப் பொறுத்த எல்லாருமே, தெளிவாக உரியகாலத்தில்உணரச்செய்வது இன்றியமையாதது.

தொடக்கத்திலிருந்தே இந்தியை ஆட்சி மொழியாகப் பயன்படுத்தும் முறைகளில் மாநில அரசினர் நடவடிக்கை உரிமையைத் தம்மிடம் வைத்துக் கொள்ளத் தவறியது அடிப்படையான குறை. சென்னை அமைச்சரவை உட்பட, எல்லாரும் போதிய கடமையுணர்ச்சியுடன் நடந்து கொண்டிருந்தால் தேவையே இல்லாத நிலையில் நேர்மையற்ற வழி முறைகளில் இந்தியை அரசுத் துறையில் திணிக்கும் பேதைத் துணிச்சல் தில்லியில் தலை தூக்கியிருக்காது. அந்த முதல் தவற்றின் விளைவுதான், இப்பொழுது இந்தியில் இந்தியத் தேர்வுகளை நடத்த முற்பட்டுள்ள நிலைமை. இந்தத் தேர்வைப் பொறுத்த மட்டுமின்றி, ஆட்சித் துறையில் இந்தியின் வளர்ப்பு காரணமாகவும் சென்னையும் பிற அரசுகளும் போதிய கண்டிப்புக் காட்டவேண்டிய காலம் வந்துவிட்டது. மீண்டும் கூறுகிறோம்: ஆட்சித் துறையில் இந்தியைப் பரப்பவோ, இந்தியத் தேர்வுகளில் இந்திக்கு இடம் தருவதற்கோ சார்பாகச் சொல்லக்கூடியது எதுவுமில்லை. புதிய திட்டத்துக்கு, திரு. வேங்கடேசுவரன் எடுத்துக்காட்டியதுபோல எவ்வகை தேவையும் ஏற்படவில்லை. இன்னும் நெடுங் காலத்துக்கு இந்தத் தேர்வுகளுக்கு ஆங்கிலமே தேர்வு மொழியாக இருப்பதுதான் நேர்மையாகும். ○

தொடர் நாடகம். தொடர்ச்சி 3.

போர்மறவனும் காதலும்.

சியார்சு பெர்னார்டு சா.

தமிழில்: 'வழுதி'.

இரெய்னா: என்னைப்பற்றிக் கவலை வேண்டா. ஏதாவது வேட்டொலி கேட்டால் உடனேயே மெழுகுத்திரியை அணைத்து விட்டுக் காதுகளை நன்றாக மூடிக்கொண்டு படுக்கையில் படுத்துக் கொள்வேன்.

காதரின்: ஆமம்மா......கண்ணே......அப்படியே செய். நான் போய் வருகிறேன்.

இரெய்னா: சரி அம்மா.(ஒரு நொடிப்பொழுது உணர்வால் விம்முகின்றாள்.) அம்மா, அம்மா எனக்கு மகிழ்வு கிட்டட்டும் என்று வாழ்த்துங்கள் அம்மா (இருவரும் முத்தமிட்டுக் கொள் கின்றனர்) என் வாழ்க்கையிலே இன்றுதான் மிக மகிழ்வான இரவு; தப்பி ஓடும் பகைவர்கள் மட்டும் குறுக்கிடாதிருந்தால்.

காதரின்: படுத்துக்கொள், கண்ணே. அவர்களைப்பற்றி நினைக்காதே. (போகிறாள்).

உலூக்கா: (இரெய்னாவிடம், கமுக்கமாக) பலகணியைத் திறக்க வேண்டுமென்றால்...... இப்படி ஒரு தள்ளுத் தள்ள வேண்டும். (தள்ளிக்காட்டி மூடிவிடுகின்றாள்) மூடினபின் அடி யில் தாழ் இடவேண்டும். ஆனால் தாழ் இல்லை......

இரெய்னா: (தன் மதிப்புக் குன்றாமல், கடியும் குரலில்) சரி, சரி, மிகவும் நன்றி. சொன்னபடி செய்வதுதான் நல்லது... (உலூக்கா அழகு காட்டுகிறாள்) நீ சென்று வரலாம்.

உலூக்கா: [மெத்தனமாக] சரி; வருகிறேன்.[மிடுக்குடன் போகிறாள்]

[இரெய்னா தனியாக இருக்கவே மேலாடையைக் களைந்து இருக்கைமேல் விட்டெறிகின்றாள். இழுபேழை அருகில் சென்று, அங்கிருக்கும் படத்தை உற்று நோக்கி மகிழ்கின்றாள். சொல் லொணா உணர்வுகள் முகத்தில் துளும்பி நிற்கின்றன. அதனை முத்தமிடவோ, மார்போடணைக்கவோகூட அவள் மனம் இட மளிக்கவில்லை. மிகுந்த மதிப்புடன் அதனைக் கைகளில் எடுத்து வழிபடுபவள்போல் தலைக்குமேல் உயர்த்துகின்றாள்.

இரெய்ஞ: [படத்தைப் பார்த்துக் கொண்டே] என் உள்ளத்தின் உயர் பெருந் தலைவரே......இனி என்றும் உங்கள் பெருமையை உணராதவள்போல் நடந்துகொள்ளமாட்டேன்... மாட்டவே மாட்டேன். மாட்டவே மாட்டேன் [மதிப்போடு படத்தை வைத்துவிடுகின்ருள். புத்தக அடுக்கிலிருந்து ஒரு கதைப் புத்தகத்தை எடுக்கின்ருள். ஏடுகளை மெல்லப் புரட்டுகின்ருள். குறிப்பிட்ட பக்கத்தைத் திருப்பியதும் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வந்து கட்டிலில் சாய்கின்ருள்; படிக்க முயல்கின்ருள். ஆனல் அதற்குள் ஏதோ நினைவு வரவே, மீண்டும் கண்களை ஏறெடுக்கின்ருள்.] என் மறத்தலைவர்! என் மறத்தலைவர்!

தொலைவில் வேட்டொலி ஒன்று இரவின் அமைதியைக் கிழிக்கின்றது. இரெய்ஞ திடுக்கிட்டுத் திரும்புகின்ருள். மீண்டும், மிகஅருகில் இரண்டு வேட்டொலிகள் கிளம்புகின்றன இரெய்ஞ படுக்கையிலிருந்து துள்ளி எழுகின்ருள். இழு பேழையின் மேலுள்ள மெழுகுத் திரியை அணைக்கின்ருள். காதுகளை விரல்களால் அடைத்துக்கொண்டு, ஒப்பனை மிசைப்பலகை [மேசை] அருகில்ஓடி, அங்குள்ள விளக்கையும் அணைக்கின்ருள். மேலே கிறித்துவின் உருவத்துக்கெதிரில் தொங்கிக் கொண்டிருக்கும் இரும்புக் குண்டின் பளபளப்பும் பலகணிப் பலகைகளின் இடையே தோன்றும் விண்மீன் ஒளியும் தவிர வேறெல்லாம் ஒரே இருட்டு. மீண்டும் வேட்டொலி. அருகிலேயே பல வேட்டுகள் ஒருங்கே வெடிக்கும் ஒலி எழுகின்றது. அதன் எதிரொலி மறைவதற்குள், பலகணியின் அடைப்பான்களை வெளியிலிருந்து யாரோ இழுக்கின்றனர். பலகணி வழியாகத் தெரியும் வெள்ளொளியில் ஒரு மாந்தனின் கரிய உருவம் தோன்றுகின்றது. அடைப்பான்கள் மறுநொடியே அடைபடுகின்றன. மீண்டும் அறையில் இருள். ஆனல் அமைதியைக் கிழித்துக் கொண்டு இரைப்பொலி கேட்கின்றது........பின்பு எதையோ சுரண்டும் ஒலி. அறையின் நடுவில் நெருப்புக்குச்சி கிழிக்கப்படுகின்றது.

இரெய்ஞ: [படுக்கையில் பதுங்கிக்கொண்டு] யார் அங்கே [நெருப்புக் குச்சி ஒளி அணைகின்றது] யார் அங்கே? யார் அது? ஓர் ஆண் குரல்: (இருளில், அடங்கிய, ஆனல் அச்சுறுத்தும் குரலில்) உசு...கத்தாதே! ..சுட்டுவிடுவேன்...ஒன்றும் செய்யாமல் இரு ..உனக்கு ஒரு தீங்கும் வராது. [இரெய்ஞ படுக்கையை விட்டெழுந்து கதவை நோக்கி நடக்கும் ஒலி கேட்கின்றது.] கவனம் ஓடிப் போக முயன்ருல் நடவாது ..

இரெய்ஞ: சரி, யார்?

அக்குரல்: [எச்சரித்து] இதை மட்டும் தெரிந்துகொள். நீ குரல் எழுப்பினுல், என் வேட்டுக் குறுங்குழல் வெடித்து

விடும். [கட்டளையிடும் குரலில்] விளக்கேற்றிவை. நீ யாரென்று நான் பார்க்கட்டும் காதில் விழுகிறதா? [ஒரு நொடி அமைதி, இழு பேழையருகில்போய் இரெய்னு மெழுகுத் திரியை ஏற்று கின்றாள். ஏறத்தாழ முப்பத்தைந்து அகவையுடைய ஒருவன் அங்கு நிற்கின்றான். கண்ணை உறுத்தும் காட்சி. சேறும், குருதியும் உறைபனியும் உடலெல்லாம் படிந்துள்ளன. செர்பிய தகரி[பீரங்கி]ப்படைத் தலைவனுக்குரிய நீல உடையை அணிந் துள்ளான். அது கிழிந்து தொங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த மங்கிய ஒளியிலிருந்தும் அவனது அழுக்கேறிய தாறுமாறான தோற்றத்திலிருந்தும் தெரியமுடிவது இதுதான். நடுத்தர உயரம்; தனித்தன்மை விளங்காத பொதுத் தோற்றம். வலிமையான கழுத்து; தோட்பட்டைகள். விடாப்பிடியை காட்டும், வட்ட மான தலை. குறுகிய பொன்னிறச் சுருள்மயிர். விரைந்து சுழலும் தெளிவான கண்கள்; நல்ல புருவங்கள்; சீரிய வாய். ஆயினும் சற்றும் கலையுணர்வைத் தூண்டாத வறட்டு மூக்கு–வலிய மனம் படைத்த குழந்தை மூக்கைப் போல. படை மறவனுக்குரிய எடுப்பான, துடிப்பான தோற்றம்; சுறுசுறுப்பான நடை; பெரிய துன்பச் சிக்கல் நடுவிலும், சற்றும் கலங்காத அறிவு. சற்று நகைச் சுவை உணர்வு.–வந்த வாய்ப்பை விட்டுவிடவோ, அல்லது வலியச்சென்று கிளறவோ நினைக்காத நகை உணர்வு அது. இரெய்னுவைப் பார்த்தவுடன், அவள் தன்மை, அகவை குமுகப்படிநிலை பண்பு எந்தஅளவு அவள் அஞ்சியிருக்கின்றாள் இவற்றையெல்லாம் நினைத்துக் கொள்கிறான்; சற்று மதிப்போடு ஆனால் மிகவும் உறுதி வாய்ந்த குரலில் பேசுகிறான்.)

நான் உனக்குத் தொல்லை கொடுப்பதற்காக, என்னை மன் னித்துக் கொள். என் உடையைப் பார்த்தால் தெரிகிறதல்லவா! செர்பியப் போருடை! நான் மாட்டிக் கொண்டால் என்னைக் கொன்று விடுவார்கள்.

இரெய்னு: ஊம் ..

அவன்; நான் முடிந்தவரை கொல்லப்படாமலிருக்கத் தான் எனக்கு எண்ணம். [மேலும் அச்சமூட்டும் குரலில்] புரிகிறதா? [கதவை விரைவாக, ஆனால் ஓசையில்லாமல் பூட்டி விடுகின்றான்.]

இரெய்னு: [சற்றும் பணியாமல், வெறுப்புடன்] புரிய வில்லை என்றுதான் நினைக்கின்றேன். (அவள் மிடுக்குடன் நிமிர்ந்து நின்று அவனை எதிர்நோக்கிப் பார்த்துக் கொண்டே குத்தலாகப் பேசுகிறாள்.] சில படை மறவர்கட்குச் சாவதற்கு அச்சம்... இஃது எனக்குத் தெரியும்.

அவன்: [வருத்தம் தோய்ந்த நகையுடன்] சிலர் மட்டு மல்லர்... படைமறவர்கள் எல்லாருமே அப்படித்தான், அம்மா,

எல்லாருமே அப்படித்தான் · எவ்வளவு நாள் உயிர் வாழ முடியுமோ அவ்வளவு நாள் உயிர்வாழ வேண்டுவது எங்கள் கடமை. நில். கூச்சல் போட முயன்ருல்...

இரெய்ஞ: [வெடுக்கென] சுட்டுவிடுவாய்; அவ்வளவு தானே! நான் சாக அஞ்சுகிறேன் என்று உனக்கெப்படித் தெரியும்?

அவன்: (விரகுடன்) சரி. நான் உன்னைச் சுடவில்லை என்று வைத்துக்கொள், என்ன நடக்கும்? உங்கள் குதிரைப் படை மறவர்கள் உன்னுடைய இந்த அழகான அறைக்குள் தாறுமாருக ஏறிவிழுந்து...ஒரு பன்றியைப்போல என்னை அடித்துக் கொல்லத்தான் நினைப்பார்கள்; ஆனல், நான் என்ன, அவர்கள் என்னை வேடிக்கைப்பொருளாகத் தெருவில் இழுத்துச் செல்ல விட்டுவிடுவேஞ? ஒருகை பார்த்துவிட்டுத்தான் சாவேன். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று எனக்குத் தெரியும். அப்படிப்பட்டவர்களை இப்பொழுது நீ அணிந்திருக்கும் அரை குறை ஆடையோடு வரவேற்க உனக்கு விருப்பந்தாஞ? [இது பற்றித் திடுமென நினைவூட்டப்பட்ட இரெய்ஞ, தான் [மெல்லிய] இரவாடை அணிந்திருப்பதை உணர்ந்து தன்னையறியாமலே உள்ளங் குறுகுகின்ருள்; ஆடையை இழுத்துக் கழுத்தைச் சுற்றி இறுக மூடிக் கொள்கின்ருள். அவன் அவள் செய்கைகளைக் கவனிக்கின்ருன்...சற்றும் இரக்கமில்லாமல் கூறுகிருன்] பிறர் பார்க்கத் தகாத நிலை... இல்லையா? [அவள் இருக்கையை நோக்கித் திரும்புகின்ருள். அவன் தன் கை வேட்டெஃகத்தை உயர்த்திக்கொண்டு] நில்! [அவள் நிற்கிருள்] எங்கே போகிருய்?

இரெய்ஞ: [பெருமிதமான பொறுமையோடு] மேலாடையை எடுக்க......

அவன் [விரைந்து இருக்கையருகு சென்று, மேலாடையைக் கையில் தூக்கிக் கொள்கிருன்] இதுவும் நல்லதுதான்! இது என் கையிலேயே இருக்கட்டும். வேறு யாராவது இங்கு வந்து உன்னை இந்த நிலையில் பார்க்க நீ விரும்பமாட்டாயல்லவா! கை வேட்டெஃகத்தைவிட இதுவே நல்ல படைக்கருவி...... இல்லை? [அவன் கை வேட்டெஃகத்தை இருக்கைமேல் விட்டெறிகிருன்.]

இரெய்ஞ [மனம் குலைவுற்று]... ஒரு பெருமகனுக்குரிய படைக் கருவியா அது?

அவன்: சாவுக்கும் தனக்குமிடையில் நீ ஒருத்தியே தடுப்பாக நிற்கும் நிலையில் உள்ள ஒருவனுக்கு இது போதும். [இருவரும் ஒரு நொடிப்பொழுது ஒருவரை ஒருவர் பார்த்து நிற்கின்ற

னர். ஒரு செர்பியப் படை மேலாளன் (Officer)கூட இவ்வளவு வெறுப்பு மனப்பான்மைக்காரனுகவும் தன்னலக்காரப் பண்பிலி யாகவும் இருப்பான் என்பதை நம்ப முடியாதவளாய் இரெய்னு நிற்கின்ருள். திடுமெனப் பல வேட்டுகள் ஒருங்கு வெடிக்கும் ஓசை எழுந்து அவர்களை அதிரச் செய்கின்றது. சாவு நெருங்கு கின்றதென்பதால் ஏற்பட்ட நடுக்கம் அம்மாந்தனின் குரலைத் தாழ்த்துகின்றது.] தெரிகிறதா? நீ அவர்களை இங்கே அழைத்து என்னைப் பிடித்துக் கொடுப்பதாயிருந்தால் நீ இப்பொழுது இருக்கும் நிலையிலேயேதான்...அவர்களை வரவேற்க வேண்டும்.

(பேர் அரவமும்...குழப்பமும்! தெருவில் ஓடி வருபவர்கள் வீட்டுக் கதவை இடித்துக்கொண்டு கூவுகின்றனர்.) கதவைத் திறவுங்கள்! கதவைத் திறவுங்கள்...... திறக்கமாட்டீர்கள்?...... (உள்ளிருந்து பணியாள் ஒருவனின் குரல் சினத்துடன் வெளிப் படுகின்றது) இது படையாள்நர் (Major)பெட்காஃபின் இல்லம் தெரிகிறதா. நீங்கள் உள்ளே வர முடியாது (மீண்டும் ஆர வாரம் கதவில் மோதல்கள்... இறுதியாக ஏதோ சங்கிலி கழன்று விழும் ஓசை... காலடிகள் தடதடவென்று உள்நுழையும் ஒலி... மகிழ்ச்சிக் கூக்குரல்... இறுதியாக, காதரின் அம்மையார் படை ஞன் ஒருவனிடம் சினத்துடன் பேசும் ஒலி)...

இதெல்லாம் என்ன ஐயா? நீங்கள் யார் வீட்டில் வந்திருக் கிறீர்கள் என்று தெரியுமா? [ஆரவாரம் உடனே அடங்குகிறது]

உலூக்கா: [படுக்கை அறையின் வெளியே நின்று தட்டு கின்ருள்] அம்மா, அம்மா, சீக்கிரம் எழுந்து கதவைத் திற வுங்கள். நீங்கள் திறவாவிட்டால் அவர்கள் உடைத்து விடு வார்கள் போலிருக்கிறது.

எல்லாம் முடிந்தது என்பதை உணர்ந்ததுபோல் அவன் தலையை அசைக்கின்ருன். இரெய்னுவை அச்சுறுத்துவதற் காகத்தான் இதுவரை தான் நடந்துகொண்ட முறையைச் சடக்கென மாற்றிக் கொள்கின்ருன்.

அவன் (உண்மையாகவும், பரிவுடனும்) இனிப்பயனில்லை ...கண்ணு!—நான் செத்தேன். (மேலாடையை அவள்பால் வீசி எறிகிருள்) சடுத்தம்... ஆடையைச் சுற்றிக்கொள். அவர்கள் வந்துவிட்டார்கள்.

இரெய்னு:...ஆ!...மிகவும் நன்றி.(பெருமகிழ்வோடு ஆடை யைப் போர்த்துக் கொள்கின்ருள்)

அவன்: [பல்லைக் கடித்துக்கொண்டு]... அதற்கென்ன... அதற்கென்ன

இரெய்னு: [கவலையுடன்]...நீர்என்ன செய்யப்போகிறீர்?

அவன்: [துயரழுத்தத்துடன்...] உள்ளே நுழைகின்ற முதல் மாந்தன் அதைத் தெரிந்துகொள்வான்...நீ வழியில் நில்லாதே... நடக்கப்போவதைப் பார்க்கவும் வேண்டாம்...எல்லாம் சுருக்கமாய் முடிந்துவிடும்தான்...... இருந்தாலும் அவ்வளவு நன்றுயிராது ...[தன் உடை வாளை உருவிக் கொண்டு கதவை நோக்கித் திரும்பி நிற்கின்றுன்]

இரெய்னு: (உணர்ச்சிப் பரபரப்போடு) நான் உமக்குத் துணை செய்கிறேன்...உம்மைக் காப்பாற்றுகிறேன்.

அவன்: உன்னுல் முடியாது.

இரெய்னு: முடியும்.. உம்மை மறைத்து வைத்து விடுவேன். (அவனைப் பலகணி அருகில் இழுத்துச் செல்கின்றுள்) இங்கே!—திரைகளுக்குப் பின்னே...... ஒளிந்து கொள்ளும்.

அவன்: (சரி என்று ஒப்பி) ஏதோ அரைகுறை வாய்ப்பு .. நீ மட்டும் மூளையோடு நடந்து கொண்டால்...

இரெய்னு: (திரையை இழுத்து அவனைமூடி) உசு!... (இருக்கையை நோக்கிச் செல்கின்றுள்)

அவன்: (தலையை நீட்டி) நினைவிலிருக்கிறதா?

அவள்: (அவனருகில் ஓடிச் சென்று) என்ன?

அவன்: படைமறவர்கள் பத்துக்கு ஒன்பது பெயர்கள் பிறவி முட்டாள்கள்.

இரெய்னு: என்ன இது! (சினத்துடன் திரைகளை மீண்டும் இழுத்து விடுகின்றுள்)

அவன்: (மறுபக்கமாக எட்டிப்பார்த்து) அவர்கள் என்னைக் கண்டு கொண்டால் உனக்குப் பார்த்து மகிழ ஒரு போராட்டம் பேயைப்போல், போராடுவேன் நான்...

அவள்: [அவன் காலை மிதிக்கின்றுள். அவன் சடக்கென உள்ளே மறைந்து கொள்கின்றுன். அவள் தன் மேலாடையைக் களைந்து கட்டில் காலில் தொங்க விடுகிறுள். தூங்கி எழுந்தவள் போல் கண்ணைக் கசக்கிக் கொண்டு கதவைத் திறக்கிறுள்; உலூக்கா பரபரப்புடன் உள்ளே நுழைகிறுள்.]

உலூக்கா: அந்த செர்பியப் பயல்களில் ஒருவன், தூம்பு வழியாகத் தட்டொட்டியில் ஏறினுனும் அதைப்பார்த்து விட்டார்களாம் .. அவனைத் தேடவேண்டுமாம் இங்கே ..

எல்லாரும் ஒரே குடிவெறியில் .. காட்டுத்தனமாகவும் சினமாக வும் இருக்கின்றனர். (கதவிலிருந்து விலகி அறையின் மறு பகுதிக்குச் செல்கிருள்...) பெரியம்மா சொல்கிருர்கள் நீங்கள் ஆடையணிந்து கொண்டு உடனே... (இருக்கையிற் கிடக்கும் கைவேட் டெஃகத்தைக்கண்டு... கல்லாய்ச் சமைகின்ருள்)

இரெய்ஞ: (தொல்லையால் எரிச்சலுற்றவள் போல) அதெல்லாம் இங்கே வந்து தேடக் கூடாது... அவர்களை ஏன் உள்ளே விட்டீர்கள்?

காதரின்: (விரைவாக வந்து,)... இரெய்ஞக் கண்ணு! உனக்கு ஒன்றுமில்லையே... நீ எதையாவது பார்த்தாயா? அல்லது கேட்டாயா?

இரெய்ஞ: வேட்டு ஒலியைக் கேட்டேன்... படைமறவர் கள் இங்கெல்லாம்... வரத்துணியமாட்டார்களே...

காதரின்: கடவுள் செயலாக, இங்கே ஓர் உருசிய மேலாளரைப் பார்த்துவிட்டேன். செருசியசுக்குத் தெரிந்தவர் (கதவை நோக்கி வெளியே இருப்பவரிடம் பேசுகிருர்) இப் பொழுது நீங்கள் உள்ளே வரலாம், ஐயா... என்மகள் உங்களை வரவேற்பாள்.

(இளைஞனாகிய ஓர் உருசியப் படைமேலாளன்,பல்கேரியப் போருடையில், கையில் வாளுடன் உள்ளே நுழைகின்ருன்)

படைமேலாளன்: (பழகிய நாய் போன்று அமைதியான பணிவோடும் அதேபோது படைமறவனுக்குரிய விறைப்பான தோற்றத்தோடும்)... வணக்கம் அம்மா... உங்களுக்குத் தொல்லை கொடுப்பதற்காக வருந்துகின்றேன்... அருள்கூர்ந்து. நீங்களும் அம்மாவும் கொஞ்சம் அப்பால் போய்விடுகிறீர்களா? நாங்கள் தேடிப்பார்க்கிருேம்.

இரெய்ஞ: [சினத்தோடு சிணுக்கம்காட்டி]...யார் சொன் னது? வெறும் முட்டாள்தனம்... பாருங்களேன் தட்டொட்டியில் ஆள் யாருமே இல்லையே!... [அடைப்பான்களை அகலத் திறந்து விட்டு, திரைகளைத் தன் முதுகால் மறைத்துக் கொண்டு, திறந் திருக்கும் தட்டொட்டியைச் சுட்டுகின்ருள். பலகணிக்குக் கீழிருந்து இரண்டு குண்டுகள் சுடப்பெறுகின்றன. இரெய்ஞ வுக்கு எதிராக இருக்கும் கண்ணுடியை ஒரு குண்டு துளைக்கின் றது. இரெய்ஞ முகத்தைச் சுளித்து அதிர்ச்சியுறுகின்ருள்... ஆயினும் இடத்தைவிட்டு அசையவில்லை. காதரின் அம்மை யார் 'கிறீச்'சென அலறுகிருர். படை மேலாளன் எச்சரிக்கை யாயிருங்கள் என்று கத்திக்கொண்டு தட்டொட்டியை நோக்கி ஓடுகின்ருன்]

[தொடரும்.]

கற்பனே ஊற்று. மெய்ம்மைப்பித்தன்.

மெய்யறிவு.

தாமரை முகைபோல் கவிழ்ந்திருக்கிற என் நெஞ்சாங் குலேயில் எங்கிருந்தோ வந்து பற்றி மணக்கின்ற அசைவுகளே என்னுல் உணர முடிகின்றது.

அந்த அசைவு என்னும் அவிழ்கின்ற முகையைச் சுற்றி நிஜனவென்னும் பசுமையான இலேகளில் முத்து முத்தாய்ச் சொரிந்திருக்கின்றன, ஒரு கோடி எண்ணங்கள்.

இவ்வுலக நிகழ்ச்சிகளென்னும் செங்கதிர்க் கைகளின் கனப்பால் அந்த எண்ணங்கள் சுண்டுகின்றன.

இவ்வுலகப் பொய்கையில் துளும்பும் நீர்த்திவலேகள் மீண்டும் மீண்டும் என் நெஞ்சில் நினேவுத் துளிகளாய்ப் படிகின்றன.

மீண்டும் மீண்டும் வாரி விழுங்கப் பெறுகின்றன.

உலகச் சுழற்சி இடையறுது நடைபெறுகின்றது.

வானின் விரிவு, என் கண்களின் இரண்டு கருவிழிகட்குள்ளிருக்கும் கடுகத்துணே ஒளித் துகள்களில் அடங்கி, என் மூளேயின் மடிப்புகளில் ஒடுங்கி, என் நெஞ்சத் தாமரையில் விரிந்து படர்கின்றது.

அப்பப்பா!

சுருட்டி வைக்கப்பெற்ற திரையினே அவிழ்த்து விரிப்பதுபோல், தோன் றித் தோன்றி வளர்கின்றன எண்ணங்கள்.

அவற்றின் அளவும் விரிவும் என் உறுப்புகளே மூடிக்கொண்டிருக்கும் அணுத் திரளேகளின் விரிவுக்கு அடங்காதனவாகி, இவ்வுலகத்தளவும் விரிந்து, அதற்கும் அடங்காது வளியுலவாத வானத்தின் வெற்றுப் பாழ் வெளிகளில் பற்றிப் படர்ந்து கொண்டிருக்கின்றன.

எங்கிருந்தோ,படிப்படியாக என்னே வந்தமுத்துகின்ற அவற்றின் விரிவில் நான் அசைவற்று நிற்கின்றேன்.

அகத்தே ஒளிர்ந்து விளங்கும் எண்ணங்கள்—மூளேயின் ஒவ்வொரு மடிப்பிலும் சுருண்டு கிடக்கும் அறிவுப் புதிர்கள்—இவற்றைப் புறத்தே அறிய முடியாதவாறு கப்பிக் கொண்டிருக்கும் பருவுடற் போர்வை!

கண்ணும், காதும், மூக்கும், வாயும், மெய்யும் ஒருவனின் உள் எண் ணங்களே வெளிக்குக் காட்டுவதில்லே.

இவ்வுலகத் தோற்றத்தின் எந்த மூலே முடுக்கிலும் இறையாற்றலின் மன அசைவும் அறிவு நோக்கமும் புறத்தே பார்ப்போருக்குப் புலப்படுவ தில்லே. அகத்தே நோக்குவார்க்கு அவரவர் அகமே அவ்வாற்றலாய் விளங்குகின்றதைக் காண்கின்றேன்.

மலர்க்குள் பொதிந்துள்ள மணம்!

நீர்க்குள் முடங்கிய தண்மை!

தழற்குள் ஒளிந்த வெப்பம்!

காற்றுள் முங்கிய் பேரொலி!

இவை புறத்தோற்றத்திற் புலப்படாத அகத் தோற்றங்கள்!
நீலவானத்துப் படிந்த குளிர்மை வண்ணம்!
இலைகளில் பரந்த பசுமை நிறம்!
சருகுகளில் தூவிய பழுப்புத் தோற்றம்.

இவற்றுள் நாம் காணும் உள் நிகழ்வுபற்றி ஓயாமல் எண்ணிக் குமைகின்றது என் நெஞ்சம்!

சேவலின் வெளிர்ந்த சிறகுகளை யாருமறியாது வந்து மொய்த்துக்கொள்கின்ற ஒளிச் சிதறல்கள்!

அதன் கொண்டையில் அமைந்த ஓவிய மொக்குகளின் செம்மைப் பூச்சு!

அதன் கால்களின் நெடுமைக்கு இணைந்து அடுக்கப்பெற்ற வளையங்களின் மஞ்சள் அடுக்கு!

அதன் நுனி விரல்களில் நீண்டு வளைந்த நகங்களின் திண்மை!

இவற்றை வெளிப் புறத் தோற்றங்கள் என்று எண்ணி ஒதுங்கிப் போக நான் விரும்பவில்லை.

இயற்கை என்ற ஒரே சொல்லில் நாம் நினைக்கின்ற அத்தனைப் பொருள்களுக்கும் வேர்ப்பொருள் இருப்பதாக எனக்குப் படவில்லை.

இயற்கை என்பது என்ன?
அவ்வியற்கையின் முனைப்பு என்ன? தோற்ற நோக்கம் என்ன?

கருவற்ற விதையில் உருவற்ற காயும், சுவையற்ற கனியும் விளைவது எங்கேனும் நாம் கண்டதுண்டா?

தீயின் வெம்மை பொருள் பொதிந்ததே!

அஃதேபோல் புனலின் தன்மையும் விண்டு விளக்கலாகாத பொருள் நிரம்பியதே!

ஒழுங்குபட இயங்கிக் கொண்டிருக்கும் ஓராயிரம் நாடி நரம்புகளின் புடைப்பும் ஒடுக்கமும் காரணமின்றி நடைபெறுமாயின், அதன் தோற்றத்தின் உள்நோக்கும், அதன் முடிவின் புற நோக்கும் என்னவாக இருக்கும் என்பதைப் பல்லாயிர முறைகள் எண்ணி எண்ணிச் சோர்வடைகின்றது என் நெஞ்சம்.

அறிவு என் மூளையில் சுடர் விட்டெரிந்து கொண்டிருக்கின்றது.

என் மூளைத் திரட்சியில் உள்ள கொழுப்புப் பசைகளில் கசியும் எண்ணெய் வற்றிப்போகும் அளவிற்கு என் அறிவுத்திரியைத் தூண்டிவிட்டு, ஆய்வு விளக்கை எரித்திருக்கின்றேன்.

புல்லின் மெல்லிய நுனிகள் வளைந்து போகுமாறு அரும்பியிருக்கின்ற பனித்திவலைகள் அப் புல்லின் வேரிலிருந்து வந்துவிடவில்லை என்பதை நாம் தெளிவாக உணர முடிகின்றது.

அந்தப் பனிநீர் முத்துகளின் பிறப்பிடம் வானமா?

அவ்வாறாயின் அவ்வானம் அப்பனிநீரை முத்து முத்தாய்ச் சிந்துவதன் நோக்கமும் பொருளும் எவை என்று என் நெஞ்சம் களைக்கக் களைக்க எண்ணுகின்றது.

மக்களைத் தட்டி எழுப்புகின்ற இளவேனில்!

எழுந்த உயிர்கட்கு வறட்சியை ஊட்டித் தண்ணீருக்கு அலைய வைக்கின்ற முதுவேனில்!

வறண்ட தொண்டைக்கு வானமிழ்தாய்ப் பொழியும் கார் காலம்!

காரில் விளைந்த வினையின் உள்ளீடு பெருக்கி ஊட்டம் மிகுக்கக் கூதிர்! இக்கூதிர்க்குப்பின் முதிரா உயிர்களின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் முன்பனி, பின்பனிக் காலங்கள்! இம் மண்ணுலகத்தின் அடுக்கடுக்காய் அமைந்த நில நீர்ப் பரப்பு! மலையும் மடுவும்; காடும், கானலும்; பனியும், வெப்பமும்!

இவற்றின் தோற்றமும் விரிவும், விளக்கமும் இயற்கை என்ற ஒரே சொல்லின் நான்கைந்து எழுத்துகளுள் அமைந்துவிடுமாயின் நம் அறிவின் விரிவுதான் என்ன?

அயர்வுறாத கண்களும்,

ஓய்விலாத செவிகளும்,

ஒழிவிலாத எண்ணங்களும், என் உள்ளத்தில் முழக்கமிட்டுக் கொண்டிருக்கும் ஆரவாரத்தின் பிறப்பிடம் எது?

அவ்வலைவுறும் ஓயாத எண்ணக் கடல் பற்றுகின்ற நிலையும் வற்றுகின்ற நிலையும் என்ன?

மழுக்கமும் விளக்கமும் ஏன்?

இருளுக்கும் ஒளிக்கும் புகலிடம் எது?

வானில் தாவித் தாவி, மீண்டும் மீண்டும் களைத்துப் போகும் மென் சிறகுகளுடன் தரையில் வீழும் முற்றி முதிராக் குஞ்சைப்போல், என் நெஞ்சம் களைத்து வீழ்கின்றது.

அக்களைப்பும் என் உள்ளத்திற்குக் களிப்பையே நல்குவது?

'சடக்'கென ஒடிந்து வீழும் வெள்ளிய அருவிபோல் என் அறிவு, வானிலிருந்து தரைக்கும், பாய்ந்து வந்து, துள்ளிய மீனைக் கவ்விக்கொண்டு விரைந்து வானில் தாவும் பழுப்புநிறப் பருந்துபோல் என் உள்ளம் தரையினின்று வானிற்கும் எதிரெதிராய்த் தாவிக் கொண்டுள்ளன.

இவற்றின் இழுப்புக்கும் விடுப்புக்கும் ஈடு கொடுத்துக் களைக்கின்றது என் உயிர்!

இவ்வுயிரின் தோற்றமும், முடிவும், இப் புறக்கருவிகளைப் பொறுத்ததென்னின், என்னைப்போல் புறக்கருவிகளை படைத்தார் எல்லாரும் இந்நிலையில் துன்புறக் கேளேனே!

அவர்க்கும் என்னுயிர்க்கும் உள்ள வேற்றுமைக்கு என்ன பெயர்?

இருளுக்கும் ஒளிக்கும் இடையில்உள்ள கீற்றுக்கு என்னபெயரிடலாம்? அப்பெயரை எண்ணிக் கொண்டே என் வாழ்வைக் கடத்துகின்றது என் உயிர்!

எழுதுவார்க்கு!

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந்துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வட சொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகின்றனர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் த க் கா ரி ட ம் காட்டிச் செப்பஞ் செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

மைக்கேல் காலின்சு

[1890-1922]

அயர்லாந்தின் விடுதலை மறவன்.

— வழுதி —

இன்று குடியரசு நாடாகத் திகழும் அயர்லாந்து [ஏரா] ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளாக ஆங்கிலேயரின் பிடியில் சிக்கி உரிமை யிழந்து கிடந்தது. அரசியல் உரிமையோடு ஐரிசு மக்களின் பண்பாட்டு உரிமையும் பறிக்கப்பெற்றது. அயர்லாந்தின் பழம் பெருமை வாய்ந்த கெயிலிக் மொழி அழிக்கப்பட்டு ஆங்கில மொழி அம் மக்கள்மேல் திணிக்கப்பட்டது. தாய் மொழி உணர்வும், தனித்த நாகரிகமும் முன்னைய வரலாற்றுணர்வும் சிறிது சிறிதாகச் சிதைக்கப்பட்டு அழிக்கப்பட்டன. ஐரிசு மக்களின் இனவுரிமைக் குரல் வெளி உலகில் ஒலிக்காதவாறு அரசியற் பூச்சுக்கள் பூசப்பட்டன. ஒற்றுமை, ஒத்து வாழ்தல், உடன் பிறந்தார் பிணைப்பு என்ற போலி மயக்குக் கருத்துகளை அம் மக்கள் முன் நீட்டி அவருள் ஒரு சாராரை உயர் அலுவல்களாலும் பிற சலுகைகளாலும் தன்பக்கம் இழுத்துக்கொண்டு அவர்தம் துணையால் மக்களின் உண்மையான இன எழுச்சியினை அவிக்க முயன்றது ஆங்கில அரசாட்சி. சுருங்கக் கூறின் இன்று இந்திய ஒற்றுமை, ஒருமைப்பாடு, ஒரே நாடு என்ற மயக்கவுரைகளால் இந்திய அரசு எவ்வாறு தமிழக மக்களின் தனித்த நாகரிகத்தினையும் பழம் பெரும் தனி வரலாற்றினையும் அமிழ்த்தி, இந்தித் திணிப்பால் தமிழ் மொழியினையும்படிப்படியாகப் பின்னுக்குத்தள்ளித் தன்வல்லாட்சியை நிலை நாட்ட முனைகின்றதோ அவ்வாறே இங்கிலாந்தும் அயர்லாந்தை அடிமைப்படுத்துவதில் முனைந்து நின்றது. ஆயினும் உண்மையாளர்தம் உள்ளத்தில் கனன்று பொங்கி நின்ற விடுதலைவேட்கையினை அவர்களால் அழித்துவிட முடியவில்லை. தலைமுறை தலைமுறையாக அயர்லாந்து மக்கள் ஆங்கில அரசினை எதிர்த்துப் போராடி வந்தனர். அடக்கு முறைக் கொடுங்கோலாட்சியின் வலுவினால், அவர்கள் நெடுங்காலம் வரை தம் உரிமையினை நிலைநாட்ட முடியாமற் போயிற்று. ஆயினும்

இனவுணர்வு பெற்றுவிட்ட மக்களின் உரிமைக் கிளர்ச்சியின் முன், எத்தகைய வலுவுள்ளதாக விருப்பினும், வேற்றுட்சி எத்தனை நாட்கள்தாம் நிலைத்திருக்கமுடியும்? மக்கள் போராட்டம் வென்றது. கடந்த 40 ஆண்டுகளாக அயர்லந்து மக்கள் தன்னுரிமை பெற்ற குடியரசினை அமைத்து, ஆங்கிலேயரினின்றும் முற்றிலும் வேறுபட்டவர்களாக வாழ்கின்றனர்.

இறுதியான விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நின்று மக்களின் உணர்வையும் செயலையும் ஒருமுகப் படுத்தி, அரசினரின் அடக்கு முறைக்கு ஆயிரக் கணக்கான உயிர்களைக் காவு கொடுத்தும் கலங்காமல், தளராமல், இறுதிவரை ஒரே மூச்சாகப் போராடி வெற்றிபெற்ற விடுதலை மறவர்களில் ஒருவனே மைக்கேல் காலின்சு என்னும் இளமறவன். அடங்கா இனவுணர்வும், சுறுசுறுப்பும், அஞ்சாமையும், துணிவும் பேரெதிர்ப்புகளின் நடுவிலும் சிதைந்து போகாத செயல் வன்மையும், ஈகமும் நிறைந்த அம் மறமகனின் வாழ்க்கை, எழுச்சியற்றுக் கிடக்கும் இற்றைத் தமிழர்க்கும், வகைமுறையறியாமல் முயற்சிகுன்றி மடியுற்றுக் கிடக்கும் அவர்தம் தலைவர்க்கும் சிறந்ததொரு பாடமாகும். 1890-ஆம் ஆண்டில் அயர்லாந்தில் சாம்சுகிராசு எனுமூரில் மைக்கேல் பிறந்தான்.

தந்தையாரின் பெயரும் மைக்கேல் காலின்சு என்பதே. தமது அறுபதாம் ஆண்டில் இருபது வயது நங்கையான மேரி ஆன் ஒபிரியனைத் திருமணம் புரிந்துகொண்டு கருத்தொருமித்த நல்வாழ்க்கை நடத்திய இம் முதியவரின் எட்டாவது குழந்தையாகப் பிறந்தவனே மைக்கேல் காலின்சு. தந்தை சிறந்த கல்வி அறிவும் பல்தொழில் திறனும் தாய்மொழிப் பற்றும் வாய்க்கப் பெற்றவர். ஆதலின் சிறுவனும் இளமையிலிருந்தே நல்லுணர்வுகளை வளர்த்துக்கொள்ளுதல் இயல்வதாயிற்று. நாலரை ஆண்டில் பள்ளிக்குச் சென்ற இச் சிறுவன், நாட்டுணர்வு மிக்க ஆசிரியரிடம் பயின்றமையால், தாய்மொழியுணர்வினையும், அயர்லாந்தியரின் பழம் பெரும் வரலாற்றறிவையும் பெற்றுவந்தான். படிப்பிலும் விளையாட்டிலும் சிறந்தவனானன். அறிவுப் பசிமிக்கவனாக, அயர்லாந்தின் முன்னைய நாள் மறவர்கள், சான்றோர்களின் வரலாறுகளைக் கற்பதிலும், பாடல்கள், கணக்கு நூற்கள், கலை நூற்கள் முதலியவற்றைக் கற்பதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினான். விடுதலையுணர்வைத் தூண்டும் நூற்களும் இதழ்களும் அவனுக்கு விருந்தாயின. நாட்டு விடுதலைக்கு வெற்றுக் கிளர்ச்சிகள், ஆர்ப்பாட்டங்கள் எப்பயனும் அளிப்பன அல்ல; திட்டமிட்டுச் செயற்படல் வேண்டும் என்பதை இளமையிலேயே அவன் உணர்ந்தான். ஊக்கமும், சுறுசுறுப்பும், திறமையும் வாய்க்கப்பெற்றவனாக வளர்ந்த அவ்விளைஞன் ஊதியம் கருதித் தொழில் புரியச் சிறிதும் விருப்பமற்றவனாக இருந்த

பொழுதினும், மெல்லிவடைந்து நோயுற்ற அன்னையின் விருப்பத்தினை நிறைவேற்றுதற்காக அஞ்சல் துறைக் கல்வி பயின்று இலண்டன் நகரத்தில் அஞ்சல் நிலையமொன்றில் கணக்கனாகப் பணியேற்றான். ஆயினும் ஓய்வு வேளைகளிலெல்லாம் அவனை ஆட்கொண்டிருந்தவை தாய் மொழியாகிய கெயிலிக் மொழியின் வளர்ச்சியும், வருங்கால விடுதலைப் போராட்டத்துக்கு இளைஞரை உருவாக்கும் முயற்சியுமே. கெயிலிக் மொழிக் கழகத்திலும், உடற்பயிற்சிக் கழகத்திலும் பங்குகொண்டு தன்போன்ற இளைஞர்களை ஒன்று கூட்டிவந்தான். அவன் கற்ற கல்வியெல்லாம் அப்பொழுது ஆட்சிமொழியாகி மதிப்புப் பெற்றிருந்த ஆங்கிலக் கல்வியேயாகலான், தன் தாய்மொழியாகிய கெயிலிக் மொழியினை அவன் அப்பொழுது கிடைத்த ஓய்வு நேரத்தில் தான் சிறிது சிறிதாகக் கற்றுவந்தான்.

அயர்லாந்து மக்களின் விடுதலைக்காகக் கமுக்கமாய் உழைத்து வந்தது 'ஐரிசு குடியரசுக் கழகம்' வெளிப்படையாக 'சின்பீன்' என்ற அரசியற் கட்சியும் இயங்கிவந்தது. மைக்கேல் குடியரசுக் கழகத்தின் இலண்டன் கிளையில் பொருளாளனாகப் பணியாற்றினான்.

1910-ஆம் ஆண்டுக்குப் பின், காலின்சு வாணிகக் குழுமங்களில் பணியாற்ற நேர்ந்தது. அப்பொழுது உலகப் பொருளியல் நுணுக்கங்களெல்லாம் அவனுக்குத் தெரியவந்தன.

முதல் உலகப் போர் தொடங்கிய வேளை அயர்லாந்து மக்களும் ஓரளவு கண்விழித்தனர். இங்கிலாந்தின் பிடியினின்று மீள அதுவே நேரம் என்று உணர்ந்தனர். குடியரசுக் கழகத்தின் சார்பில் விடுதலைத் தொண்டர் படை ஒன்று அமைக்கப் பெற்றது உணர்ச்சியற்று அடங்கிக் கிடந்த பொதுமக்களிடையே சிறிது சிறிதாக விடுதலை உணர்வு செலுத்தப் பெற்று வந்தது இங்கிலாந்து, தன்னைப் பின்பற்றும் அயர்லாந்து மக்கட்குச் சலுகைகள் காட்டிப் பொங்கி வரும் இன எழுச்சியைத் தடை செய்ய முயன்றது. அயர்லாந்தின் வட பகுதியில் அல்ஃச்டர் மாநிலத்தைச் சேர்ந்த மக்கள் வேற்றாட்சியின் எடுபிடிகளாக்கப்பட்டனர். நாட்டிற் கிளர்ந்தெழும் விடுதலை வேட்கைக்கு எதிர்ப்பு முன்னணி ஒன்றை அவர்கள் வாயிலாய் இங்கிலாந்து உருவாக்கி வைத்திருந்தது.

உலகப் போர் ஏற்படவே அயர்லாந்தின் இளைஞர்களைக் கட்டாயப் படைப் பயிற்சியில் சேர்க்க ஆட்சியாளர் முயன்று வந்தனர். உண்மை இனவுணர்வு பெற்ற இளைஞர்களோ, தம்மை அடிமைப் படுத்தியிருக்கும் ஆட்சியாளர்க்குப் போர்க் காலத்தில் உதவுவதை விரும்பவில்லை. மாறாக இங்கிலாந்துடன்

போர் தொடுத்திருக்கும் செருமனியின் துணையினைக் கொண்டு விடுதலை பெற வழியுண்டா என்று ஆய்ந்தனர். தொண்டர்படை எங்கணும் பரந்து வேலை செய்தது. இலண்டனில் காலின்சு நண்பர்கள் பலரைச் சேர்த்து அவர்கட்குப் போர்ப் பயிற்சி யளித்து வந்தான் கட்டாயப் பட்டாளச் சேர்ப்புச் சட்டத்தின் பிடிக்கு அகப்படாமல் அயர்லாந்து சென்று தாய்நாட்டுக்காக அரசியலாரை எதிர்த்துப் போராட வேண்டும் என்று அவர்கள் முடிவு கட்டினர்.

காலின்சு, தன் தனித்திறனுக்கும் சுறுசுறுப்புக்கும் ஏற்ற தான கட்டுப்பாடற்ற ஒரு தொழிலை மேற்கொள்ளல் வேண்டும் என்று நெடுநாளாக நினைத்திருந்தான். இங்கிலாந்திலோ, அயர் லாந்திலோ அத்தகைய தொழிலுக்கு இடமில்லையாதலால் அமெரிக்கா செல்லவேண்டும் என்பது அவன் விருப்பம். அவ னது திறமைக்கும், ஆற்றலுக்கும் அமெரிக்கா சென்றிருந்தால் அவன் கோடி கோடியாகப் பொருள் ஈட்டிப் பெருவாழ்வு வாழ்ந் திருக்க முடியும். ஆனால் தாயகத்தின் அழைப்பே அவனுக்குப் பெரிதாயிருந்தது. நாட்டு விடுதலைப் பணிக்குத் தன்னை முழுவ தும் ஒப்படைப்பதென முடிவு கட்டினான். வேலையை விட்டு விட்டுத் தொண்டர் படையிற் சேர்வதற்காக அயர்லாந்து சென்றான்.

காலின்சும், அவனைப்போலவே நாட்டு விடுதலை கருதிய இளைஞர்களும் தலைநகராய தப்ளின் நகருக்கருகில் கிம்மேசு எனுமிடத்தில் குடியேறினர். போர்ப்படையினர் போன்றே இத் தொண்டர் படையினரும் தம்மை ஒழுங்குபடுத்திப் படைக் கலப் பயிற்சியும் மேற்கொண்டனர். காலின்சு குழுமம் ஒன்றில் வெளிப்படையாக வேலையில் அமர்ந்து கொண்டு, தொண்டர் படை வேலைகளில் கமுக்கமாக ஈடுபட்டு வந்தான். அரசியலா ரின் படையில் சேராமல் தப்பி வந்தவன் ஆதலால் அவனைச் சிறைப்பிடிக்க ஆட்சியாளர் காத்திருந்தனர். ஆதலின் அவன் சிறிது காலம் தலைமறைவாகவும் வாழ நேரிட்டது.

1916, ஏப்பிரல் 23–ஆம் நாள் நாடு முழுவதும் தொண்டர் படை அரசியலார்க்கு எதிராக எழும்பிப் புரட்சி செய்தல் வேண்டும் என்று தலைவர்கள் முடிவு கட்டினர். தொண்டர்கள் ஏறத்தாழப் பதினெண்ணாயிரம் பெயர் இருந்தனர்.

புரட்சி தொடங்கியது. காலின்சு சோசப்பு பிளங்கெட்டு எனும் பழம் பெரும் நாட்டுப் பற்றாளருக்குத் துணையாக நின்றி ருந்தான். படைக்கலங்களுடன் சென்ற தொண்டர்குழு அரசிய லாரின் கட்டிடங்கள் சிலவற்றைக் கைப்பற்றிக் கொண்டு ஐரிசு குடியரசின் தற்காலிக ஆட்சியினை அமைத்துள்ளதாக விளம்பரப்

படுத்தினர். ஆங்கில ஆட்சியாளரின் படைகட்கும் தொண்டர் படையினருக்கும் பெரும் போராட்டங்கள் நிகழ்ந்தன. ஆயினும் தொண்டர் படையினரிடம் ஒழுங்கும் கட்டுப்பாடும் இல்லாமையால் புரட்சி வெற்றியளிக்கவில்லை. காலின்சும், முன்னணி மறவர்களுடன் சிறைப்பிடிக்கப் பெற்ருன். இளமை யொழுகு முகமும் களங்கமற்ற பார்வையும் நல்லுணர்வு ததும்பும் அழகிய இனியதோற்றமும் காலின்சுக்கு வாழ்க்கையில் பலமுறை உதவியாயிருந்திருக்கின்றன பிடிபட்டவர்களில் முன்னணி மறவர்களையெல்லாம் சுட்டுக் கொள்வதற்காக ஒற்றர்கள் அவர்களைத் தெரிந்தெடுக்க வந்தபொழுது ஒன்றுமறியாதவன் போன்ற தோற்றமே காலின்சின் உயிரைக் காத்தது.

சிறையில் அடைபெற்ற காலின்சு அங்கு மனம் சாம்பியிருந்தானில்லை. உடன் அமைக்கப்பெற்ற இளைஞர்களோடு கூடி விடுதலைக்கான திட்டங்களையே ஆய்ந்து வரலாயினன். சிரிக்கப் பேசி அவர்தம் கவலையை மாற்றி ஊக்குவித்தான். இடையிடையே கிடைத்த பல நூற்களை ஆழ்ந்து கற்று அறிவையும் பெருக்கிக் கொண்டான். சிறையில் இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்துப் போராடினன். இந்நிலையில் வெளியுலகில் இங்கிலாந்தின் நடத்தைபற்றிப் பழிச்சொற்கள் மிகுந்தமையால் ஆட்சியாளர் சிறையிலுள்ளவரை விடுதலை செய்தனர். காலின்சு தாயகம் திரும்பினன் தப்ளினில், தொண்டர் படையினையும் குடியரசுக் கழகத்தையும் சீர்திருத்தி அமைக்கும் பொறுப்பு அவன்பால் அளிக்கப்பெற்றது. ஐரிசு நாட்டன்பர் உதவிக் கழகம் என்ற அமைப்பின் செயலாளனுகவும் ஆயினன். 'வாகான்' என்றேர் உணவு விடுதி. காலின்சு அங்குத்தான் தன் தோழர்களோடு கமுக்கமாகக்கூடி உரையாடுவது வழக்கம். அரசியலாரின் அடக்குமுறை பல உருவங்களில் தலை தூக்கிற்று. வாகான் உணவு விடுதியிலிருந்து அதற்கு மாற்றுத் திட்டங்கள் பல புறப்பட்டன எனினும் அடக்கு முறை ஓயவில்லை. விடுதலை பெற்ற தலைவர்கள் பலர் துன்புறுத்தப்பட்டனர் அரச எதிர்ப்புக் குற்றம் சாட்டப்பட்டு மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

(அடுத்த இதழில்)

முகவர்கள் கவனத்திற்கு.

- ஒவ்வோர் ஆங்கில மாதமும் 5-ஆம் நாளைக்குள் முந்தைய மாதப் பட்டியல் தொகையைக் கட்டாயம் விடுத்துவிடவும்.
- படிகள் சரிபார்த்தே விடுக்கப் பெறுவதால், இடையில் ஏற்படும் குறைபாடுகளுக்கு அலுவலகம் பொறுப்பாகாது.
- தேவையான மிகுதிப் படிகட்கு முன்கூட்டியே எழுதவும்.

அமைச்சர்.

எதிர் நின்றவர் வாழ்வதில்லை!

''வேம்பலர்வெற்பன்''

நாடு பிறவோடிக்—காடுநிலம்
  நன்று செழிப்பாக்கிப்
பீடு பெறஉழைத்தே—உயிர்ப்பெலாம்
  பொன்றித் துவண்டவுடன்
ஓடு தமிழ்மகனே—என்றிழிஞர்
  ஓட்டும் வரலாற்றில்
ஏடு புரட்டிவிட்டாய்—நிகரமை(வு)
  ஏற்ற பருமாவே!

நூறுபல் லாயிரமாய்—ஐராவதி
  நீரின் மிகுபயன்கள்,
ஊறுங் குருதியெல்லாம்—இறைத்தே
  உஞற்றித் தந்திருந்தார்;
சாறு பிழிந்தபின்னர்—கரும்பின்
  சக்கையைக் குப்பையிலே
நூறி எறிவதுபோல்—அவரை
  நீக்கிப் பிழைபுரிந்தாய்!

துன்று புளிப்பாக்கித்—தமிழரைத்
  தூக்கி எறிந்தாலும்,
ஒன்றும் நடவாது—அவர்மறம்
  ஓய்ந்து சிறுத்துவிடார்!
வென்றி வரலாற்றை—இன்றவர்
  வெள்ளத்தில் வீசிவிட்டார்;
என்று புரிந்துவிட்டாய்—உடன்செய்
  நன்றி மறந்துவிட்டாய்!

சாவு வரும்வரைக்கும்—அடிமை
  சார்ந்த அடிமைகளாய்
மேவித் திரிந்திடவும்—வடக்கர்
  மீத்துச் சிறிதளவாய்த்
தூவித் தருமுணவைத்—தின்றுடல்
  தாங்கித் திரிந்திடவும்
வாவென் றழைத்துவிட்டார்—தமிழ்நலம்
  வாழும் அடிமைகளும்!

இன்று தடந்தோட்கள்—கலித்திடக்
  கூலித் திறம்பாடி,
வென்றிக் கலமேறிக்—கடல்நிலம்
  வீழ்த்திப் பரந்ததெலாம்
இன்று மறந்தவராய்—அரசாள்
  ஏற்றம் பிறழ்ந்தவராய்
நின்று கலங்குகிறார்—வடக்கே,
  நீட்டிப் புலம்புகிறார்!

வாழத் தெரிந்திலரால்—உனைப்பழி
வாங்கத் துணிந்திலராய்,
பாழுங் கழிவிரக்கம்—தடைசெயப்
பம்மிக் கிடந்துழல்வார்!
சூழல் கொடியதென்றே—உரைத்தே
சோர்ந்து திரும்பலுற்றார்;
ஊழல் தமிழ்ப்பொதும்பில்—ஈசலாய்
ஒன்றிக் கலக்கலுற்றார்!

நொந்தவர், ஏதிலிகள்—முன்னமே
நீரை உகுப்பதலால்,
வந்துன் திமிர் ஒடுக்கார்—இந்நிலத்து
வாழுநர் இவ்விழிவை
முந்தித் தொலைப்பதற்குத்—தமிழ்க்கனல்
மூட்டிச் செறுக்கெழுந்தோம்;
மந்தை இனத்தூடு—வீறுடன்
வாழும் சிலர்யாமே!

நீளும் எமதடிமை—நிலையாய்
நம்பும் கொடுநாடே!
மூளும் எரியினைப்போல்—உளத்தே
மூண்ட உணர்வுகளால்,
நாளை நிலைமாறும்—பாரினில்
நாங்கள் கொடிநாட்டி
ஆளும் நிலைபிறக்கும்—பொறுத்திரு;
அன்றுன் இடுப்பொடிப்போம்!

வாலைக் குழைத்தினியும்—குக்கலாய்
வாழப் பொறுப்பதில்லை!
காலச் சுழற்சியிலே—கைகளோ
கட்டிக் கிடப்பதில்லை.
ஓலக் குரலைஉன்பால்—பருமா
உண்டாக்கிப் பார்ப்பதல்லால்
ஞாலம் பெறவரினும்—ஆளுமை
நாங்கள் மறப்பதில்லை!

பஞ்சில் நெருப்பாவோம்—குருதி
பாய்ச்சுதற் கஞ்சுகிலோம்;
அஞ்சுதல் அஞ்சினமே—எங்களின்
மானம் புரந்தனமே!
நஞ்சுப் புகைப்பலமே—எரிமலை
ஞாலம் நடுக்குவபோல்
நெஞ்சம் கனன்றெழுந்தோம்—இனியெதிர்
நின்றவர் வாழ்வதில்லை!

—o—

அந்தோ! தமிழ் நாடே!!

புலவர். வி. பொ. பழனிவேலன் பி. ஓ. எல்.

உனது பண்டைய நிலையையும் இன்றைய நிலையையும் சீர்தூக்கிப் பார்க்கும் எவர்க்கும் மன உளைச்சலும் அச்சமும் உண்டாகாமல் இரா. அன்று, செந்தமிழ் வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர் ஆண்டனர்; முத்தமிழ்க் கழகங்கள் அமைத்துத் தமிழ் வளர்த்தனர். அயல் நாட்டார் ஆட்சியும், மொழியும் உன்னை அண்ட அஞ்சின. இன்று, ஆங்கிலேயர் ஆட்சியினின்றும் விடுதலைபெற்றும், மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பதுபோல, உனக்கும், உன் மக்கட்கும், உன் மொழிக்கும் விடுதலை கிடைக்கவில்லை. வட நாட்டார்க்கு அடிமையாகி விட்டாய்; தமிழ் வளர்க்கும் மன்றங்கட்கு மாற்றாக உன் ஊர் தோறும் 'இந்தி' மொழி பரப்பு மன்றங்கள் தோன்றியுள்ளன.

பண்டு அக்பர், அசோகர், சந்திரகுப்தமௌரியர், ஔரங்கசீப் முதலிய பேரரசர்கள் இந்தியா முழுவதும் வென்று ஒரேயாட்சி செய்தபொழுதும் நீ தனியாட்சி செய்து வந்தாய். இப்பொழுது, மக்களாட்சி, குடியாட்சி, நிகரமை ஆட்சி என்று உன் மக்கள் மார்தட்டிப் பேசுங் காலத்தில் நீ வடவர்க்கு ('இந்தி'யர்க்கு) அடிமைப்பட்டுக் கிடக்கின்றாய்.

தமிழ் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு, என்று உன் மக்களில் சிலர் (தன்மானமுள்ளோர்) பெருமையுடன் பேசிக்கொள்ளும் தமிழ் இலக்கியங்களில் கண்ட பழக்க வழக்கங்களெல்லாம் உன்னிடம் இன்று மருந்துக்குக் கூட இல்லாமற் போய்விட்டனவே. ஆரியர், ஆங்கிலர் கூட்டுறவால் இன்று உன்னிடம் நிலவுவது ஆரிய–ஆங்கிலக் கலப்பு நாகரிகமே.

அன்று, நீ தனித்தமிழ் ஆட்சி நடத்தினாய்; இன்று உன் கல்விக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் கல்வி பயிற்ற தமிழ் தகுதியற்றது என்று முடிவு செய்யப்பட்டு, இந்தியும் ஆங்கிலமுமே பயிற்றுமொழிகளாக இருக்க ஏற்றவை என்று தீர்மானிக்கப்பட்டு விட்டது இந்திப் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தவும் திட்டம் தீட்டிவிட்டனர். அன்று, உன் மக்கள் அனைவரும் தனித்தமிழில் நன்கு பேசவும், எழுதவும் பழகியிருந்தனர்; இன்று, தமிழில் பேசுவதும் எழுதுவதும் இழிவு என்று கருதுகின்றனர். யாராவது தனித் தமிழில் பேசினாலும் எழுதினாலும் அது பழிப்புக்கிடமாகி விட்டது. எல்லாரும் சமற்கிருதம், ஆங்கிலம், இந்தி ஆகியவை விரவிய கலப்பு மொழியிலே தாம் பேசுகின்றனர்; எழுதுகின்றனர் அதனையே எல்லாரும் வரவேற்கின்றனர்; பெருமை என்றும் எண்ணுகின்றனர். உன் மக்களின் போலிப் பெருமையை என்னென்பது?

அன்று, தூய தமிழர் உன்னிடத்தில் பற்றும் தமிழ் மொழிப் பற்றும் உள்ளவர்களாக வாழ்ந்தார்கள்; தமிழை வளமுறச் செய்தனர்; உன்னைப் பல்லாற்றானும் வளப்படுத்தினர்; தாமும் வளம்பட்டனர். இன்று, போலித் தமிழர்கள் தமிழ்ப் போர்வை யில் மறைந்துகொண்டு உன்னையும், உன்மொழியையும் வட நாட்டார்க்கு அடிமைப்படுத்தி விட்டனர். தாமும் அடிமையாக உழல்கின்றனர். உன் கண்ணுள்ள நடுவனரசு அலுவலகங் களில் தமிழ்க்கு இடமேயில்லை. இந்தியும் ஆங்கிலமுமே கூத்தாடுகின்றன. அஞ்சலகமுத்திரைகளில் ஊர்ப்பெயர்கள் கூட இந்தியிலும் ஆங்கிலத்திலுமே பொறிக்கப்பட்டுள்ளன. பொது மக்களை ஏமாற்றும் வகையறிந்த போலித் தமிழர், தமிழ் உனது ஆட்சி மொழி, முதன்மொழி என்று அறிவித்துவிட்டு, அனைத்து அலுவலகங்களிலும் கல்விக்கூடங்களிலும் ஆங்கிலத்திற்கும் ஆங்கிலம் கற்றவர்க்குமே முதலிடம் அளிக்கின்றனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்தது போன்றே எல்லா நடவடிக்கைகளும் ஆங்கிலத்தில் நடத்தப்படுகின்றன. மிக விரைவில் ஆங்கிலத்தின் இடத்தை 'இந்தி' பிடிக்க விருக்கின்றது.

தமிழ்ப்புலமை பெற்றவர்கட்கு உன் அலுவலகங்களில் முதலிடம் அளிக்கப்பெறவில்லை. ஆங்கிலங் கற்றோர்க்கே முத விடம். விரைவில் இந்தி கற்றவர்க்கே முதலிடம் என அறிவிக் கப்படும். அதற்கெனவே இந்திய கல்வித்துறை முழுவதும் நடுவணரசே ஏற்றுக்கொள்ள தீவிர முயற்சி மேற்கொள்ளப்படு கிறது. தமிழ்ப்புலமை பெற்றவர்க்கும், தமிழைப் பயிற்றுமொழி யாகக் கொண்டு படித்துப் பட்டம் பெற்றவர்கட்கும் உன்னிடத் தில் வேலை கிடையாதாம். தமிழ் கற்றவரும், தமிழில் கற்றவரும் வேறு எந்த நாட்டில் சென்று வேலை பெறுவரோ அறியோம். உன்னுடைய அருமை மக்கள் பல்லாயிரவர், பிழைப்புக் கருதி அயல் நாடுகட்குச் சென்றவர், அயல் நாட்டினரால் வெளியேற வேண்டுமென்று ஆணையிடப்பட்டு அல்லலுற்று உன்னிடம் வரத்தவிக்கின்றனர்; அவர்கட்கு இடமளித்து வாழ்வளிக்கத் தயங்குகின்றது உன்னரசு; பாகித்தானிலிருந்து முன்னும் பின் னும் ஓடிவந்த ஏதிலிகட்கு குடியிருப்புகள் அமைத்து உதவு கின்றது.

உன்பால் உள்ள வானொலி நிலையங்களில் இந்தியும் சமற்கிருதமுமே முதலிடம் பெற்றுள்ளன, காலைமுதல் மாலை வரை அம்மொழி நிகழ்ச்சிகளே காதுகளைத் துளைக்கின்றன. தமிழில் நிகழ்ச்சிகள் நாளுக்குநாள் அருகிக்கொண்டே வருகின் றன. கூடியவிரைவில் இல்லாது போனாலும் வியப்பில்லை. ஆரிய மறைகள் ஓதப்படுகின்றன; இராமாயணம், மாபாரத கலைநிகழ்ச் சிகள் நடத்தப்படுகின்றன. ஆனால், திருக்குறள், ஐம்பெருங் காப்பியம், அகநானூறு, புறநானூறு பற்றிய நிகழ்ச்சிகளில்

எதுவும் இடம் பெற்றிலது. உன் மக்களில் இந்தி படிக்கின்றவர்கட்கு அளிக்கும் உதவிகளைப் போன்று தமிழ் படிக்கின்றவர்கட்கு இல்லை. உன் மக்கள் பலர் அனைத்திந்திய ஆட்சிக்கு அடிமைப்பட்டு அலுவல் புரிவதால் உன்னிடத்திலும் உன் மொழியிடத்திலும் பற்றற்றவர்களாகி விட்டனர். அன்றியும், 'தமிழ் காக்கத் தலைகொடுப்போம்; இந்தி புக இடங்கொடோம்', என்று வீறுடன் மேடையேறி ஒலிபெருக்கியையும் மிசைப் பலகையையும் தட்டிப்பேசிய உன் மக்களாகிய ''புலிக் குஞ்சுகள்'', இன்று பொருளீட்டவோ, புகழ் ஈட்டவோ அனைத்திந்தியக் கட்சிக் கூண்டுக்குள் புகுந்து அடங்கிவிட்டன.

இந்தியப் பாராளுமன்றில் ''தமிழில்தான் பேசுவேன்'', என்று உறுதி கூறிய உன் முழுமகன் இன்று இந்திப் பிடியில் அகப்பட்டுக் கொண்டார். பேராயக் கட்சிக்குள் நுழைந்து கொண்டு இந்தியை எதிர்க்கப்போகிறாராம். என்னே அவர் மதி! மரத்தைக் கீழே இருந்துகொண்டு வெட்டிச் சாய்ப்பது எளிதா? அதன்மீது ஏறிக்கொண்டு வெட்டுவது எளிதா? உன்னை வடவர் பிடியினின்று விடுவித்துத் ''தனியரசு, தமிழரசு பெறப் பாடுபடுவோம்; அதற்காக உயிர் ஈடுசெய்ய நேரினும் பின்னிடோம்'', என வீறு முழக்கம் செய்த மறத்தமிழர் பலர் இன்று அனைத்திந்தியக் கட்சிக் கோட்டைக்குள் புகுந்து அடங்கி அமர்ந்து விட்டனர். அவர்கட்கெல்லாம் தலைவராக விளங்கும் உன் பெருமகனாகிய 'பெரியார்' நேர்வழியை விட்டு விலகிப் பெட்டிப் பாம்புபோல் அடங்கி, அனைத்திந்திய கட்சிக்கு ஆள்சேர்க்கும் பணியில் ஈடுபட்டுவிட்டார். ''தமிழ்நாடு தமிழருக்கே'', என்ற கருத்தும் அவர் தாடியைப்போல் தூ வெள்ளையாக நரைத்து விட்டது. நன்றிகெட்ட உன் மக்கள் பலர் பேராயக் கட்சியில் சேர்ந்து உன்னை வடநாட்டாரிடம் அடகு வைத்துவிட்டனர்.

அன்று சுக்ரீவன், அநுமான், அங்கதன், வீடணன் முதலிய தென்னக மக்கள் உன் நன்மக்கள் வாலியையும் இராவணனையும் பகைவர்கட்குக் காட்டிக்கொடுத்து ஒழித்தனர். அங்ஙனமே நன்றியில்லா உன் மறமக்கள் பலர் வடவர்களுடன் உறவாடிக்கொண்டு உன்னை அவர்கட்கு அடிமையாக்கி விட்டனர் என்பதில் வியப்பில்லை உலக இயல்பே! புல்லுருவிகளாகிய உன் மக்கள் பலர் பலவகையான கட்சிப் போர்வைகளில் கரந்துறைந்து அனைத்திந்திய அடிப்படையில் உனக்கும் உன் மொழிக்கும் ஊறுவிளைக்கின்றனர். வடநாட்டார் பிரிவினைத் தடைச்சட்டம் கொணர்ந்தவுடன் உன் மக்களில் சிலர் ''நாங்கள் இனிப் பிரிவினைக் கொள்கையை விட்டு விட்டோம்'', என அறிக்கை வெளியிட்டு விட்டனர். அப்படிச் செய்த பின்னரும் விடாது வடவர் அண்மையில் ''விரைநிலைத் தடைச்சட்டம்'', கொண்டுவர 'அறிக்கை' விட்டுள்ளனர்.

உன்மீது இந்தித் திணிப்பு வலிவாக்கப்படுகிறது. அதற்காக நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டுள. வடநாட்டார் பலரை உன்பால் குடியேற்றியும், அலுவல்களில் அமர்த்தியும், உன் மொழி எழுத்துகளை யெல்லாம் தேவநாகரி (இந்தி) எழுத்து களாக மாற்றியும், உன் நாகரிகம், பழைய பண்பாடு, பண்டைய கலை, இலக்கியம் யாவற்றையும் சீர்குலைக்கத் திட்டம் வகுத்துவிட்டனர். கழகங்களால் போற்றிக் காக்கப்பெற்ற கன்னித்தமிழ் களங்கமுற்றழியும்; உன் பெயர் 'தமிழ் நாடு' என்பது மறைந்துவிடும்; (இன்றும் தமிழில் மட்டிலுமே உன் பெயரை எழுத வடவர் உரிமை யளித்துள்ளனர்.) தமிழ் இனம் போய் விடும்; தமிழரெல்லாரும் 'பாரத' மக்களாவர்; பாரதப் பண்பாடு உன்னை ஆட்கொள்ளும்; இந்தியே உன்னிடத்து எக்காளமிடும்; தமிழ் தலைதடுமாறிப்போம்.

உன் நிலைமை இவ்வாறுமென்றும் உன் மக்கள் இன்னணம் உணர்ச்சியழிந்து, மானமிழந்து, தாய்நாட்டுப்பற்று, தாய் மொழிப்பற்று நீங்கி, மாற்றாரிடம் மண்டியிட்டு மாண்பிழந்து மீளா அடிமைகளாவர் என்று கனவிலும் யாரும் கருதியதில்லை. உன் நன்மக்கள் பலரின் உயிர்கொடுத்துப் பெற்ற இந்திய நாட்டு விடுதலையால் நீ பெற்ற கைம்மாறு இதுதான் போலும்! அந்தோ, தமிழ் நாடே!!! நிகரமை மக்களாட்சியின் நேர்மை இருந்தவா றென்ன!

ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு. — திருக்குறள். *

தென்மொழி, கடலூர் 2.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு.	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்	50 காசு	60 காசு	75 காசு
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா.	7–25 உருபா.	9 உருபா

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்.		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

மொழி பெயர் தேயச் செலவு.

புலவர். தி. நா. அறிவுஒளி.

—●—

முன்னுரை: பண்டைக் காலத் தமிழர் நெடுந் தொலைவி லுள்ள வேற்று மொழி வழங்கும் நாடுகட்குப் பொருளீட்டவும், வாணிகம் புரியவும், போருடற்றவும், அறிவு வளம் பெறவும், உலகியலுணரவும் உலாச் சென்றனர். இதற்குக் கழக இலக்கி யங்களில் நிறைய சான்றுகள் உள்ளன. பெரும்பாலான பாலைத் திணைப் பாக்கள், இவ் வெளிநாட்டுச் செலவின் அடிப்படையில் தாம் யாக்கப் பெற்றுள்ளன. வரலாற்றுப் பேராசிரியரான மாமூலனாரின் பாக்களில் இம் மொழி பெயர் தேயச் செலவுபற்றி அரிய வரலாற்றுண்மைச் செய்திகள் நமக்குக் கிடைக்கின்றன.

சேய்நாட்டு வெறுக்கை: சேய்மை நாடுகளிலிருந்து பொன்னையும் பல்வகை அணிகலங்களையும், இவை போலும் மதிப்புமிக்கச் செல்வங்களையும் தமிழர் ஈட்டி வந்தனர். இச் செல்வந் திரட்டும் ஆவலால், தம்வீட்டையும், அன்புத் துணைவி யரையும் பிரிந்து செல்வது அக்கால ஆடவர் வழக்கமாம். கண வரைப் பிரிந்தால் மனையரசியர் தம் அழகிய பருத்த தோள்கள் மெலியுமாறு வாடி வருந்துவர். வெளிநாடுகட்குச் செல்லும் வழியில் பாலை நிலங்கள் இருந்தன. நெருப்பைப்போல வெப்பம் மிக்க கதிரவனின் கதிர்கள் மண்ணிலம் பிளவுபடுமாறு காயும் வழியது. வெப்பத்தால் பசுமையே எங்கும் தோன்றுது. புல்கூட முளைப்பதில்லை. மரங்களில் இலைகளே இல்லாமையால் தரையில் நிழலும் விழுவதில்லை. மரங்களும் உலர்ந்து வற்றிவிட்டிருக்கும். எங்கேயோ ஒன்றிரண்டு சுனைகள் மட்டும் இருக்கும். அச் சுனை களுள்ள பாறைகள் கொதிக்கும். சுனையில் நீர் ஒரு சொட்டும் இருக்காது. சுனையில் ஈரமும் இல்லாமற் போகுமாறு வெயில் காயும். அப் பாறைமீது நெல்லைத் தூவினால் உடனே அது பொரியாகிவிடும்! அவ்வளவு வெம்மையானது அப் பாலை நிலம். அந் நிலத்தின் வெப்பத்துக்கஞ்சி எவரும் அவ்வழியாகச் செல் லுவதில்லை. அதனால் வழிப்போக்கரைக் கொள்ளையடித்தும், கொன்றும் வாழ்க்கை நடத்தும் ஆறலைக் கள்வர்—வழிப்பறிக் கொள்ளை புரிபவர்—வறுமையால்வாடி, உடல் மெலியத் துன்புறக் கூடிய அத்தகு கொடியது பாலை நிலம்! மக்களோ, வேறு உயிர் களோ செல்லாத காரணத்தால் அவ் வெம்மைக்காடு பொலிவில் லாமல் 'புல்'லென்ற வெறிச்சோடிய வழியையுடையதாக, இரக் கப்படத்தக்க நிலையிலுள்ளது பாலைக்காட்டின் சார்பில் காற்றால் அசைகின்ற கிளைகளைக் கொண்ட உள்நார் இல்லாத முருங்கை மரங்கள் உள்ளன. அம் முருங்கை மரங்களில் வெண்மையான

பூக்கள் குலைந்துள்ளன. கடுமையான சூருவளி விரைந்து வீசுவதால் அப் பூக்கள் ஓசையோடு சிதறிக் கீழே விழுந்து கிடக்கின்றன. அப் பூக்கள் அலையலையாக வரிசை வரிசையாக நிலத்தில் கிடப்பது கடலலையின் நுரைகள் உடைந்து பரவிக் கிடப்பதைப் போலத் தோன்றும். கடலின் முன் கரைப் பகுதியைப்போலக் காட்சியளிக்கும் முருங்கை மலர்கள் சிதறிப் பரவிய நிலக் காட்சியுடைய காட்டைத் தனியாகக் கடந்து செல்வர் தமிழர். இத்துணைத் துன்பப்பட்டு உழைத்துப் பொருளீட்டும் பேரார்வம்–பேரூக்கம்–அக்கால ஆடவர்கட்கு இருந்தது. அதனால் தமிழகத்தில் ஆற்றலும் ஆண்மையும் பீடும் பெருமையும் உரிமையும் உடைமையும், சீரும் செல்வமும், ஆட்சி வளமும், பண்பாட்டு மாட்சியும் சிறந்திருந்தது.

> "..................சேய் நாட்டுப்
> பொலங்கல வெறுக்கை தருமார் நிலம்பக
> அழல்போல் வெங்கதிர் பைதறத் தெறுதலின்
> நிழல்தேய்ந் துலறிய மரத்த அறைகாய்
> பறுநீர்ப் பைஞ்சுனை ஆமறப் புலர்தலின்
> உகுநெற் பொரியும் வெம்மைய யாவரும்
> வழங்குநர் இன்மையின் வெளவுநர் மடியச்
> சுரம்புல் லென்ற ஆற்ற அலங்குசினை
> நாரின் முருங்கை நவிரல் வான்பூச்
> சூரலங் கடுவளி எடுப்ப ஆருற்
> றுடைதிரைப் பிதிர்வில் பொங்கி முன்
> கடல்போல் தோன்றல காடு இறந்தோரே." (அகம்: 1).

தமிழ்நாட்டை மட்டுமே தமிழ் மூவேந்தர்கள் ஆட்சிசெய்து வந்ததாகப் பிழைபடக் கருதுபவர் கூற்றை அன்றே மாமூலனார் தெள்ளத் தெளிவாக மறுத்திருக்கின்றார்.

தமிழ் கெழுமூவர் காக்கும் மொழிபெயர் தேஎம்: விற்போர் வல்லமையும், பேராற்றலுமுடைய படைமறவர்களைக் கொண்டவர்கள் முத்தமிழ் மூவேந்தர்கள். இந்த வில்லாண்மையால் பகைவர்களைப் போரில் அழித்து, வெற்றி பெறுவதோடு, அப் பகை நாட்டினரிடமிருந்து திறைப் பொருள்களைப் பெற்றுத் துய்க்கும் பேராண்மையும், பேராற்றலுமுடைய வலிமை சான்ற வாழ்க்கை வாழ்பவர்கள் தமிழ்நாட்டு மூவேந்தர்கள். தமிழ்மொழி வழங்காத வேறுமொழிகள் பயிலும் வேற்றுத் தேயங்களையெல்லாம் போரில் வென்றடக்கி ஆண்டு, காத்து வந்தனர். அத்தகைய மொழி பெயர் நாடுகளிலுள்ள பல மலைகளைக் கடந்தே தமிழ்நாட்டு வணிகர் பொருள் ஈட்டப் பிரிந்து சென்றனர்!

இவ்வாறு தமிழர் கடந்து செல்லுங் காடுகள் வெம்மை நிறை பாலைகளாகும். நெருப்பைப் போலச் சீற்றத்தால் சிவந்த வெம்மை விளங்கக் கூடிய ஞாயிற்று மண்டிலம், பயிர் விளைகின்ற நிலத்திலுள்ள பச்சைப் பசும் பயிர்கள் தீய்ந்து கருகுமாறு அழிக்கிறது தன் கொடிய வெயிலால். 'வெப்பத்தின் கரணியத்தால் இந் நிலவுலகம் குறைவுபட்டு நிலைபெயர்ந்து அழியக் கூடிய ஊழிக் காலமோ?' எனக் கூறக்கூடிய அளவில் கொடும் வெப்பம் மிகுந்துளது. அத்துடன், உயிர்கள் இறப்பதற்கு அடிப் படையான மழை பெய்யாமையால் வறண்ட காலம் அது. இந் நாளில், ஓங்கி வளர்ந்த இலைகள் இல்லாத யா மரத்தின் மேலே உள்ள கிளைகளிலிருந்த பறவைக் குஞ்சுகட்கு (பார்ப்பு கட்கு) பசி மிகுந்துள்ளது. அதனால் கழுகுகள் இரை தேடுகின்றன. காட்டு வழியில் கற்கள் மிகுதியாகப் பரவிக்கிடக்கும் பகுதியில் சிறு சிறு ஊர்கள் உள்ளன. அச் சிற்றூரில் மறவர்கள் வாழ்கின்றனர். இம்மறவர்கள் வில்லில் அம்பெய்து போரிடுவதிலும், கொள்ளை யடிப்பதிலும் திறன் மிக்கவர்கள். அவர்கள் அம்பெய்து வழிப் போக்கரைக் கொன்று போட்டிருக்கின்றனர். இத்தகு படுகொலைகளால் காட்டுவழி அழகு கெட்டு நிறம் வேறு பட்டிருக்கிறது. பொலிவற்ற நிறமுடைய வழிகளில் செவ்வலரி மாலை சூட்டப் பெற்று இறந்து கிடக்கும் வழிப்போக்கர் பிணங்களைச் சூழ்ந்து தசைத் துணுக்குகள் வரிவரியாகச் சிதறியுள்ளன. பிணங்களின் புண்களிலிருந்து வெளிவந்து பரவிய செங்குருதியும் சிந்தியுள்ளது. பிணங்களின் கண்களைக் கழுகுகள் கொத்தி எடுத்துச் சென்று திம் குஞ்சுகளுக்கு வாயினின்றும் உமிழ்ந்து ஊட்டும். இவ்வகையான கொடுமைகள் நிறைந்த காட்டு வழிகளையுடைய வேற்று மொழி பயிலும் நாடுகளைத் தாண்டிப் பொருளீட்டத் தமிழ்த் தலைவர்கள் செல்வது வழக்கம்.

"நெருப் பெனச் சிவந்த உருப்பவிர் மண்டிலம்
புலங்கடை மடங்கத் தெறுதலின் ஞொள்கி
நிலம்புடை பெயர்வ தன்றுகொல் இன்றென
மன்னுயிர் மடிந்த மழைமா றமையத்து
இலையில வோங்கிய நிலையுயர் யாஅத்து
மேற்கவட்டு இருந்த பார்ப்பினங் கட்குக்
கல்லுடைக் குறும்பின் வயவர் வில்லிட
நிணவரிக் குறைந்த நிறத்த அதர்தொறுங்
கணவிர மாலை யிடூஉக் கழிந்தன்ன
புண்ணுமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்
கண்ணுமிழ் கழுகின் கானம் நீந்திச்
சென்றோர் என்புஇலர் தோழி வென்றியொடு
வில் அலைத்து உண்ணும் வல்லான் வாழ்க்கைத்
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பன்மலை இறந்தே" (அகம் : 31).

தமிழர் கடக்கும் பாலைநிலம்: உலகம் இருள் இல்லாமல் விளக்கத்தோடு திகழச் செய்யும் பகற் பொழுதை உண்டாக்கி உதவிய பல ஒளிக் கதிர்களையுடைய ஞாயிறு, வளம் பொருந்திய பெரிய மலையின் நல்ல பயன் கெட்டொழியும்படி, காய்கிறது. அவ்வாறு ஞாயிறு கொடுமையாகக் காய்வதால், நீர் பொழியும் அருவியும் வறட்சியுற்று ஒழிந்தது. அருவியில்லாத பெரிய பக்க மலையில் அச்சமும் துன்பமும் தரும் சுனை யுண்டு பசிய கண்ணையுடைய ஆண் யானை, பசித் துன்பத்தால் சோர்ந்து துன்புறும் பெண் யானையோடு நீர் வேட்கையால் அச் சுனைக்கு வந்தது. சுனையைத் தன் தும்பிக்கையால் களிறு (ஆண் யானை) துழாவியது. தமக்குப் பயன்படும் நீரைக் காணாமல் அச் சுனையின் சூழ்நிலைப் பாறையில் ஒட்டியிருக்கும் பாசியைத் தின்றது அக் களிறு. பசியால் வருந்தும் பிடியும் (பெண் யானை) நீர் வேட்கையால் வாடும் களிறும் ஒரு பக்கமாக ஒடுங்கிக் கிடந்தன. அகன்ற பாலை நிலப்பகுதியில் மூங்கில்களின் கணுக்கள் வெப்பத்தால் பிளந்து கொண்டன. அவ்வளவு கொடிய வெயில்வீசும் பாலைநிலத்தை, அரும்பொருள் வேட்கையால் தமிழாடவர் கடந்துசென்று வந்தனர். தம்மருமைத் துணைவியரைப் பொருளின்மீது கொண்ட ஆவலால் பிரிந்து சென்றனரேனும், உண்மையில் தலைவியர்பால் அளவற்ற அன்புடையவர்களேயாவர். இவ்வரிய நயமிக்க வாழ்வோவியம் இனிய ஈடில் பாட்டோவியமாக மலர்ந்துள்ளது:

> "விளங்கு பகல் உதவிய பல்கதிர் ஞாயிறு
> வளங்கெழு மாமலை பயங்கெடத் தெறுதலின்
> அருவி யான்ற பெருவரை மருங்கில்
> சூர்ச்சுனை துழைஇ நீர்ப்பயங் காணாது
> பாசி தின்ற பைங்கண் யானை
> ஓய்பசிப் பிடியோ டொருதிறன் ஒடுங்க
> வேய்கண் ணுடைந்த வெயில்அவிர் நனந்தலை
> அரும்பொருள் வேட்கையின் அகன்றனர் ஆயினும்
> பெரும் பேரன்பினர் ...." (அகம்: 91).

சேய் நாட்டில்...பொருட்பிணி:

தலைவியரின் அழகு அழியும்படி வருந்தவிட்டுத் தமிழ்த் தலைவர்கள் நெடுந் தொலைவிலுள்ள நாட்டிற்குப் பொருளீட்டி வரப் பிரிந்து செல்வர். தாம் கருதிவந்த அளவுக்குப் பொருள் திரட்டி முடிக்காவிடின், திரும்பிச்செல்ல வேண்டிய காலத்தைக் காட்டிலும் மேலும் சிறிது காலம் வெளிநாட்டில் தங்கி விடுவர். இக்கால நீட்டிப்பு தலைவியர்க்குப் பொறுத்தற்கரிய துன்பத்தைத் தரும். பெண்டிர் காதற்பிணியால் வருந்துவதைப்போல ஆடவர் பொருட்பிணியால் பிரிந்து வருந்துகின்றனரே எனத் தலைவியர் ஏங்கி வாடுவர். குறித்த காலத்தில் வெளிநாட்டினின்றும்

திரும்பிவந்து துணைவியரின் பிரிவுத் துன்பத்தை ஆற்றாமல், அங்கே தங்கி மேன்மேலும் தலைவியர்க்குத் துன்பத்தை உண்டாக்கும் காதலர்க்கு வெளிநாட்டில் ஏதொரு துன்பமும் விளையக் கூடாது? என மனமுருகி எண்ணி வேண்டுகை புரிவர். பண்புடைத் தமிழ் மகளிர். 'பிறர்க்கின்னா முற்பகல் செய்யின், தமக் கின்னா பிற்பகல் தாமே வரும்' எனத் தமிழ் மறைகூறும் கூற்று பண்டைத் தமிழரின் பண்பகத்தின் நந்நம்பிக்கையே. காதலியர் துன்புறுமாறு செய்யுந் தீமைக்கு அறம், காதலரை ஒறுத்து விடுமோ; என அஞ்சி 'நோயிலராக நம் காதலர்'என வேண்டிக் கொள்கின்றனர், அளப்பருங் காதலை அருந்துணைவன் பாற் கொண்ட காதலியர்.

'நம் காதலர் என்றும் நோய் இலர் ஆக!' என வேண்டிக் கொள்ளும் தமிழகக் கற்பரசிகளின் இயல்புப் பண்பு நனி விழுமியது; போற்றற்குரியது. ஒருவன் அறிந்தோ, அறியாமலோ பிறர்க்குத் தீமை செய்வானாயினும். அத் தீமைக்கேற்ற ஒறுப்பு—துன்பம்—அவனுக்கு இப்பிறவியிலேயே உண்டாகும் என்ற தமிழர் கொள்கை நாடோறும் மெய்ம்மையாக நடப்பது யாவரும் அறிவர். அக் கொள்கையை இப் பாட்டால் மாமூலனார் தெளிவிக்கிறார். அரிய கொள்கை வாழ்வுச் செய்தியை எழிலோவியமாகக் காட்டியுள்ளார் கருத்தோவியர் மாமூலனார்:

"...........என்
ஆய்நலம் தொலையினும் தொலைக என்றும்
நோயிலராக நம் காதலர்........
....
நன்னர் ஆய்கவின் தொலையச் சேய்நாட்டு
நந்நீத் துறையும் பொருட் பிணிக்
கூடாமையின் நீடி யோரே." (அகம்: 115).

அஞ்சத்தக்க வழிகளையுடைய மொழி பெயர் தேஎம்: சிவந்த கொம்புகளையும், கருமையான அடிப்பாகத்தையும் கொண்டது வெண்கடம்ப மரம். அதன் பூக்கள் மென்மையான வெண்ணிறம் வாய்ந்தவை. அவ் வெண் கடம்ப மலர்க் கொத்தைக் கல்வியறிவற்ற மழவர்கள் தமது சுரிந்து வளைந்திருக்கும் தலை மயிர் அழகாக விளங்குவதற்காகச் சூடியுள்ளனர். அக் கல்லா மழவர்கள் வில்லை இடப் பக்கத்தில் கையால் தழுவியவாறு, காட்டு வழியில் மறைந்திருப்பர். வழிப் போக்கர் வருவார்களாயின், கொள்ளையடிக்க அவண் காத்திருப்பர். இனைய அச்சந்தரும் கவர்த்த வழிகளையுடையது மொழி பெயர் நாடு. அம் மொழி வேறுபட்ட நாட்டில் பொருளீட்டத் தமிழர் தம் வீட்டையும் நாட்டையும் பிரிந்து சென்றனர்.

"..........செங்கோல்
கருங்கால் மராஅத்து வாஅல் மெல்இணர்
சுரிந்துவணர் பித்தை பொலியச் சூடிக்

கல்லா மழவர் வில்லிடந் தழீஇ
வருநர்ப் பார்க்கும் வெருவரு கவலை
மொழிபெயர் தேஎத்த ராயினும் . . .'' (அகம்: 127).

அரும் பொருள் வலித்த நெஞ்சம்: தமிழிளைஞர்கள் தமக் கிசைந்த மகளிரைத் தேர்ந்து காதல் கொள்வர். இளங் காத லர்கள் களவுக் காதலில் ஈடுபடுவர். இளங் கன்னியின் தனி மைத் தோள்களின் 'தனிமை' அகலுமாறு களவுப் புணர்ச்சியில் 'துணை'யாவர். இந்நிலையில் பொருளீட்டிச், செல்வ வளமை பெருமல் வெறும் காமவின்பத்திலேயே மூழ்குவதற்கு ஆடவ ருள்ளம் நாணும். காதலியின் கவர்ச்சியில் திளைத்த ஆண் உள்ளம், தொழில் புரியாமலிருப்பதற்கு நாணி, மிகத் தொலைவி லுள்ள நாட்டுக்குச் சென்று, அரிய பொருளை ஈட்டத் துணியும். உடனே காதலியரைப் பிரிந்து சேய்நாடுகட்குச் செல்வது பண்டையர் மரபு. இவ்வாறு பிரிவது, தம் குடும்ப வாழ்வின் உயர்வுக்காகவே என்ற உண்மையை மாமூலனார் அழுத்தமாகப் பாடலில் தெள்ளெனப் பதிந்துள்ளமை குறிப்பிடத் தக்கதாம்.

''தோள்புலம்பு அகலத் துஞ்சி நம்மொடு
நாள்பல நீடிய கரந்துறை புணர்ச்சி
நாணுடை மையின் நீங்கிச் சேய்நாட்டு
அரும்பொருள் வலித்த நெஞ்சமொடு ஏகி
நம்முயர்வு உள்ளினர் காதலர் . . .'' (அகம்: 187)

வேங்கடத்தும்பர் மொழி பெயர் தேஎம்: பறையைப் போன்ற வட்டமான காலடிகளையும், உறுதியான மருப்புகளை யும் உடைய வலிமை வாய்ந்த களிற்றி யானை வெண்கடப்ப மரத்தை (மராஅம்) உரிஞ்சும் போதெல்லாம் அவ் வெண்கடம் பின், சுண்ணம்பு பரந்திருப்பதைப்போன்ற அளவற்றவெண்மை யான பூக்கள், குளிர்ந்த மழையோடு வானினின்று கீழே விழும் பனிக்கட்டிபோலக் கீழே உள்ள பாறைமீது உதிர்ந்து கிடக்கும். அப்பூக்கள் விழுந்து சிதறிக்கிடக்கும் காட்சியானது, உழவர்கள் விதைத்துத்தூவிய வெண்ணெல்விதைகளைப்போலத் தோன்றும். இத்தகைய காட்சிகள் குளிர்ச்சி பொருந்திய பல சோலைகள் மிகுந்திருக்கும் திருவேங்கட மாமலையில் உண்டு. வேங்கட நாட்டுப் பகுதிக்கு அப்பால் வேற்று மொழி வழங்கும் நாடுகள் உள்ளன. அவற்றைக் கடந்து தமிழர் பொருளீட்டச் செல்வர்.

''. . . . . . .வாலிய
சுதை விரிந் தன்ன பல்பூ மராஅம்
பறை கண்டன்ன பாவடி நோன்றாள்
திண்ணிலை மருப்பின் வயக்களிறு உரினுதொறும்
தண்மழை ஆலியில் தாஅய் உழவர்
வெண்ணெல் வித்தின் அறைமிசை உணங்கும்
பனிபடு சோலை வேங்கடத்து உம்பர்
மொழிபெயர் தேஎத்தர்.......'' (அகம்: 211). (தொடரும்)

ஆளவந்தார்!

பாவேந்தர் பாரதிதாசன்

(இப்பாடல் சென்னையினின்று முதல் முதலாக வெளிவந்த **குயிலில்** வந்தது. அருமையான படைப் பாதலின் அவர் நினைவாக மீண்டும் வெளியிடுகின்றோம்.)

ஆட்பட் டிருந்தவர் ஆளவந்தார்-நல்ல
ஆட்சி நடத்துவர் என்றிருந்தோம்-''எம்மைக்
கேட்பவர் இல்லை; இனத்தின் எழுச்சியைக்
கிள்ளிடுவோம்'' என்று துள்ளுகின்றார்!

வறுமை உணர்ந்தவர் ஆளவந்தார்-இனி
வயிற்றுக்குக் கஞ்சியுண் டென்றிருந்தோம்-''உங்கள்
சிறுமையை நீக்க முறையிட்டுக் கொண்டாலும்
சிறையிடுவோம்'' என்று செப்பிவிட்டார்!

ஏழையர் தோழர்கள் ஆளவந்தார்-கொண்ட
ஏக்கத்தை நீக்குவர் என்றிருந்தோம்-இனி
வாழவிடோம் தொழிலாளரை, ஒற்றுமை
மாய்க என்றார் தலைசாய்க என்றார்

நல்லறம் கேட்டவர் ஆளவந்தார்-இனம்
நாலும்ஒன் றாய்விடும் என்றிருந் தோம்-எம்மைக்
கொல்லும் அவர்கள்கை இல்லைஎன்னும் நாக்குக்
கூசாது பொய்சொல்லும் தேசியத்தாள்!

உள்ளம் உயர்ந்தவர் ஆளவந்தார்-இனி
உண்மை சிறந்திடும் என்றிருந்தோம்-எங்கும்
கள்ள வணிகர்க்குக் காப்பளிக்கக் கச்சை
கட்டிவிட்டார் மானம் விட்டு விட்டார்!

நிறத்திமிர் அற்றவர் ஆளவந்தார்-துயர்
நீங்கிடும் நாட்டினில் என்றிருந்தோம்-ஏதும்
அறச்செயல் காணாத ஆங்கிலேயர்க்கு யாம்
அப்பன்கள் என்றிங்குச் செப்பிவிட்டார்!

கல்வி நிறைந்தவர் ஆளவந்தார்-தமிழ்
கட்டாயம் ஆக்குவர் என்றிருந்தோம்-அதைக்
கொல்வதற் கென்றிந்திச் சாணியைக் கட்டாயம்
கொள் என்று நாட்டினிற் கொள்ளி வைத்தார்.

(36-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாம் நஞ்சதில் எட்டுணை யாயினும்
கலப்பது தகுமோ? கழறுக நண்பரீர்,
நிலைப்பதிவ் வாழ்க்கை! நீங்களும் நானும்
சாவொடு தமிழகம் சாவது மில்லை;
ஆவ திலைஎன அடங்குதல் முறையோ?
பிற்றைநாள் அடிமைப் பெருநிலை வருமே!
அற்றைநம் கால்வழி பழிப்பதோ நம்மை?
இனியும் பொறுத்தால் ஏமாந் திடுவோம்;
தனியொரு தலைவனைத் தருக்கரசு கொன்றது.
நமையுங் கொல்ல நாட்பார்த் திருக்கும்!
அமைகுவ மல்லோம்; அடங்குவ மல்லோம்.
வடக்கிருந் துயிர்த்த சங்கர லிங்கமும்,
செந்தழல் புகுந்த சின்னச் சாமியும்
கொலைக்கா ளாகிய குருதிவேல் மார்பனும்
நம்மை ஊக்கி அதோநடக் கின்றனர்!
வம்மின் விடலையிர்! வம்மின் மடநவீர்,
குன்றுநேர் யானைகள் கோட்டைமேற் செலல்போல்
சென்று தாக்குவோம் செந்தமிழ்ப் பகையினை!
இந்தியைப் புறமுது கிடச்செய்தே மீள்குவோம்;
செந்தமிழ், தமிழகம் வாழ
இந்தவுயிர் போயின் இனும்பல வருமே! *

'கொய்யாக்கனி' எனும் இப்பனுவல் எல்லாத் தமிழர்க்கும் கொய்யுங் கனியாகுக! **—பாவாணர்.**

'வெள்ளம் எப்படி அப்படிச் செந்தமிழ்ச் சொற்பெருக் கேற, மேன்மை எப்படி அப்படிப் பட்டதோர் நடையில், தம் நல்ல உள்ளம் எப்படி அப்படித் தந்ததோர் உயர் தமிழ் நூல்தான், உலகம் எப்படி அப்படிப்பட்டதோர் நிலைகொள் கொய்யாக்கனியே! **—பாவேந்தர்.**

நீங்கள் சுவைத்தீர்களா?

துரை. மாணிக்கம் எழுதிய

கொய்யாக்கனி

தென்மொழி உறுப்பினர்கட்கு மட்டும் விலை 1-50.

அஞ்சல் செலவு தனி.

இந்தி எதிர்ப்பு:

போர்போர் போரென மன்னவன் முரசொலி
புயலென வெங்கும் முழங்கிடக் கேட்டு
மார்தட் டிக்கை தனில்வே லெடுத்து
மானமே பெரிதென வீறுடன் பாய்ந்து
போர்க்களம் புகுந்த புலிநிகர் தமிழீர்
புனித மிக்கநம் தமிழினை அழித்திட
ஆர்த்தெழும் இந்தியாம் அரக்கியை அழித்திட
ஆர்த்தெழுந் தோடி வாரீ ரின்றே!

— காலாயுதக் கொடியோன், திருப்பனந்தாள்.

செந்தமிழை இந்திமொழி
வந்தழிக்குந் தீங்கினை நீ
சென்றுரைப்பாய் காதலர்க்குத் தோழி — அதை
வென்று பழி தீர்க்கச் சொல்வாய்; வாழி!

தோட்டத்தினில் காட்டெருமை
தூய் மலராம் தீந்தமிழை
நோட்டம் பார்க்க வந்திருக்கும் போழ்து — இங்கு
வீட்டிலென்ன வேலையென்றே ஓது.

பாரறியத் தொண்டர் படை
பைந்தமிழைக் காப்ப மெனப்
போரணியில் சேருகின்ற காட்சி! — இதைக்
கூறடி; என் காதலர்க் கேன்நீட்சி?

காதலுக்குத் தாழ்ச்சி யில்லை,
கன்னி மனம் சோர வில்லை,
சாதலெனில் செத்து வீழச்சொல்லு — இந்தப்
பேதையவர் பின்வருவாள் விள்ளு!

— பெருவை சதாசிவம்.

உறங்கிடுதல் சால்போ? தமிழா! தமிழைத்
திறமிழந்த இந்தியது தீண்டல் — முறையாமோ?

பன்மொழிசேர்த் தாக்கியதோர் இந்திப்பகை அழிக்க
இன்றே எழுக விரைந்து.

— சொற்கோ, நாகை.

இந்தியெனும் மந்தியே! இன்தமிழின் வல்லூறே!
வெந்திடுங்கா டுன்னை விழைந்ததுவோ? எந்தமிழர்
சூளெடுப்பர்; உன்னைச் சுடுவடக்கு நோக்கவைப்பர்!
வாளெடுப்பர் காலம் வரின்.

— உழவன் - பூங்குன்றன்.

செந்தமிழ்க்கு வந்ததொரு சிறுதீங் கென்றால்
சிறுத்தையெனப் புறப்படுவான் பழந்தென் னாட்டான்!
எந்தவொரு மொழியானும் இன்த மிழ்க் கிங்(கு)
எள்ளளவும் இன்னல்வரின் பொறுத்தா னில்லை!
இந்தியெனும் மந்திமொழி இடர்வி ளைத்தே
இளந்தமிழை அழிக்கவரும் இந்தப்போழ்தில்,
''எந்த மொழி வந்தாலென்? நமக்கேன் வம்போ?''
என்றுரைக்க நினைப்பாயோ? எழமாட்டாயோ?

எத்தனை நாள் இப்படியே திரிவாய்? வீணாய்?
இற்றொழிந்து போவதுவோ தமிழன் ஆற்றல்?
கொத்தடிமை பேசியது போதும்! போதும்!!
குயிற்றமிழும் அழிந்ததுவும் போதும்! போதும்!!
முத்தெனவே சிப்பியிலே உறங்குகின்றாய்!
முனைந்தெழுந்து நின்றிடு! வீழ் நிலையை மாற்று!
செத்திடற்குத் தயங்குவையின் உன்னை நீயே
செந்தமிழன் என்றிடவும் உரிமை இல்லை!

— கன்னல் வேந்தன், சென்னை - 2.

மங்காமல் அச்சிடுங்கள்! மற்றிந்தி நூல், அறிக்கை
எங்குமே வாரி இறையுங்கள்! — இங்கே
படிக்கத்தான் யாருண்டு? பண்டங்கள் சேராய்
மடிக்கத்தான் போகும் கடைக்கு!

இரண்டா யிரமாண் டிலக்கியப் பூங்கா விதுவரையில்,
மருண்டோ ருளத்தே மறைந்தின் றவர்தம் மனவிரிவால்
திரண்டோர் கனலாய்த் திகழும் தமிழர் திறமெழுந்தே
புரண்டால் பொசுங்கும் புரியாப் புதுமொழி போல்வனவே.

— மகிழ்நன் - பொறையாறு.

பாலூட்டுந் தாயாகும்! பைந்தமிழ்தான் நமக்குப்
பசியூட்டும் உணவாகும்! இனிமை தரும் நல்ல
தாலாட்டுப் பாட்டாகும்! தாலியொடு மணந்த
தமிழ் மனையின் விளக்காகும்; தமிழணங்கே யுன்னை

வாலாட்டும் இந்திக்கே அடிமையாய் வைத்து
வாழ்கின்றார் ஊமையராய்; நஞ்சிட்டுக் கொல்லும்
தேளாட்டம் கண்டாடும் தென்னவர்க்குத், தமிழே,
தெரியாதோ மொழியின்றி நாடில்லை என்று?

இடித்துமறு கணம்மறையும் மின்னலென வந்த
இவ்வுலக வாழ்வுதனில் நாமெல்லாம் நூற்கள்
படித்துணர உதவிசெயும் பைந்தமிழ்க்குத் தொண்டு
பலகாலும் செய்வதுதான் பண்பாகும் தமிழா!
பிடித்திருக்குந் தமிழ் மறந்து பேயென்ற இந்தி
பெற்றமகன் சொல்கேட்டுச் செல்கின்ற தமிழா!
மடிகின்ற இந்திக்கு மனங்கொடுத்த தமிழா!
மறவாதே தமிழின்றி நாமில்லை என்று!

– இரா. அரங்கசாமி, பாபநாசம்.

வெறுப்பினையே தூண்டுகின்ற இந்திதன்னை
வேருக்கும் இடமின்றி வெட்டி வீழ்த்தச்
செருக்குடனே மொழிப்போருக் கெழுவோம்; வெல்வோம்;
சிறப்பான வரலாற்றைத் தமிழுக்காக்கி!
பொற்பதுவாய் நற்பேற்றிற் பெரும் பேருகப்
புகழ் படைத்த நற்றமிழ்த் தாய் ஒழிப்பார் கண்டும்
பற்றில்லை என்றுரைப்பார் பயனில் மாந்தர்
பருக்கைக்குக் கூற்றாக வாழ்வோர் தாமே!

– மேகதூதன், சென்னை.

தமிழுணர்வு:

"வற்றாத தேன்பொய்கை தமிழின் பொய்கை;
வளமார்ந்த பூஞ்சோலை தமிழின் சோலை;
முற்றாத மென்குதலை தமிழின் மேன்மை;
முதிராத பெருவாழ்வே தமிழின் வாழ்வு;
கற்றாலே இன்பூட்டும் தமிழின் தன்மை;
கசிந்தோடும் தேனேயெந் தமிழின் பேறு;
பெற்றாலும் தமிழைத்தான் பெறுதல் வேண்டும்;
பெருவாழ்வும் பேரின்பும் அடைதல் வேண்டின்".

– த. செயராமன், வத்தராயன்தெத்து.

நிலத்தில் பெரியாள்; நேர்மையில் உயர்வாள்;
வலத்தில் மிக்காள்; பண்புயர் நல்லாள்;
அலைத்தும் குலையாள்; அறிவுக்கு இனியாள்;
கலைத்தீந் தமிழாள் கனிவிற் சிறந்தாள்!

பொன்னினும் சிறப்பாள்; பூவினும் மணப்பாள்;
கன்னி நன் னலத்தாள்; கற்பவர்க் கினியாள்;
தென்னிலத் தெய்வம்! தேடுவார்க் கருள்வாள்!
தன்னியல் பகர்தல் தகுமோ எனக்கே?

– ஆ. இராசகோபால், கோயம்புத்தூர்.

எல்லாம் நிறைந்தது எந்தமிழே – வளம்
எல்லாம் நிறைந்தது எந்தமிழே – எழில் (எல்)

பல்லாரும் போற்றும் பாங்குடனே கலைப்
பயன் மிகத் தந்திடும் இயலிசை நாடகம் (எல்)

விளங்கும் தொகை நூலில் உயர்ந்த புறம் – மிக
மேன்மையுடன் சொல்லும் தமிழர் திறம்!
சிலம்புடனே பிற பாவியங்கள் – இன்பம்
செறிந்து நிற்குஞ் சொல்லோவியங்கள் – இவை (எல்)

பத்துப் பாட்டதனில் கலைமணக்கும் – நெறிப்
பயன் விளக்கும் பதினெண்கீழ்க் கணக்கும்!
மெய்த்திறஞ் சேர் பன்னிரு திரு முறைகள் – இந்த
வியனுல(கு) உய்ய வந்த அருமறைகள் – இவை (எல்)

– வேங்கடேசன், மருதங்குடி.

பாராண்ட தமிழ்மகனே எழுவாய்;
பார்புகழும் நின் தமிழைக் காப்பாய்!
சீருடையாள் சிறப்புடையாள் அன்னை
செந்தமிழின் பாய்விரிப்பில் நடந்தாய்!
யாருண்டு வேறவட்குப் பிள்ளை?
ஏதவட்கு வேறுறவு? தேராய்!
''ஆராரோ''ப் பாடிஉனை வளர்த்தாள்;
அவள் நலத்தைக் காத்திட நீ எழுவாய்!

– வே. மணிவாசகன், கும்பகோணம்.

காதல்:

அவன்

வண்ணமணித் துகில்புனைந்து வழியில் நின்றும்
வட்டமிட்டு வட்டமிட்டு விழியால் வென்றாய்.
கண்ணைவிழித் திமைத்தின்பம் கூட்டுகின்றாய்
கற்பென்று கழறி எனைத் தடுத்துநின்றாய்.
''உன்னை யினி நானென்றன் உயிராய்க் கொள்வேன்
''உண்மை, உண்மை நானுன்றன் அடிமை; சொல்வேன்''
என்றென்றே நாள்தோறும் சொல்லுகின்றாய்
எட்டி எட்டி நின்றேனே கொல்லுகின்றாய்?

அவள்

பாடிவந்தே என்அன்பைப் பகிர்ந்து சென்றீர்
பண்புநலம் என்று பினும் பகருகின்றீர்.
ஓடிவந்து நாளுமெனைக் கொஞ்சுகின்றீர்.
ஒன்றே ஒன் றென்றுமிகக் கெஞ்சுகின்றீர்;

தேடிவந்தே எனைநாளும் விரும்பும் அன்பீர்,
தெவிட்டு மட்டும் களவொழுக்கம் நன்றோ சொல்வீர்?
வாடி இவண் நிற்பதுவும் ஏனோ, அன்பே,
வந்தென்னை வரைந்து கொளல் தமிழர் பண்பே!

— வசந்தன், சென்னை 19.

பொது:

முருங்கைமரம் பருத்து நனி முதிர்ந்திட்டாலும்
முகட்டுவளை யாக்கிவீ டேற்ற லுண்டோ?
கரி உருவிற் குன்றன்ன நின்ற போழ்தும்
கனன்று வரும் அரிமாமுன் கலங்குமென்பார்!
சிறுவுளியும் மாமலையைத் தொளைத்தல் கண்டோம்
செப்புவதற் கிவ்வகையில் பல் சான் றுண்டே!
அறிவுதுணைக் கொண்டிவற்றை உணராதிங்கே
ஆர்ப்பரிக்கும் மாந்தர்தமை என்னென் பேன்யான்!

உருவத்தா லுயர்ச்சியுற்றார் இல்லை — உள்ள
உறுதிக் கண் மலர்வதுதான் மேன்மை! என்றும்
தெருட்சிமிக உற்றார்க்குத் தேம்பலில்லை!
தீந்தமிழ்நன் கமைவார்க்கும் அழிவேயில்லை!
அருளறியா நெஞ்சமுமே பெயரால் நெஞ்சம்!
அன்பில்லா வெற்றுடலம் என்ன செய்யும்?
உருவமிலா மெய்ப்பொருளைப் போற்றிவாழ்வீர்.
ஒழுக்கமிலார் ஒருபொழுதும் மகிழ்வாரில்லை!

— கொன்றை அம்பலத்தரசு

கனவிலே நந்தம் முன்னோர்
கண்டநற் கதையை யெல்லாம்
நனவிலே கொணர இன்று
நலமுடன் கற்றாய்! ஆனால்
அனைவரும் ஒன்றி வாழும்
அறிவுடை உலகம் ஆக்கி
இனமுடன் வாழக் கற்க
இதுவரை மறந்தேன் போனாய்?

— வியாசை, சரவணக்குமார் சென்னை 12.

வாட்டுகின்ற பெரும் பசியைத் தாங்கி என்றும்
வற்றாத வறுமையுடன் உலகுக்கெல்லாம்
ஊட்டுகின்ற நல்லுணர்வை உழைப்பால் ஈந்தே
ஓயாமல் உடல் கசங்கி உழைக்கும் ஏழை
காட்டுகின்ற காய்ந்த உடல் கண்டு நெஞ்சில்
கடுகளவும் கழிவிரக்கம் கொண்ட துண்டா?
ஓட்டுகின்ற நாட்களிலே அவர் நலத்தை
ஒரு நாளே னும் எண்ணிப் பார்ப்பதுண்டா?

இருக்கின்ற தேவைகளோ, பெரிது மில்லை;
எடுத்துரைத்தால் எவர்க்குமிது புரிவதில்லை;
பெருவளமும் பெரும்வாழ்வும் கேட்கவில்லை;
பிழைப்பு மட்டும் நடந்தாலே போதுமென்பார்;
உருவெடுத்த மாந்தர்க்கிவ் வுலகில் தேவை
உணவு டையோ(டு) இருக்க இடம் இவைகள்தாமே!
அருள் கூர்ந்திங் கிதை எவரும் எண்ணிப் பார்த்தே
அவலமுறும் மக்களுக்கு வழி செய்யாரோ?

— பி. அரங்கநாதன், மஞ்சைநகர்.

பாரதிதாசன்:

கனிச்சுளையோ டாவின்பால் கன்னல் அமிழ்தம்
பனிமலர்த்தேன் தெங்கிளநீர்ப் பாகும் – இனிப்பவைதாம்
''இன்பத் தமிழோ எனதுயி ராகு''மெனச்
சொன்னவாய் மூடியதே சோர்ந்து.

— அறிவழகன், காங்கியனூர்.

பாவேந்தர் அம்மானை.

கோவேந்தர் பாற்சென்று கொஞ்சுதமிழ்ப் பாவலர்கள்
''தா வேந்தே!'' என்ற தமிழ்நாடீ தம்மானை.
''தா வேந்தே!'' என்ற தமிழ்நாடீ தாமாயின்
பாவேந்தர் என்கின்ற பட்டம்ஏ தம்மானை
''பாண்டியன் பரிசு''தரப் பட்டதன்றோ அம்மானை.

இருட்டறை மேவி எழிற்றமிழர் நாளும்
குருட்டுத் தனத்தாற் குலைவுற்றார் அம்மானை.
குருட்டுத் தனத்தாற் குலைவுற்றார் ஆமாயின்
''விருட்''டென் றெழுந்து விழித்ததெவ்வா றம்மானை
விழித்தார் **குடும்ப விளக்கு**வர அம்மானை.

தூய தமிழ்மொழியாள் தன்னைவந்து தொட்டவரை
ஆயிரத் தெண்ணில் அடிமைகொண்டாள் அம்மானை.
ஆயிரத் தெண்ணில் அடிமை கொண்டாள் ஆமாயின்
ஆய படையெதுவோ அன்னவளுக் கம்மானை
அழகின் சிரிப்பால் அடிமைகொண்டாள் அம்மானை

மங்காத் தமிழகத்தின் சீர்குறித்துப் பாவேந்தன்
பங்குற்றான் பல்வே றியக்கத்துள் அம்மானை.
பங்குற்றான் பல்வே றியக்கத்துள் ஆமாயின்
அங்கவற்றுள் ஏதோ அருமையுடைத் தம்மானை!
அரிய **தமிழியக்கம்** ஆய்ந்துபார் அம்மானை.

—புதுவை சுப்பிரமணியன்.

பாவாணர் பொருட்கொடைத் திட்டம்:

பாவாணர்க்கு நன்கொடை விடுத்தவர்களின் இறுதிப் பட்டியல் இது. இத்துடன் இத்திட்டம் முற்றுப்பெற்றது.

திரு. செ. ம. நம்மாழ்வார், நடுவண் தொலைவரி அலுவலகம், சென்னை – 1. 5
இவர் வழி ச. மோகன கிருட்டிணன் 5
,, பி. முனுசாமி 1
;, நடேசன் 2
,, தங்க. இராசன், பெ கோபால், பெ. பெருமாள், மு. இராசேந்திரன், எசு. கே. சாமி (தலைக்கு 1 உருபா மேனி) 5
,, பி. எம். மனோகர் 2
திரு. இல சேதுராமலிங்கம் சென்னை–8 1
திரு. சேசாசலம் சென்னை–2 1
திரு. இரா. சந்தானம், சேலம்-2 2
கல்லூர் மணியம், மலாக்கா 5
திரு அரங்க பெரியசாமி, தஞ்சை–2 1
திரு. சி. ப. கோவிந்தராசன், அறைஎண் 'இ'-116 இரண்டாம் ஆண்டு பொறியியற் கல்லூரி மாணவரிலம், சென்னை -25. 1

இவர்வழி தலைக்கு ஓர் உருபா மேனி:

திரு. ந. கோவிந்தசாமி, பா. கோபிநாதன்
மா. தட்சிணாமூர்த்தி, மூ. தீனதயாளன்,
வே. திருநாவுக்கரசு, சங்கரய்யா,
வி. கருணாகரன், அ. காத்தவராயன்,
வெ. இரவீந்திரன், ம. அ. சிரீசைலம்,
ச. சௌந்தரராசன், மு. அரிதாசு,
தயாநிதி, இரா. பழநி, ப. சிவராசு,
த. கே. அ. செயச்சந்திரன், இரா. கோபாலன்,
வெ. சந்தானம், பி. எ. கோதண்டராமன்
எசு. சுப்பிரமணியன், கே. எசு. சந்திரசேகரன்,
சி ஏகாம்பரம், தா நா தாமோதரன், 48
இரா சுருளிவேலு, ச நராயணசாமி,
க நடராசன், இரா இராமலிங்கம்,
கி வேங்கடாசலம், சா வேங்கடேசன்,
பா செ பொன்னுசாமி, எசு இராமகிருட்டிணன்,
இரா சேகரன், தி துரைராசு, க மீனாட்சிசுந்தரம்,
பொன்னரசு, ச சுகுமாரன்,
சா வேங்கடாசலபதி, கு கௌரப்பன்,

கு முருகன், தி குப்புசாமி, இரா உவக்குமார்,
சி இராசமாணிக்கம், ச மாதவன்,
ஏ வேலுசாமி, தே நாகலிங்கம்,
இலா ச கணபதி, த பக்தபிரசாத்,
மெ கு செகதீசன்

மேலும் இவர் வழி

திரு வே தணிகாசலம்	1—11
க அருணகிரி	1—01
ம சு தாண்டமூர்த்தி	1—51
க சோதிமணி	1—06
கா தாயுமாணவன்	1—11
உலோ கேசவன்	2—82
(தலைக்கு அரை உருபா மேனி) இரா தமிழ்முரசு பாலகுமார், தி பழனிவேலு, கே தேவநாதன் மு மோகன், கெ இராகவன், த ம கந்தவேலு ந குமரன், ஆறுமுகம், இரா கேசவலு, அ தனராசு, ந சுந்தரராசு மா வரதராசன், சுமாவிராசன், சிவ சண்முகம், இரா கிருட்டிணன்	7—50
திருமதி யு சாந்தகுமாரி, காரைக்குடி	5
	105—12

(இத்தொகை முழுமையும் பாவணர்க்குப் பணவிடை வழி விடுக்கப் பெற்றது)

முன்விடுத்த தொகை	2211—04
இறுதியாக விடுத்தது	105—12
தொகுமொத்தம்	2316—16

சென்னை, பொறியியற் கல்லூரி மாணவர்கள் குறைத்து விடுத்தது	12
	2316—04

கீழ்க்காணும்தொகைகள் பாவாணர்க்கு நேரேவிடுக்கப்பெற்றன.

அழகுமலை, தென்மொழி முகவர், உசிலம்பட்டி	1—00
க உ பள்ளி, பல்லாவரம்: ந மோகன் (மாணவர்)	0—50
திரு செ அகத்தீன், வே சாமிநாதன், உலோ சுந்தர் ஆ தென்னிசன், இ க நசீமுத்தீன், சௌ விசயராகவன் (மாணவர்கள்) தலைக்கு 1 உருபா மேனி	6—00
திருவாட்டி சு முத்து இலக்குமியார் ஆசிரியை	1—00
திருவாளர் இர கோபால், க சுந்தரம், இர தேவராசன், செ பூபதி (மாணவர்கள், தலைக்கு 5 உருபா மேனி)	20—00
கோ சண்முகம் (மாணவர்)	2—00
பாவை. எழிலேந்தி, அரங்கநாதபுரம் (தெ ஆ)	5—00
	35—50

(12–ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியரே பொறுப்பாளர். பர். சேதுவோ, 'இனிமேல் அந்தப் புகைவண்டிச் சீட்டுவமையை எங்கும் சொல்லாதீர்கள்' என்று நல்லது சொல்வதுபோல் எச்சரித்தார். பர். கத்தரே என்னைப் பற்றிய கருத்தை உள்ளத்தில் மறைவாய் வைத்துக்கொண்டார்.

அன்று எற்பாடு (சாயுங்காலம்), பர். சட்டர்சியைச் சிறப்பிக்க ஒரு சிற்றுண்டி விருந்து நடந்தது. அதில் அவரைப் பாராட்டிப் பேசிய பர். சேது, அவர் தம் பெயரை 'நன்னெறி முருகன்' என்று குறிப்பிடுபவர் என்றும், தமிழ்ப்பற்று நிரம்பியவர் என்றும், சிறப்பாய்க் குறிப்பிட்டார். அதன் உட்குறிப்பு மொழி நூல்பற்றிய அவரது நடுநிலை முடிபே கொள்ளத்தக்கதென்பதும், தமிழ் வெறியால் தேவநேயன் கூறுவது தள்ளத்தக்கதென்பதுமே. 'தமிழ் கெடினும் கெடுக; தேவநேயன் பெயர் ஓங்கக்கூடா'தென்பதே அவர் குறிக்கோள்.

பர். சட்டர்சிக்குத் தமிழ் தெரியாது. அதிற் பேசவோ எழுதவோ அவருக்கு இயலாது. தமிழைப்பற்றி ஆங்கில நூல் வாயிலாகவே கற்றவர். சுநீதி குமார் சட்டர்சி என்னும் தம் பெயரின் முன்னிரு சொற்களை மட்டும் நன்னெறி முருகன் என்று மொழி பெயர்த்து, அவற்றைத் தமிழெழுத்திற் குறிக்கக் கற்றிருக்கின்றார். நெறி என்பது வழி அல்லது விதி. நீதியைக் குறிக்க அதினுஞ் சிறந்த சொற்கள் நயம், நேர்மை என்பன. குமார் என்பது குமரன் (= முருகன்) என்னும் தென் சொல்லின் திரிபே. ஆயின், முருகன் ஆரியத்தெய்வம் என்பதும், முருகன் என்பது சுப்ரமணியன் என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பென்பதும் அவர் நம்பிக்கை. தமிழை ஆங்கில வாயிலாய்க் கற்றதினால், சில தமிழ் நூற்பெயர்களைக்கூட அவர் சரியாய் ஒலிப்பதில்லை. பத்துப்பாட்டு என்பதைப் பத்துப்பத்து என்று அண்ணாமலை நகரில் ஒரு முறை படித்தார். வேறிடங்களில் பட்பட் என்றும் பட்டுப்பட்டு என்றும் படித்ததாகக் கேள்வி.

தொடக்கக் கூட்டத்திற்கு மறுநாட்காலை குழுக் கூட்டம் நடைபெற்றது. அதிற் பின்வருமாறு முடிவுகள் செய்யப்பட்டன.

1) பரோ என்னும் ஆங்கிலப் பேராசிரியரையாவது, எமனோ என்னும் அமெரிக்கப் பேராசிரியரையாவது, அ. ம. ப. க. மொழிநூல் துறைப் பேராசிரியராக அமைத்தல் வேண்டும்.

2) வாசகராகவிருக்கும் ஞா. தேவநேயனார் தாம் தொகுக்கவிருக்கும் தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலியின் போலிகையாக, முதற்கண் யாவேனும் ஐம்பது சொற்கட்கு எழுதிக் காட்டல் வேண்டும். அதற்குக் கையாளும் நெறிமுறைகளையும் குறிப்பிடல் வேண்டும்.

மக்களவை

தனித்தமிழ்க் கல்லூரியா?

அன்புள்ள ஆசிரியருக்கு, வணக்கம்.

சென்னைமாநகரில் தனித்தமிழ்க் கல்லூரியொன்று தொடங்க விருப்பதாய் நாளிதழொன்றில் வெளிவந்த செய்தியைப் படித்தேன். தமிழர் தலைநகரில் தமிழுக்கெனத் தனிக் கல்லூரி இல்லையென்ற குறைபாடு நீங்கிவிடும் என்று தொடக்கத்தில் உவந்தேன். ஆனால் அதனை முழுதும் படித்த நான் ஏமாற்றத்தையும் எரிச்சலையும் அடைந்தேன். தனித் தமிழுக்காகத் தம் வாழ்நாளைச் செலவிட்டு உயிர்ப் பாற்றலையெல்லாம் ஈந்த பாவாணர் போன்ற தமிழ்ப் பெரியார்களெல் லாரும் எங்கோ ஒடுங்கிச் சோர்ந்து கிடக்க, தனித் தமிழின் மெய்ம் மையையே விளங்கிக்கொள்ளாத இவர்கள் எப்படித் தனித்தமிழ்க் கல்லூரிகாண முன்வந்தனர் என்று விளங்கவில்லை. தத்தம் பெயரோடு தம் 'சாதி'ப் பெயர்களையும் கொட்டை எழுத்துகளில் ஒட்டவைத்துக் கொண்டுள்ள இவர்கள் வளர்க்கப் போவது தனித் தமிழையா? குலத்

(முன் பக்கத் தொடர்ச்சி.)

3) தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான் மொழிக்கும் ஒவ்வொரு விரிவுரையாளரை அமர்த்தல் வேண்டும்

4) கழக (சங்க) இலக்கியத்தை ஒவ்வொரு நூலாக ஆங்கிலத் தில் மொழி பெயர்த்தும் வரி பெயர்த்தும், பொருளும் மொழி யமைதியும் அயலார்க்கு விளங்குமாறு வெளியிடுதல் வேண்டும்.

5) செந்தமிழ் × கொடுந்தமிழ், இலக்கிய மொழி × வழக்கு மொழி, ஆகிய நடைமொழிகளையும் வேறுபடுத்திக்காட்டல் வேண்டும்.

அடுத்து வருவது 'பணி செயற் படலம்'–2-ஆம் பகுதி.

குறிப்பு:– இதற்கு முந்திய கட்டுரை முழுதும் நினைவிலிருந் தெழுதியதால், குழுவமைப்பும் அதன் உறுப்பாண் மையும் பற்றிய சில செய்திகள் பிறழக் கூறப்பட்டுள் ளன. இக் கட்டுரையிற் கூறப்பட்டுள்ளனவே சரி யெனக் கொள்க.

*

தமிழையா? தமிழரை மடமைச் சேற்றில் அமிழ்த்துவதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருக்கும் இவர்கள், தமிழ்ப் பண்பாட்டின் புல்லுருவிகள் தாமே என்பதை மறந்து, தனித்தமிழ் வளர்க்கப் போகிறோம் என்று நாப்பறை சாற்றி நகர்வலம் தொடங்கிவிட்டதை நினைத்து உண்மைத் தமிழன்பர்களின் நெஞ்சம் குமுறுகிறது. உண்மையில் இவர்கள் தனித் தமிழ் விரும்பிகள்தாம் என்றால், தங்களின் தலைகளோடு ஒட்ட வைத்துக்கொண்டிருக்கும் 'சாதி'ப் பட்டங்களை அறுத் தெறிந்துவிட்டுத், தனித்தமிழ் புரக்கும் மெய்ம்மையாளர்களைக்கலந்துகொண்டு,தங்களின் திட்டத்தைச் செயலாக்க முன்வரலாமே? தனித் தமிழின் தன்மையைப் பற்றியே கவலைப் படாது, தங்களின் பெயர்களையே பறைசாற்றிக் கொள்ள வந்துள்ள இவர்களின் முயற்சி முழுவெற்றி யளிக்கும் என்று என்னால் கருத முடியவில்லை.

அன்பன்,

மகிபை. பாவிசைக்கோ, சென்னை ௧.

மருத்துவத்துறைக் கவனிக்குமா?

தென்னார்க்காடு மாவட்டத்தின் தலைமை மருத்துவ மனையான கடலூர் அரசினர் மருத்துவ மனையின் சீர்கேடுகள் சொல்லி முடியா. வான் முட்டும் மருத்துவ மனையின் தோற்றத்திற்கேற்ப அதன் நடவடிக்கைகளும் இருக்கும் என்று அரசினர் கருதியிருக்கலாம். ஆனால் இங்கே நோயாளிகளுக்கு ஏற்ற மருந்தோ, அதனைக்கொடுத்து அவர்களைப் பேணும் நல்ல மருத்துவரோ இல்லை. எந்த ஒரு நோயாளி யும் இந்த மருத்துவ மனைக்குச் செல்லவே அஞ்சுகின்றார். அவ் வளவு கடுபிடி! குறிப்பாக எங்கள் ஊரைச் சேர்ந்த மக்களில் 99 விழுக் காட்டினர் புதுவை மாநிலத்தில் உள்ள "கிருமாம்பாக்கம்" மருத்துவ மனைக்கே சென்று வருகின்றனர். இரண்டு கற்கள் தொலைவிலேயே அரசினரின் பெரிய மருத்துவ மனையிருக்க, ஏறத்தாழ பத்து கற்கள் தொலைவிலுள்ள புதுவை மாநிலத்தில் உள்ள கிருமாம்பாக்கம் போன்ற இடங்களுக்குச் சென்று நோயைத் தீர்த்துவருவது மிகவும் வருந்தத் தக்கது. கட்டடங்களை மட்டும் பேரளவில் சிறப்பாகக் கட்டினால் போதாது. நோயாளிகளைக் கவனித்து அன்புடன் பேணும் மருத்துவர் களும் அங்கிருத்தல் வேண்டும். அவர்களுக்குத்தக்க மருந்துகளும் கிடைத்தல் வேண்டும். இதுபற்றி ஆவன செய்ய மருத்துவத்துறை அமைச்சர் முன்வரும்படி வேண்டிக்கொள்கின்றேன்.

அன்புள்ள

கு. சிவநாயகம், பாதிரிக்குப்பம்.

பாவாணர் பொருட்கொடைத் திட்டம்.

தென்மொழியின் பொருட்கொடைத் திட்டம் முடிவுற்றதால், இனிப் பாவாணர்க்கு விடுகக விரும்பும் அன்பளிப்பை நேரே கீழ்க்காணும் முகவரிக்கு விடுக்க வேண்டுகிறோம். திரு. ஞா. தேவநேயப் பாவாணர். ஆ. 959. 5–ஆம் மேற்குக் குறுக்குச் சாலை காட்டுப்பாடி விரிவு (அஞ்) . வ. ஆ. (ஆ–ர்.)